பக்கங்கள்: இருபத்தினான்கு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 7 வெள்ளிக்கிழமை (21.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 176

யுத்தம் முடிவுற்றது மே 18 இல் அல்ல 19 ஆம் திகதியே

போர்க் குற்றம் செய்த எவரையும் காப்பாற்றும் தேவை எனக்கில்லை

சனல் - 4 வீடியோ குறித்து விசாரிக்க வேண்டும்

கொழும்பு,மே21

★ போர்க் குற்றம் செய்த எவரையும் காப்பாற்றும் தேவை எனக்கு இல்லை. போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பாகவும், சனல் - 4வீடியோக் காட்சி தொடர்பாகவும் அரசு விசாரித்துப் பார்க்க வேண்டும். இது விடயம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரிந்தால் வெளிப்படுத்துவேன்.

★ கடந்த வருடம் மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவடைந்துவிட்டதாக, ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் அறிவித்த வேளை அது முடிவடைந்திருக்கவே இல்லை. உண்மையில் அதற்கு அடுத்த நாள் - மே 19 ஆம் திகதியே - யுத்தம் முழுமையாக முடிவுக்கு வந்தது. அன்று முற்பகல் 9.30 மணிக்குத் தான் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார். (24 ஆம் பக்கம் பார்க்க)

நாட்டில் 117 ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, மே 21

நாட்டில் பிரதான வழி, கடலோர வழி, மற்றும் புத்தளம் வழி ஆகியவற்றில் ஓட வேண்டிய 117 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வழிகளில் நாளாந்தம் 350 ரயில் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பும் வெள்ளத்தின் காரணமாக அவற்றுள்

(24 ஆம் பக்கம் பார்க்க)

'சனல் - 4' வீடியோ விவகாரம்; அரசு அலட்டிக்கொள்ளாது

எல்லாம் பொய் என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, மே 21

இலங்கையில் யுத்தக்குற்றம் தொடர்பாக பிரிட்டனின் 'சனல் - 4' தொலைக்காட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒளிபரப்பப்பட்ட வீடியோக் காட்சி குறித்து அரசு ஒருபோதும் அலட்டிக்கொள்ளப் போவதில்லை எனத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். இலங்கை அரசுக்கு அவதூறை ஏற்படுத்துவதற்காக 'சனல் - 4' தொலைக்காட்சி பொய்க்குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

'சனல் - 4' புதிய நிகழ்ச்சி குறித்து அரசின் நிலைப்பாடு என்னவென்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த வருடமும் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் 'சனல் - 4' தொலைக் காட்சி வீடியோ காட்சி ஒன்றை ஒளிபரப்பியது. அந்தக் காட்சி முற்றிலும் பொய்யானது என விஞ்ஞான ரீதியிலான பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டது. அந்தத் தொலைக் காட்சிச் சேவைக்கு எதிராக எமது அரசு சவால் விடுத்தது.

எனினும், இதுவரை அந்த தொலைக் காட்

(24 ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டுப் பயணத்தை ரத்துச் செய்ய அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே 21

அனைத்து வெளிநாட்டுப் பயணங்களையும் உடனடியாக ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே வெளிநாட்டுப் பயணங்களை ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில்

யாழ்.மேயரையும் அவரது செயலரையும் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், மே 21

நீதிமன்றத்தை அவமதித்ததாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக யாழ். நகர மேயர் திருமதி ப.யோகேஸ்வரி, மேயரின் செயலாளர் கு.பற்குணராஜா ஆகியோரை இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு யாழ். குற்றப்புலனாய் வுப் பொலிஸாருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரித்தமை தொடர்பாக யாழ். குற்றத் தடுப் புப்பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வந்த விசாரணைகள் குறித்த அறிக்கை யாழ்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

தடுத்து வைக்கப்பட்டுள்ள புலி உறுப்பினரை பார்வையிட அனுமதி கோருகிறது ஐ.சி.ஆர்.சி

கொழும்பு, மே 21

வவுனியாவில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புனர்வாழ்வு முகாம்களுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்குமாறு செஞ்சிலுவை சர்வதேசக்குழு இலங்கை அரசைக் கோரியுள்ளது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் தலைவர் ஜகோப் கெலென் பேர்ஹர் பி.பி.ஸிக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

செஞ்சிலுவை சர்வதேசக் குழு இலங்கை அரசிடம் இரு வேண்டுகோள்களை விடுத்துள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஜூன் 15 இல் அமெரிக்கா அறிக்கை

கொழும்பு, மே 21

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து அமெரிக்காவின் யுத்தக் குற்றங்களுக்காக தூதுவர் ஸ்டீபன் ரெப் அடுத்தமாதம் 16ஆம் திகதி தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார் என 'ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை மீது இன்னமும் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் அமெரிக்கா உள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக அமெரிக்கா விளங்குகிறது.

மேலும் 'சர்வதேச நெருக்கடிக் குழு' தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இருவரையும் விசாரிப்பதற்கான நியாயாதிக்கம் அமெரிக்காவுக்கு உள்ளது.

இருவரையும் அமெரிக்க அதிகாரிகள் கடந்த வருடம் விசாரணை செய்தனர்.

எனினும், இதன்மூலம் சிறிய இரா

(24 ஆம் பக்கம் பார்க்க)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்!

கொழும்பு, மே 21

கொழும்பு, வோர்ட் பிளேஸில் அமைந்துள்ள பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் தண்ணீரைப் பீய்ச்சியடித்தனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவுக்கு முன்னால் பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆணைக்குழுக் கட்டட வளாகத்துக்குள் நுழைய முற்பட்ட மேற்படி மாணவர்களை பொலிஸார் தடுத்து

(24 ஆம் பக்கம் பார்க்க)

'லைலா' புயலின் தாக்கம் குடாநாட்டில் நீடிக்கும் சாத்தியம்

யாழ்ப்பாணம், மே 21

வங்கக் கடலில் உருவாகியுள்ள "லைலா" புயலின் தாக்கம் குடாநாட்டில் தொடர்ந்து நீடிக்கும் சாத்தியம் காணப்படுவதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலை

இது தொடர்பாக யாழ். வானிலை ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி வே.புஸ்பநாதன் தெரிவித்திருப்பதாவது:

இந்த மாத் நடுப்பகுதியில் ஆரம்பிக்கும் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் மே மாத மூன்றாம் வாரத்தை சோக நாள்களாக அனைவரும் அனுஷ்டிப்போம்

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி அழைப்பு

யாழ்ப்பாணம், மே 21

உலகெங்கும் வாழும் தமிழர்கள் இன்றுமுதல், இனிவரும் ஒவ்வொரு வருட மே மாதத்தின் மூன்றாவது வாரத்தை சோகவாரமாகப் பிரகடனம் செய்து துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என அர்ப்பணித்த ஆன்மாக்களின் பெயரால் வேண்டுகிறேன்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

இலங்கையில் கடந்த 3, 4 தசாப்தகாலமாக நடைபெற்ற யுத்தம் கடந்த வருடம் மே மாதம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதாகவும், அதனுடைய ஓராண்டுப் பூர்த்தியை வெற்றி விழாவாகக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தமையும் யாவரும் அறிந்ததே.

குறிப்பாகக் கடந்த வருடம் (2009) மே மாதத்தில் மட்டும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டனர், தாய், தந்தை, குழந்தை, முதியோர் முதலான உறவுகளின் இழப்புக்கள் இப்பிறவியில் இனிமேல் யாரா லும் ஈடுசெய்யப்பட முடியாதவை. ஈனக் குரலெடுத்து உருகிக் கதறியும் பயனில்லை. காற்றோடு காற்றாய், மண்ணோடு மண்ணாய் அவர்களை மரணம் முத்தமிட்ட செய்தியது.

இழந்த உறவுகளுக்கு ஈகைச்சுடர் கூட ஏற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் எஞ்சிய உறவுகள் துடிக்கின்றன. ஆத்ம சாந்திக் கிரியைகள் செய்வதற்குக் கூட இழந்த உறவுகளின் உருவப்படங்கள் ஏதுமின்றி அடையாள அட்டையை வைத்துக் கிரியை செய்யும் துர்ப்பாக்கிய நிலையில் ஒன்று. பிரிந்த உறவு மீண்டும் வருமோ அல்லது மரணத்தைத் தழுவியதோ என இன்னமும் முடிவு தெரியாமல் காலத்தின் பிடியில் அல்லது காலனவன் விதியில் நொந்து விம்புகின்றது மற்றொன்று. உறவை இழந்த காலம் நேரம் தெரியாமல் உரிய கடமை செய்ய முடியாமல் திதி ஏதும் தெரியாமல் விதி செய்த வினையால் விழிநீர் சொரிகிறது மற்றொன்று.

இனப்படுகொலையின் விழாவை எப் படிக் கூறுவது?

மரண ஓலம் என்பதற்கு வரைவிலக்கணம் கொடுத்ததுபோல் கடந்த வருடமே மாதம் 16, 17ஆம் திகதிய மனித ஓலங்கள் - மனித வரலாற்றில் என்றுமே காணாத மாபெரும் அவலங்களை அரங்கேற்றின. இதனை இனப்படுகொலை என்று கூறா மல் வேறு எவ்வாறு கூறமுடியும்?

40ஆயிரம் மனித உயிர்களைக் காவு கொண்ட தமிழின அழிப்பின் பெயர் யுத்த வெற்றியாம். அதன் பெயரில் கடந்த வருடம் மே மாதம் வெடி கொளுத்தியது ஒரு கூட்டம். பாற்சோறும் சிற்றுண்டியும் கொடுத்துக் கொண்டாடியது இன்னொரு கூட்டம். உரத்துச் சத்தமிட்டு ஊர்வலம் சென்று எம் உணர்வுகளைக் கொதிக்க வைத்தது இன்னொரு கூட்டம். ஓர் இனத்திற்கு உண்பதற்கு உணவு இல்லை, உறைவதற்கு வீடு இல்லை, உடுப்பதற்கு உடை இல்லை, நோய்க்கு மருந்து இல்லை இந்த விளைவுகள் தான் சுதந்திரமாம். விடுதலையாம். கொட்டும்மழையில்குடையாலேவழிந்த நீரெடுத்து குடல் நனையவிட்ட சோகத்தை வார்த்தையில் வர்ணிக்க முடியுமோ? இது தான் யுத்த வெற்றியோ?

இழந்தவை இழந்தவைதான், இனிமேலாவது எஞ்சியிருப்பது இன்ன வழி என்று சிந்திப்பதற்கு முன் அவர்கள் விதி 3 இலட்சம் மக்கள் முள்கம்பி வேலிகளுக்குள் மிருகங்களைப் போல் அடைக்கப்பட்டனர். தாய் எங்கே? தந்தை எங்கே? சகோதரம் எங்கே என்று யார் அறிவார்? தமிழன் என்ற சொல் அகதியானது - அகதி என்ற சொல் தமிழனானது. அடிமை வாழ்வும், அகதி வாழ்வுமே தமிழரது வாழ்க்கைத் தரங்களோ என எண்ணும் போது எங்கள் விழிகளில் நீர் வழிகிறது.

ஒரு வருடம் முடிந்த பின் ஆண்டுத் திவசம் செய்ய முடியாத நிலையிலும் பிரிந்த உறவுகள் மீண்டும் வருமா அல்லது இழந்த உறவாகியதோ எனத்தெரியாத நிலையிலும் இன்னும் பலர் கைது செய்யப்பட்டு இடம் தெரியாமல் மறைத்து அடைத்து வைக்கப் பட்டிருக்கும் நிலையில் யுத்த வெற்றியின் ஒரு வருடப் பூர்த்தி விழாவாம்! இதனை எண்ணும்போது உரோமபுரி நகரம் தீப் பிடித்து எரிந்து கொண்டிருக்கும்போது நியூரோ மன்னன் அரண்மனையினுள் இருந்து பிடில் வாசித்துக் கொண்டிருந் தான் என்ற உரோமபுரி வரலாற்று நிகழ்வு ஞாபகத்திற்கு வருகின்றது.

கனவுகள் களியாட்டங்கள் கலைக்கப்பட்டன

இறந்த உறவுகளுக்கு ஒரு வருட முடிவில் இயற்கை அன்னை ஈர்ந்த கண்ணீராலேயே இவர்களது களியாட்டக் கனவுகள் கலைக்கப்பட்டதைக் கண்டோம். பிரமாண்டமான அளவில் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்த வேளையில் இயற்கை அன்னையே இவர்களுக்கு இடித்து உரைத் திருக்கிறாள். இவையெல்லாம் இவர்களுக்கு விளங்குமோ?

நாம் அனைவருமே ஒவ்வோர் தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளே! எங்கள் பிள்ளைகள் உணவு, உறையுள், கல்வி ஏதுமின்றி நடுத்தெருவில் நின்று கதறும் போது நீங்கள் கொண்டாட்டங்களுக்கு ஏற் பாடு செய்வது எவ்வகையில் ஏற்புடையது? உங்கள் பிள்ளைகளைக் கற்பனையில் கூட இந்நிலையில் வைத்துப் பார்க்க உங்களால் முடியுமா?

ஆதலால் இந்நாட்டுத் தமிழ்க்குடிமகன் என்ற முறையிலும் தமிழர்கள் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் என்ற கோதாவிலும் மிக உருக்கமாக வேண்டுகின்றேன். எம் இனத்தின் விடுதலைக்காய் தங்கள் உன்னத உயிர்களைத் தியாகம் செய்த அனைத்து உள்ளங்களையும் மதியுங்கள். உயிர்களின் பெறுமதியைப் போற்றுங்கள். எந்தவொரு நாட்டிலும் அந்த நாட்டுக்காய் உயிர் நீத்தவர்களைப் போற்றுவது மக்களின் கடமையும் மரபுமாகும். யுத்தத்தில் உயிர் நீத்த படையினருக்கு அஞ்சலி செய்து கௌரவிக்கும் அதேவேளை எம்மின விடுதலைக்காய் மரணித்த எம்மவர்களின் கல்லறைகள் சல்லடை போடப்பட்டன. இது ஏன்? தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் மதித்துப் போற்றுங்கள்.

அஞ்சலி செலுத்த வழி விடுங்கள்

ஆதலால் துன்பக்கடலில் துடுப்பு ஏதுமின்றி துயருற்றிருக்கும் தமிழர்களை ஆதரியுங்கள். தமிழர்களாகிய நாங்களும் இந் நாட்டுப் பிரஜைகளே. இழந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்த வழிவிடுங்கள். மாறாக வெற்றிக் கொண்டாட்டங்கள் மூலம் எம் உணர்வுகளைக் கிழித்து அர்ப் பணிக்கப்பட்ட ஆருயிர்களையும் இழப்புக் களைச் சந்தித்த ஈனத் தமிழ் உள்ளங்களை யும் அவமரியாதை செய்யாதீர்கள் என மிக உருக்கமாக வேண்டுகின்றேன்.

மேலும் உலகனைத்தும் வாழும் தமிழர் கள் யாவரும் இன்று முதல் இனி வரும் ஒவ்வொரு வருட மே மாதம் 3 ஆவது வாரத்தைச் சோக வாரமாகப் பிரகட னம் செய்து துக்கம் அனுஷ்டிக்க வேண்டு மென அர்ப்பணித்த ஆன்மாக்களின் பெயரால் மன்றாட்டமாக வேண்டுகின்றேன் - என்றுள்ளது. (ஒ-1)

15 வருடங்களின் பின்னர் மணிப்புரி, வசந்தபுரம் கிராமங்களுக்குச் செல்ல மக்களுக்கு வாய்ப்பு

கொழும்புத்துறை, மே 20

உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து வந்த மணிப்புரி, வசந்தபுரம் கிராமங்களுக்குச் சென்றுவர அண்மையில் அனுமதித் ததையடுத்து அங்கு வசித்த மக்கள் காணி களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 15 வருடங்களின் பின்னர் தமது கிராமங்களுக்குச் செல்ல வாய்ப்புக் கிடைத் திருப்பதாகவும்; அநேக வீடுகள் அழிவடைந்த நிலையில் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது காணிகளின் எல்லைகளைக் கண்டுபிடிப்பதே சிரமமாக உள்ளதாகவும் விரைவில் தாம் சொந்த வீடுகளுக்குக் குடியேற ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின் றனர்.

இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந் தவர்கள் தற்போது வாடகை வீடுகளிலும், நண்பர்கள், உறவினர்களுடனும் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

கிறிஸ்த சேவ ஆச்சிரமம், மருதனார்மடம்

தூய ஆவியானவரின் திருவிழா - 2010

நிகழ்ச்சி நிரல்

காலம்: 21,22,23 - 05 - 2010

★ 21.05.2010 மாலை 4.30 மணி

நற்செய்திக் கூட்டம் - அருட்சகோதரன் செ.யே. லக்சன்

★22.05.2010: காலை 6.30 மணிக்கு

தூயநற்கருணை திருவழிபாடு அருட்பணி ரி.கிறிஸ்ரிகுமார்

காலை 8 மணிக்கு - காலை உணவு

காலை9மணிக்கு -தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதனின் செயற்பாடுகள் அருளுரை - அருட்பணி அ.ஸ்ரீபன்

மதியம் 12.30 - 1 மணிவரை - மக்கள் மன்றாடல்

பிற்பகல் ஒரு மணிக்கு - மதியஉணவு

மாலை 3 மணிக்கு: தூய ஆவியின் அருட்கொடைகள் கதாப்பிரசங்கம். அருட்பணி கலைமாமணி ரி.எஸ்.யோசுவா

★23.05.2010 காலை 6.30 மணிக்கு -

தூய நற்கருணைதிருவழிபாடு - அருட்பணி தேவ.அருட்செல்வம்

மாலை 2.30 மணிக்கு - நவீன் பாடசாலை சமூகத்தினரும், ஆச்சிரம ஓய்வுநாள் பாடசாலை சமூகத்தினரும் வழங்கும் கலை நிகழ்ச்சி எவ்வாறு நடைபெறும்.

இந்த நாள்களில் நாம் காத்திருந்து தூய ஆவியின் பலத்தைப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

ஆச்சிரமப் பணியில்

அருட்சகோதரன் செ.யே.லக்சன்

(98436)

மாகாணமட்ட தமிழ்த் தினப் போட்டிகள்; 29 ஆம், 30 ஆம் திகதிகளில் வேம்படியில்

யாழ்ப்பாணம், மே 21

மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி கள் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதி களில் வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலையில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் மாவட்டமட்டப் போட் டியில் முதலிடம் பெற்றவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

29 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறும் தனிநிகழ்ச்சிகள், நாட்டுக்கூத்துப் போட்டிகள், இசை (குழு), நடனம் (குழு) என்பவற்றில் பங்கு கொள்பவர்கள் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பி.ப3 மணிக்கு பதிவுகளை மேற்கொள்ளவும்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் நாடகம், வில்லுப் பாட்டு, நாட்டார் பாடல், முஸ்லிம் நிகழ்ச்சி, தமிழறிவு வினாவிடை சிங்கள மாண வருக்கான தமிழ்வாசிப்பு சிங்கள மாண வர்களுக்கான பேச்சு, விவாதம் என்பவற்றுடன் பி.ப 2 மணிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் 29ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட மட்ட தமிழ் மொழித் தினக்குழு தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6)

ஜொலிஸ்ரார் சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்திவரும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

நாளைய ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

- காலை 8.30 மணி - நியூ ஸ்ரார் வி.க. எதிர் மானிப்பாய் பரீஸ் வி.க.
- மதியம் ஒரு மணி - ஸ்ரான்லி வி.க. எதிர் வளர்மதி வி.க. (1-23)

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி துரைராசா

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரம் நடராசா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராசா நேற்று (20.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும், ரஜனி, ரமேஸ்வரன் (அமரர்), ராகினி, சுரேந்திரன், சுலோசினி ஆகியோரின் அன்புத் தந்தையும், புலேந்திரன், ஜெயகாந்தன், மளாயினி, கண்ணன் ஆகியோரின் மாமனாரும், இராசரத்தினம், கனகசிங்கம், இராஜேஸ் வரி, நவமலர், நாகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுரேந்திரன்
(சுதா - மகன்).

வேலணை மேற்கு.
தொ.பே. 0774934489, 0214920892

CISCO Training Centre at Jaffna

JOB (Earn Rs.75,000/-)

CCNP

CCNA

A/L & O/L

JOB (Rs.20,000/- as a trainee)

CCNA® CCNP®

For Class schedule Please Call 0772 395 895

Benefits

சட்ட ரீதியாக அவுஸ்திரேலியா,அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு குடியேறுவதற்கான தகைமை.

வெளிநாடுகளில் இத்தகைமைக்கான சராசரி ஊதிய மதிப்பீடு 5000$

நீங்களும் ஓர் CISCO NETWORK ENGINEER

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே)

Hello: 0772395895, 0718475501

web: www.mcsitcampus.org

Bus Route 764

பதிவுகள் 25-05-2010 இற்கு முன்

Endorsed by UNDP/JRRP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

இன்னும் சில மாதங்களில் என்னாகுமோ...?

இயற்கை அன்னை கடந்த நான்கு, ஐந்து நாள்களாக, தனது சீற்றத்தைப் பெரிய அளவில் தென் மாவட்டங்களில் கொட்டித் தீர்த்திருக்கிறாள். நான்கு ஐந்து நாள்களாக பெருமழையைச் சுரந்து மக்களை வெதும்ப வைத்திருக்கிறாள். குறிப்பாக மக்கள் மிக நெருக்கமாக வாழும் தலைநகர் கொழும்பின் தாழ்ந்த பிரதேசங்களில், வசதி குறைந்தவர்கள் வசிக்கும் பகுதிகளைப் பதம்பார்த்திருக்கிறாள் என்பது தகவல்.

வெள்ள அனர்த்தத்தால், 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தையும் அதனை அண்டியுள்ள கம்பஹா மாவட்டத்தையும் மிகப் பெரிய அளவில் வெள்ளப்பெருக்குப் பாதித்திருக்கிறது. மிகக் குறிப்பாக தாழ்ந்த பிரதேசங்களில் வசிக்கும் வசதிகுறைந்த மக்களே பெரிய எண்ணிக்கையில் பாதிப்புற்றுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக வெள்ள அனர்த்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் நாட்டைப் பாதிக்கும் போதெல்லாம் அவ்வாறு மீண்டும் ஏற்படாமல் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவ்வப்போது ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் அமைச்சர்கள், அதில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள் அளிக்கும் உறுதிமொழிகள் மலிந்துவிடும். ஆனால் அவை சில நாள்களில் காற்றோடு காற்றாகக் கலந்து மறைந்துவிடும் என்பது வேறு!

மேலும் இயற்கையின் மற்றொரு அனர்த்தத்தி னால் மக்கள் பாதிக்கப்படும்வரை மக்களின் கஷ்டங்களை நீக்க எதுவுமே உருப்படியாகச் செய்யப்பட்டி ருக்காது! பதிலாக, அரசாங்கத் தரப்பினரதும் ஏனைய அரசியல்வாதிகளினதும், அரசியலுக்குள் காலைப் புதைத்துக்கொள்ள விரும்பும் பிரகிருதிகளினதும் ஒப்பேறா உறுதிமொழிகள் 'கீறல் விழுந்த றெக்கோட்டு'களாக ஒலிக்கும்!

இன்று நேற்றல்ல, கடந்த பல தசாப்தங்களாக இந்தச் சின்னத்தனம் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

மக்கள் கஷ்டப்படும்போது ஆஹா ஊஹா என்று அழுதுபுலம்பும் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் பின்னர் தமது வசதிகளைப் பெருக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது இலங்கையின் எல்லாப் பிரதேசங்களுக்கும் பொதுவானதுதான்.

ஆனால் தென்மாகாணங்களில் இவ்வாரம் இடம் பெற்ற வெள்ள அனர்த்தத்தின்போது, தலைநகர் கொழும்பில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறவோ அல்லது அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று "எட்டிப் பார்க்கவோ" அரச தரப்பு அரசியல்வாதிகள் நினைக்கவில்லை.

இந்த தற்குறித்தனத்தை நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தியிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா.

கடந்த ஐந்து தினங்களாக அடைமழையினாலும் வெள்ளப்பெருக்கினாலும் மக்கள் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருக்க, சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள் எவரும் திரும்பியும் பார்க்கவில்லை என்று கருணாநாயக்கா கவலை தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு மாவட்டத்திலும், கம்பஹா மாவட்டத்திலும் அடைமழை காரணமாக உண்டான பாதிப்புகளை நாடாளுமன்றத்தில் கவலையுடன் எண்ணிக்கைக் கணக்குகளுடாக விவரித்து விரித்துக் காட்டியுள்ளார் ரவி கருணாநாயக்கா.

நிறைவேற்று அதிகாரத்தையும் அதிக எண்ணிக்கையான அமைச்சர்களையும் கொண்டுள்ள அரசாங்கம், எந்த உதவிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்யவில்லை என்று வெதும்பினார். அமைச்சர்கள் எவரும் இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களைச் சென்று பார்க்கவுமில்லை, ஒரு சாப்பாட்டுப் பார்சலைத்தானும் வழங்கவுமில்லை. அவ்வாறு செய்யக் கூடிய நிலையிலும் இல்லை என்று நாடாளுமன்றில் புட்டுக்காட்டினார்.

தேர்தலில் வென்றாச்சு; அரசாங்கமும் அமைச்சர் பதவிகளும் ஆறு வருடங்களுக்கு அசைக்க முடியாத வையாச்சு. நாம் இனி செய்வதை பொதுமக்கள் கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும் இருக்கவேண்டியதுதான் என்ற மெத்தனப்போக்கை சுமார் ஒரு மாதத்துக்குள்ளேயே 'அதீத பெரும்பான்மை'ப் பலம் அமைச்சர்களுக்கும் அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுத்திருக்கவேண்டும்!

அனர்த்தங்களால் பாதிப்புறுவோருக்கும், நலிந்த வகுப்பினருக்கும் உதவுவது என்பது மனிதாபிமானம். அரசியலுக்கு அப்பாற்பட்டது. அவ்வாறு இருக்க அரசின் அதிகாரம் உள்ள பிரதிநிதிகள், அமைச்சர்கள் அவர்களுக்கு, பாதிக்கப்பட்டோருக்கு நேரில் ஆறுதல் கூறவும் எண்ணவில்லை. இது அவர்களின் அரசியல் பலவீனமா அல்லது அரசாங்கத்தின் நிதிப் பலவீனமா என்பது முக்கியமான ஒரு கேள்வியாகிறது.

இப்போதே இந்த இலட்சணமென்றால் நாள்கள் நகர நகர, மாதங்கள் அசைய அசைய மக்களின் வாழ்க்கை நிலை என்னவாகப் போகிறதோ?

சில நாள்களுக்கு முன்னர் இப்பத்தியில் சுட்டிக் காட்டியதுபோன்று, சர்வதேச நாணய நிதியம், உலக அரசுகள் நிதிவிடயத்தில் தங்கள் கையை விட்டால், இந்நாட்டு அரசுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் அதோ கதியாகி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பசி, பஞ்சம், பட்டினி அவர்களை வாட்டி வதைக்க நிரப்பவும் இட முண்டு. யாரறிவார்?

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தோர் சாரதி அனுமதிப்பத்திரம் பெற ஆர்வம்

எழுத்துப் பரீட்சையில் பெரும்பாலானவர்கள் சித்தி

யாழ்ப்பாணம்,மே21

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சைகள் கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றன.

இப்பரீட்சைக்கு சுமார் 133பேர் அழைக்கப்பட்டிருந்தனர். எனினும் இவர்களில் 85பேர் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 57பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான செய்முறைப் பரீட்சைள் இன்னும் மூன்று மாதங்களின் பின்னர் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன எனவும், நீண்டகாலத்தின் பின்னர் பெப்ரவரி மாதம் நடைபெற்ற எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சித்தியடைந்தவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகளின் திகதிகள் வெகுவிரைவில் அறிவிக்கப்படுமெனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-16)

காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் வீதிமறியற் போராட்டம் வவுனியாவில்

யாழ்ப்பாணம், மே21

காணாமற் போனோரைத் தேடியறியும் குழுவினர் ஏற்பாடு செய்துள்ள வீதி மறியற் போராட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

இந்த மறியற் போராட்டத்தில் காணாமற்போனவர்களினதும், அரசியல் கைதிகளினதும் பெற்றோர், உறவினர்களை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெற ஏற்பாடாகியிருந்ததும், பின்னர் மோசமான காலநிலையால் ஒத்திவைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நடைபெறவிருந்த மறியல் போராட்டத்தில் தென்னிலங்கையில் இருந்தும் பலர் கலந்துகொள்ள இருந்த போதும் போராட்ட தினம் பிற்போடப்பட்டதால் அவர்கள் கலந்துகொள்ள வில்லை என்றும் காணாமற்போனோரைத் தேடியறியும் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-10)

ஒற்றுமையை வளர்ப்பதற்காக யாழ்.நகரில் வெசாக் பெருவிழா

படைத்தலைமையகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே21

பல்வேறு இனமக்கள் மத்தியில் பரஸ்பர நல்லுணர்வையும் ஒற்றுமையையும் வளர்த்தெடுக்கும் எண்ணத்தில் யாழ்.பாதுகாப்புப் படை தலைமையகம் யாழ்ப்பாண நகரில் வெசாக் பெருவிழா ஒன்றினை வரும் 27ஆம் 28ஆம் 29ஆம் 30 ஆம் திகதிகளில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

யாழ்ப்பாணம் கோட்டை, நூலகம் மற்றும் துரையப்பா விளையாட்டரங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய 'வெசாக் வலய' பகுதியில் அழகான பந்தல்கள், விசாலமான வெசாக் கூடுகள் மற்றும் தான சாலைகள் அமைக்கப்படுகின்றன. இந்தத் தான சாலைகளில் இலவசமாக உணவு கள் வழங்கப்படும். பக்தி கீதங்களும் இசைக்கப்படும்.

பாதுகாப்பு தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ப)

சாவகச்சேரி வைத்தியசாலையின் 'எக்ஸ்றே' பிரிவுக்குக் குளிரூட்டிகள்

யாழ்ப்பாணம்,மே21

கொமஷல் வங்கியின் சமூக பொறுப்பு நிதியத்தினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை 'எக்ஸ்றே' சிகிச்சைப் பிரிவில் பொருத்தப்பட்ட குளிரூட்டிகள் கடந்த 18 ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளன.

வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் குளிரூட்டிக்கான பொத்தானை இயக்கி ஆரம்பித்து வைத்தார்.

மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வங்கி உத்தியோகத்தர்கள் வைத்திய சாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (50-207)

போரினால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

வடமாகாணப் பிரதிப் பிரதம செயலர் தகவல்

யாழ்ப்பாணம்,மே 21

போரினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி அவர்களில் 62 பேருக்குப் படகுகளும், வலைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுதவிர கடற்றொழிலாளர்கள் சங்கங்களுக்கு இலகு ரக வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகவலை வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் இராஜநாயகம் தெரிவித்தார். கூட்டுறவுத்துறை மீள் உருவாக்கம் தொடர்பான பயிற்சிப் பட்டறை வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட யுத்தம் காரணமாக ஏராளமானோர் தாம் காலம் காலமாகச் செய்து வந்த தொழில்முறை நுணுக்கங்களைக் கூட மறந்துவிட்டனர். அத்துடன் போரின் போது எல்லாவற்றையும் அவர்கள் இழந்து விட்டதால் அவர்களின் தொழில் முயற்சிகளுக்குரிய உபகரணங்களையும் வழங்க வேண்டியிருக்கிறது.

வன்னிப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு கடற்றொழிலாளர்களுக்கு பெருமளவு மீன்கள் பிடிபட்ட போதும் உரிய சந்தை வாய்ப்புக்கள் இன்மையால் போதிய இலாபத்தை ஈட்ட முடியவில்லை. தென்னிலங்கை வியாபாரிகள் இவர்களிடம் ஒரு கிலோ மீனை 20 ரூபா வீதம் வாங்கி, வவுனியாவில் அதனைக் கிலோ 240 ரூபா வீதம் விற்று வந்தனர். இந்நிலையில் மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்களும், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு வசதியாகச் சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளதால் கடற்றொழிலாளர்களே தூர இடங்களுக்குச் சென்று விற்பனையில் ஈடுபட்டு அதிக லாபத்தைச் சம்பாதிக்க முடிகின்றது - என்றார்.

(எ-224)

நாளை

வைகாசி 8	22.05.2010 சனிக்கிழமை
திதி	: நவமி பி.ப.02.191 வரை
நட்சத்திரம்	: பூரம் பி.பி4.52 வரை
சுபநேரம்	: 02.52 - 04.22
ராகுகாலம்	: 08.52 - 10.22

குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.குடாநாட்டில் குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடும், பற்றாக்குறையும் நிலவி வருகின்றது.

எஸ்.எம்.ஏ. பால்மா வகைகளுக்கே கடும் தட்டுப்பாடு நிலவுவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பால்மா வகைகளைப் பெறுவதில் மக்கள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர். (50-224)

வடமராட்சியில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,மே21

அவசர திருத்தவேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5மணி வரை வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று சுன்னாகம் மின்சாரசபை அறிவித்துள்ளது.

நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கு புதிதாகப் பத்துக் கிராம அலுவலர்கள்

இவர்களுக்கான பயிற்சி ஜூன் 01இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கு 10 கிராம சேவையாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை, யாழ். பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கே இவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அவர்களின் தனிப்பட்ட விலாசத்துக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் யாழ். மாவட்டச் செயலகத்தில் சமுகமளித்து தமது வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

புதிதாக நியமனம் பெறுவோரின் விவரங்கள் வருமாறு :-

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்

எம்.அருணன் (தொட்டிலடி, சங்கானை), கே. சுதர்ஷன் (நவாலி வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை

ஏ.ஆரூரன் (3ஆம் வட்டாரம், எழுவைதீவு, ஊர்காவற்றுறை), என். தர்ஷன் (குலின்குடாள், ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்

எவ்.சேந்தன் (சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்), டி. மர்லின் மரீற்றா (கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகம்

ரி. குணசீலி (சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி), பி.கனிதா (ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்), ஆர்.கோகுலன் (வாதரவத்தை, புத்தூர்), ரி. சியாமளா (நீர்வேலி மேற்கு, நீர்வேலி)

(50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

காசிப்பிள்ளை ஆறுமுகம் (V.C)

[முன்னாள் கணக்காளர், அப்பையா அன் கோ புடைவையகம், யாழ்ப்பாணம்]

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை ஆறுமுகம் 18.05.2010 செவ்வாய்க்கிழமை பி.ப 4.30 மணியளவில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப் பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லோகாம் பிகை மற்றும் லலிதாம்பிகை (லண்டன்), மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிதம்பரநாதன் (சுவிஸ்), இராசலிங்கம் (லண்டன்), சோதிநாயகி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் வேணு, விஸ்ணு, நிகித்தா, கெவின் ஆகியோரது அன்புப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, நன்னித்தம்பி, வைரமுத்து ஆகியோரது அன்புச் சகோதரரும் தம்பிமுத்துவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2010) வெள்ளிக்கிழமை ந.ப. 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கைதடி மேற்கு, கைதடி. (98430)

அமரர் பரஞ்சோதி மேரி மெக்டலின் (றோஸ்மலர்)

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 334ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி மேரி மெக்டலின் (றோஸ்மலர்) அவர்கள் 16.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருசலீன்-றோசலீன் தம்பதிகளின் மூத்த புதல்வியும் அமரர் சின்னையா பரஞ்சோதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜோசப், பாக்கியநாதன், றீற்மலர் மற்றும் விக்டர் ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வைலட் ஜோசப் மற்றும் ஜெயமணி பாக்கியநாதன், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அல்பிறட் மற்றும் விக்டர் செபமலர் ஆகியோரின் மைத்துனியும் கலிஸ்ரன், பேனாட் (றோஜன்), வசந்தினி ஆகியோரின் பெரியம்மாவும் சாந்தினி, றொஹான், காமலின், நிஸான், ஷரோன், ஷோபியான், பிறின்சியா, மரினா, நிக்ஷன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தம்பி - விக்டர்

334, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (98434)

திருமதி பரமநாதன் இராஜேஸ்வரி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமநாதன் இராஜேஸ்வரி நேற்று (20.05.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- வள்ளியம்மை தம்பதியரின் மகளும் செ.ந.பரமநாதன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், பாதைப்பிரிவு, புகையிரதத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் ராதிகா (ஆசிரியர், சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை), அச்சுதராசா (உரிமையாளர், பீனிக்ஸ் பிறின்ரேஸ்), செந்தூர் குமரன் (கலை- வெளிவாரி மாணவன், பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேரின்பம் (ஆசிரியர், சென். பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு), சுதர்சினி (முகாமைத்துவ உதவியாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், திருநெல்வேலி), செல்வரஞ்சினி (விவசாயப் போதனாசிரியர், விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவபாலன் (உரிமையாளர், ஆதித்தா மருந்தகம்), சிவச்சந்திரன் (கணக்காளர்-லண்டன்), சிவரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ.ந.விஸ்வலிங்கம் (சட்டத்தரணி, யாழ்ப்பாணம்), கனகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவகலாநிதி (லண்டன்), பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நரேஸ்காந்த் (மாணவன், புனித பேதுரு கல்லூரி, கொழும்பு), அபினேஸ், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

884, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8635 (சி/567776)

தகவல்:
செ.ந. பரமநாதன் (கணவர்)

எழுதுவினைஞர் தேவை

தனியார் துறை அலுவலகம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள எழுதுவினைஞர் ஒருவர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராகவும் கணனி, சுருக்கெழுத்து போன்றவற்றில் தேர்ச்சி உள்ளவராகவும் இருக்க வேண்டும். தகுதியானவர் சுயவிவரத்தை சொந்தக் கையெழுத்தில் எழுதி விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 4024,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

பொருளியற் கல்லூரி - இறுவில்
BARATHY - சித்தன்கேணி
(இரு இடங்களிலும்)

மாணவர்களின் பொருளியல் குறைபாட்டைத் தீர்க்க, மீண்டும் உங்கள் மண்ணில் பொருளியல் - திரு. S. மகேந்திரன்
A/L 2010, DAY, 2011, 2012

அனைத்துப் பிரிவினருக்கும் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு :-
சகல வகுப்பினருக்கும் பொருளியல் ஆசான் S. பரதராஜன் ஆசிரியர் அவர்களின் அலகு ரீதியான பயிற்சிப் புத்தகங்களும் (Work Book) வழங்குவதுடன், அலகு ரீதியான மாதிரிப் பரீட்சைகளும் எமது நிறுவனத்தில் நடைபெறும்.

இப்போது நாம் கிளிநொச்சியில்

WESTERN UNION மணி ட்ரான்ஸ்பர்
MMBL Money Master

முகவர் நிலையத்தில்

உலகெங்கிலுமிருந்து ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பார்சல்கள், தொலைபேசி அட்டைகள், Fax (தொலைநகல்), போட்டோபிரதி இன்னும் பல சேவைகளை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.

குளோபல் மல்ரி சேவில்ஸ்
T.phon: 0212285300
Fax: 0212285301
Hot: 0217200283
Email:globalk2010@gmail.com

கண்டி வீதி,
கிளிநொச்சி.

நுவரேலியாவில் மண்சரிவு அபாயம்; அதனால் அவசரகாலநிலை பிரகடனம்

நுவரெலியாவில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அபாய எச்சரிக்கை காரணமாக அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அடை மழை மற்றும் கடும் காற்று காரணமாக குறித்த பகுதியில் முற்றாக வீடுகள் சேதமடைந்திருக்கின்றன என்று நுவரெலியா அரச அதிபர் டி.குமரசிறி தெரிவித்தார். இந்நிலையில், வீடுகளை இழந்த 60 குடும்பங்கள் தற்காலிகமாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருகின்றன என்றும் அவர் கூறினார்.

நுவரெலியாவில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கான உதவிகளை வழங்குவதில் அனைத்து அரச அதிகாரிகளும் கவனம் செலுத்திவருகின்றனர் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக மலையகப் பிரதேசத்திலுள்ள பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. மண்சரிவால் அங்கு சகதி ஏற்பட்டிருக்கிறது. மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் பல வீதிகளில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டே அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. (சி)

கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர் திரு. கனகரத்தினம் இரவீந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் கனகரத்தினம் சிவகாமிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.
(மல்லாகம்) (சி/567774)

மரண அறிவித்தல்

இளையதம்பி பொன்னுத்துரை

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பொன்னுத்துரை நேற்று (20.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுப்பையா-கதிராசி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் சந்திரசேகரம், புலேந்திரநாதன், மாலினி, கிருபாகரன், கிருபாரூபன், ரூபினி, ரூபமோகன், நந்தினி, கலாஜினி, பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காந்திமதி, மோகனா, மகாலிங்கம், இராசமலர், விஜயராணி, இரசாலிங்கம், ஜீவரேகா, சுரேந்திரன், விஜித் (பேபி), யாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜந்தினி, பத்மநாதன், கஜீபன், மயூரா, திருமால், மயூரதன், மயூகரன், சுஜிவரன், சுஜிதரன், கமலகரன், ரஜீவன், றஜிதா, றஜீனா, றிஷாந், ரூபிகா, சுரேன், சுரேனிகா, கஜரூபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் டிலக்ஷனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.05.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை வடக்கு உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஏழாலை கிழக்கு. (98437)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பெண் சாரணியர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறுவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பெண் சாரணியர்களையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் கேட்டுள்ளார்.

(ஒ-1)

விண்ணகத்திலிருக்கும் அப்பாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தம்பிஜயா பாலகுமாரநாதன்

பிறப்பு 21.05.1945 — இறப்பு 03.06.2009

65ஆவது பிறந்தநாள்- 21.05.2010

நிதி: ஏகாதசி (23.05.2010)

ஆண்டொன்று வந்துவிட்டது; ஆனாலும்
நீங்கள் இருப்பது போலவே இருக்குது அப்பா!
வீட்டில் நீங்கள் இல்லையென்று காணாதபோது
சோகமே நிறைந்துள்ளது.
ஆறாத துயரத்தால் நாளாந்தம் கண்ணீராகப் பெருகின்றது
தீராது அப்பா உங்கள் பிரிவு
மாறாது தெய்வமே உங்கள் நினைவு
எந்தப்பிறவியில் அப்பா இனி உங்களைப்
பாசமுள்ள அப்பாவாகவும் நேசமுள்ள துணைவராகவும்
காணப்போகின்றோம்?
எங்கள் குடும்பத் தலைவனே 'கண்மணி' என்ற
செல்லமான எங்கள் அப்பாவே, தங்கள்
65ஆவது பிறந்ததினமதில் விண்ணுலகில்
இறைவனுடன் இணைந்து
எங்களை வழிநடத்துங்கள்
எங்கள் அருமை அப்பாவே!

52, பிரதான வீதி,
ஆவரங்கோட்டை.
தொ.பே: 222 2753

பாசமுள்ள
குடும்பத்தினர்.

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

தரம் - 5

புலமைப் பரிசில் பரீட்சை-2009

மேலும் உயர மேன்மை மிகு வாழ்த்துக்கள்

ர.கிருத்திகா 160 கி.டனுஸ்ஷன் 152 க.அபர்ணா 147 ர.விதூசிகா 146 த.சுபாசிவி 143 த.ஐந்துஷா 143 சி.தனுகா 140

இவர்களுடன் அண்மித்த புள்ளிகள் பெற்ற 46 மாணவச் செல்வங்களையும் கல்வியின் சிறப்பைப்பெற்று சீர்மியமாய் வாழ வாழ்த்துகின்றோம். அதிபர், ஆசான்களைப் போற்றுகின்றோம்

கல்லூரிச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவும் தொழில் திணைக்களமும் இணைந்து நடத்திய இரு நாள்கள் நடமாடும் சேவையின் முதல்நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் மேலதிக கண்காணிப்பாளர் திருமதி தீபா செனிவிரத்ன, யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் எஸ்.கனகேஸ்வரன், பிரதித்தொழில் ஆணையாளர் என்.குணபாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும், இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் சிரேஷ்ட உதவிக் கண்காணிப்பாளர் சுசந்த டி சில்வா, உதவிக் கண் காணிப்பாளர் ஜெயசிறி உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதனை நான்காவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: கரன், உமா)

"49 சிசி" மோ.சைக்கிளுக்கும் இனி "லைசென்ஸ்" அவற்றுக்கும் உரிய பதிவுகள் செய்யப்படவேண்டும்

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.மாவட்டத்தில் பாவனையில் உள்ள "49 சிசி" ரக மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் பதிவு செய்யப்படவேண்டும் எனவும், அவற்றுக்குப் புதிய "லைசென்ஸ்" அறிமுகப்படுத்தப்படும் எனவும் யாழ். மோட்டார் திணைக்கள உதவி ஆணை யாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு, மோட்டார் சைக்கிள் என்ற வகைக்குள் அடங்குகின்ற சகல வகை மோட்டார் சைக்கிள்களையும் உரிய முறையில் பதிவு செய்த பின்னரே பாவ னைக்கு உட்படுத்தமுடியும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் வெகுவிரைவில் அறிவிக்கப்படும். அத்து டன் "49 சிசி" ரக மோ.சைக்கிள்களுக்கு ஏனைய மோட்டார் சைக்கிள்களைச் செலுத் தும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்றில் லாமல் வேறு சாரதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் வரிநடைமுறைகள் என்பனவற் றையும் அமுல்படுத்தவுள்ளோம் - என்றார்.

தற்போது யாழ்.குடாநாட்டில் "49 சிசி" ரக மோட்டார் சைக்கிள்களின் பாவனை அதிகரித்துக்காணப்படுகின்றது? எந்தவித பதிவுகளோ, சாரதி அனுமதிப் பத்திரமோ இல் லாமல் இவற்றைச் செலுத்தக் கூடியதாக இருந்தமையால் அதிகளவானோர் இவற்றை விரும்பி வாங்கிப் பாவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-16)

கொமர்ஷல் வங்கியின் உதவியுடன் 4 குடும்பங்களுக்கு வீடுகள்

யாழ்ப்பாணம்,மே21

கொமர்ஷல் வங்கியின் சமூக பொறுப்பு நிதியம் சாவகச்சேரி கிளை ஊடாக நலன் புரி நிலையங்களில் இருந்து வெளியேறி கச்சாய்ப் பிரிவில் தங்கியுள்ள நான்கு குடும் பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வுள்ளது.

இந்த வீடுகள் அமைத்துக் கொடுப்பதற் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இவ்வாரம் இடம்பெறுமென வங்கிக் கிளை முகாமை யாளர் எஸ்.வி.குருபாதம் தெரிவித்தார்.

(50 -207)

குமுதினி அரச படகுச் சேவை நேற்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே21

குமுதினி படகு மீண்டும் நேற்று வியா ழக்கிழமை முதல் சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதி கார சபையின் யாழ். அலுவலகம் தெரி வித்தது.

குறிகட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த இந்தப் படகு பழுதடைந்தமையால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது திருத்தப் பணிகள் நிறை வடைந்ததையடுத்து குமுதினி நேற்று முதல் தனது சேவையை ஆரம்பித்துள்ள தாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் படக்குச்சேவை தினமும் குறி கட்டுவானில் இருந்து காலை 8 மணிக்கும் பி.ப. 3 மணிக்கும் புறப்படுவதற்கும் நெடுந்தீவில் இருந்து மு.ப. 10 மணிக்கும் பி.பு. 4 மணிக்கும் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (50-224-111)

அச்சுவேலிப் பொலிஸாரின் நடமாடும் சேவை நாளை

நாவற்குழி,மே21

அச்சுவேலி பொலிஸ் நிலைய எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்க ளுக்கான நடமாடும் சேவையொன்று நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் இதில் கலந்து கொள்ள உள்ளார்.

கிராம சேவகர்கள், சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் இந்த நடமாடும் சேவையில் சமுகமளிக்க உள்ளனர்.

அடையாள அட்டை, கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களைத் தொலைத்த வர்களும், ஏனைய சேவைகள் தேவைப் படுவோரும் இங்கு கலந்து கொண்டு பயன் பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள் ளது. (50-121)

'லிவ்ற் - 2' இன் அறிமுக நிகழ்வு

நாவற்குழி,மே21

கெயர் சர்வதேச நிறுவனத்தின் அனு சரணையுடனும் சீடா நிறுவனத்தின் நிதி யுதவியுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'லிவ்ற் - 2' திட்டத்தின் 2 ஆவது சுழற்சிக் காலப்பகுதிக்கு உரிய அறிமுக நிகழ்வு வலி. கிழக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலரும், வெளிக்கள உத்தியோகத்தர்களும்,கிராம அலுவலர்களும், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ள உள்ளனர். (50 - 121)

சக்கர நாற்காலி தேவையானோரின் விவரங்களை அனுப்பப் பணிப்பு

நாவற்குழி,மே21

விசேட தேவைக்குரியோரில் சக்கர நாற்காலி தேவைப்படுவோரின் முன்னுரி மைப் பட்டியலை அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் பிரதேச செயலர்களைக் கேட் டுள்ளார்.

பிரதேச செயலர்கள், சமூக சேவை அலுவலர்கள் ஊடாக இந்தத் தரவுகளைத் திரட்டும் பணிகளை மேற்கொண்டுள்ள னர். (50-121)

தனியார் பஸ் தரிப்பிடத்தின் கூரை 'லைலா'வினால் சேதம்

யாழ்ப்பாணம்,மே21

கடும் காற்றினால் முற்றவெளியில் உள்ள தனியார் பஸ்தரிப்பிடக் கட்டடத்தின் கூரைத் தகரங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு வீசிய 'லைலா' புயல் காற்றினாலேயே இந்தக் கூரைத் தகரங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

கடந்த 'நிஷா' புயலின் போதும் இந்த பஸ்தரிப்பிடத்தின் கூரைத் தகரங்கள் தூக்கி வீசப்பட்டன.

அதன் பின்னர் புதிதாகக் கூரைத் தக ரங்கள் பொருத்தப்பட்டன. அந்தக் கூரைத் தகரங்களே இப்போது மீண்டும் காற்றி னால் தூக்கி வீசப்பட்டுள்ளன.(50 - 224)

மாதர் அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

நாவற்குழி,மே21

கோப்பாய் தெற்கு மாதர் கிராம அபி விருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை சனிக்கிழமையும், உரும்பிராய் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம் ஜூன் 06 ஆம் திகதியும் நடை பெறவுள்ளது. (50 - 121)

இராமாவில் நலன்புரி நிலைய மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் எவ்வேளையிலும் நிறுத்தப்படவில்லை

யாழ். அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம்,மே 21

இராமாவில் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்களுக்கு உலக உணவுத் திட் டத்தினால் வழங்கப்படுகின்ற உணவுப் பொருள்கள் எந்த நேரத்திலும் நிறுத்தப் படவில்லையென யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி உதயனின் 5 ஆம் பக்கத்தில் வெளியான 'பட்டினியின் விளிம் பில் தவிக்கிறார்கள் இராமாவில் நலன்புரி நிலைய மக்கள்' என்ற செய்திக்கு அனுப்பி யுள்ள விளக்கத்திலேயே அரச அதிபர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள் ளவை வருமாறு:-

இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 710 குடும்பங்களைச் சேர்ந்த 2031 அங்கத்தவர்களுக்கான உலக உண வுத்திட்ட நிவாரணம் எவ்வித தடங்கலு மின்றி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின் றது. மேற்படி உலக உணவுத்திட்ட நிவார ணம் ஏப்ரல் மாதம் வரை உலக உணவுத் திட்டக் களஞ்சியத்தில் இருந்து மாவட்டச் செயலக லொறிகள் மூலம் நேரடியாக இராமாவில் நலன்புரி நிலையத்திற்குப் பொறுப்பான கிராம அலுவலர்களிடமும் உணவு விநியோகத்திற்குப் பொறுப்பான குழுவிடமும் கையளிக்கப்பட்டு அவர்கள் மூலம் மக்களுக்கான உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி நலன்புரி நிலையம் 10.01.2010 முதல் திறந்த 'நலன்புரி நிலையமாக அனுமதிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் வெளி இடங்களுக்குச் சென்று வர அனும திக்கப்பட்டுள்ள நிலையிலும் தொடர்ச்சி யாக மேற்படி நடைமுறையில் உணவுப் பொருள்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. இராமாவில் நலன்புரி நிலையம் திறந்த நலன்புரி நிலையமாக மாற்றப்பட் டதைத் தொடர்ந்து பெருமளவு மக்கள் நலன்புரி நிலையத்தில் தங்காமையால் வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமை அவ தானிக்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் பயன்படுத்தப்பாடாமல் காணப்பட்ட 168 லீற்றர் மரக்கறி எண்ணெய், 230 கிலோ அரசி, 60 கிலோ சீனி ஆகியன உலக உண வுத் திட்ட அலுவலர்களால் 14.05.2010 அன்று மீளப் பெறப்பட்டு கோப்பாய் உலக உணவுத்திட்டக் களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையத்தில் உள்ள மக்க ளுக்கு சீரான உணவு விநியோகத்தை மேற் கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு குடும் பத்திற்கும் உலக உணவுத்திட்ட நிவாரண அட்டைகள் வழங்கப்பட்டு அதன் மூலம் இராமாவில் நலன்புரி நிலயத்தினுள் அமைக் கப்பட்ட கொடிகாமம் ப.நோ.கூ சங்கக் கிளை மூலம் மே மாதம் முதல் தொடர்ச்சி யாக வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம்நலன்புரி நிலையத்திற்கு வெளியே சென்றுவரும் மக்களும் தமக்குரிய உணவுப் பொருள்கள் தடங்கலின்றி பெற் றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இந்தவகையில் உலக உணவு திட்டத்தி னால் வழங்கப்படுகின்ற உணவுப் பொருள் கள் எந்த நேரத்திலும் நிறுத்தப்பட வில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

மேலும் இராமாவில் நலன்புரி நிலை யத்தில் உள்ள மாணவர்கள் கல்வி கற்கும் எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உணவுச் செயற்திட்டத்தின் கீழ் மதிய உணவும் உலக உணவுத்திட்டத்தினால் தொடர்ச்சி யாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் உணவு விநியோகம் சீரின்மை யால் பாடசாலை மாணவர்களினது வரவு குறைவடைந்துள்ளது என குறிப்பிடப்பட் டுள்ளமை பொருத்தமற்றது.

அத்துடன் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் குடி தண்ணீர் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் தினமும் 17000 லீற்றர் குடிதண்ணீர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலம் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகின் றது என்பதையும் இது அம் மக்களுக்கு சரா சரியாகத் தேவைப்படும் அளவினை விட அதிகமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இராமாவில் நலன்புரி நிலையத் தில் உள்ள மக்களுக்கான உலர் உணவு நிவாரணம், குடிதண்ணீர் ஆகியன எவ் வித தடங்கலுமின்றி தொடர்ந்து வழங்கப் பட்டு வருகின்றன என்பதனையும் அறியத் தருகின்றேன் - என்றுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் அன்று ஒலித்த மரண ஓலங்களே தென்னிலங்கையில் இடிகளாக மாறியுள்ளன

முன்னாள் எம்.பி. மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, மே21

''ஒருவார காலமாக தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கை முழுக்க ஒலிக்கின்ற இடி முழக்கமும், பொழிகின்ற அடைமழையும், வெட்டு கின்ற மின்னலும் ஒரு வருடத்திற்கு முன் னர் இதே நாள்களில் ஒலித்த எங்களது மக்களின் மரண ஓலங்களை எதிரொலிக் கின்றன.''

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழு ஏற்பாட்டளருமான மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஒரு வருடத்திற்கு முந்தைய யுத்த முனை வெற்றி இவ்வாரம் நினைவுகூரப்படுகின்றது. யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவத்தினரின் தியாகம் அரசால் முன்நிறுத்தப்படுகின்றது. அதேபோல் 'யுத்த வெற்றியின் நாயகனான ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்துவிட்டு யுத்த வெற்றியைக் கொண்டாடுவதா' என ஐ.தே.கவும், ஜே.வி.பியும் கேள்வி எழுப்புகின்றன.

'யுத்தமுனை நாயகனை சிறையில் அடைத்துவிட்ட காரணத்தால்தான் இயற்கை சீற்றம் கொண்டு சீறி எழுந்துள்ளது எனவும், அதனால்தான் யுத்தமுனை கொண்டாட்டங்கள் ஒத்திவைக்கப்பட நேர்ந்தன' என்றும் ஜே.வி.பி. எம்.பி. நாடாளுமன்றத்தில் முழங்கியுள்ளார்.

ஆனால், அன்றைய யுத்தமுனையிலே இரு தரப்பினருக்கும் இடையே சிக்கி உயிர் இழந்த பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் ஆன்மாக்கள் இன்னமும் சாந்தியடையவில்லை என்பதேதான் இந்த இயற்கையின் சீற்றம் அடையாளப்படுத்துகிறது என நாங்கள் நம்புகிறோம். அன்றைய தினத்தில் சுமார் 3 லட்சம் மக்கள் வடக்கிலே அகதிகளாக்கப்பட்டார்கள். ஏறக்குறைய அதே தொகையினர் இன்று தென்னிலங்கையில் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஒலிக்கின்ற இடி முழக்கங்களும், வெட்டுகின்ற மின்னல் தீப்பிழம்புகளும் யுத்த முனையிலே பயன்படுத்தப்பட்ட பல்குழல் பீரங்கிகளையும், குண்டுகளையும், ஆயுதங்களையும் நினைவுபடுத்துகின்றன. இறுதி யுத்தத்தின்போது அப்பாவி மக்களின் பேரவலம் அறிந்த நிலையிலும் தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுத்த இரு தரப்பினருமே இந்த மரணங்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும்.

எமது மக்களின் பேரவலம் கண்டும், காணாததுபோல் பாசாங்கு செய்த ஐ.நா. சபையையும், சர்வதேச சமூகத்தையும் மன்னித்துவிடவும் எமக்கு மனதில்லை. மரணங்களை எதிர்பார்த்து ஆயுதங்களை தூக்கியவர்களுக்காகக் கண்ணீர் சிந்துவதற்கும் எங்களுக்கு இன்று நேரமில்லை. ஆனால், ஒன்றும் அறியாத அப்பாவி பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களும் உள்ளடங்கிய பெருந்தொகையான எமது மக்களுக்காக நாங்கள் கண்ணீர் வடிக்கின்றோம்.

தமது மரணங்களுக்குக் காரணமான இரு தரப்பினரையும், சர்வதேச சமூகத்தையும் மாத்திரம் அல்லாமல், இக்கொடுமையை தடுத்து நிறுத்த முடியாமல் கையாலாகாதுபோன தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும்கூட தமது இறுதி நேரத்திலே அந்த அப்பாவி மக்கள் சபித்திருப்பார்கள் என நான் உணருகின்றேன். இலங்கையின் எதிர்கால அரசியல் பயணம் முழுக்கவும் பல்லாயிரக்கணக்கான மக்களின் சாபங்கள் தொடரப்போகின்றன என்பதை அரசியல் தலைமைகள் ஒவ்வொன்றும் மனதில் கொள்ளவேண்டும். இதிலிருந்து நாம் இறுதிவரை விடுபடவே முடியாது. - என்றுள்ளது. (சி)

ஆஸியிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இளைஞர்கள் நீண்ட நாள்களாக சிறைகளில் அடைத்துவைப்பு

கொழும்பு, மே 21

ஆஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட பலர் இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், நீண்ட நாள்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த நாட்டின் கத்தோலிக்க மதகுரு ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் மேற்கொண்டு திரும்பியுள்ள ஆஸ்திரேலிய கத்தோலிக்க திருச்சபையின் எட்மண்ட் ரைஸ் நிலையத்தின் இயக்குநர் பில்கிளென்டெனிங் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளியேறுபவர்களை அதிகாரிகளும், பொலிஸாரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதுகின்றனர். இதனால் திருப்பி அனுப்பப்படுபவர்கள் ஆபத்தில் சிக்குகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளவை வரு மாறு:-

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு கடந்த ஒருவருட காலப் பகுதிக்குள் திருப்பி அனுப்பப்பட்ட 11 பேர் விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய அரசு அவர்களைத் திருப்பி அனுப்பும்போது, அவர்களின் பாதுகாப்புக் குறித்து உத்தரவாதம் வழங்கியிருந்தது.

எனினும், அவர்கள் விமான நிலையத்தில் காலடி எடுத்து வைத்தவுடன் இலங்கையின் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்படுகின்றனர்.

இவர்களில் சிலர் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் ஒருவரின் கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒருவர் செவிப்புலன் திறனை இழந்துள்ளார்.

ஆஸ்திரேலிய அரசினால் திருப்பி அனுப்பப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கே இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற உணர்வு அந்த நாட்டில் காணப்படுகின்றது.

இதன் காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சிறை வைக்கப்படுகின்றனர். இவர்கள் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்படலாம் என்பதே இங்கு முக்கியமான விடயம்.

இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இன்னமும் சிறைகளிலேயே உள்ளனர்.

இதேவேளை, இவ்வாறு ஆபத்தில் சிக்கக்கூடியவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளதன் மூலம் ஆஸ்திரேலியா தனது சட்டங்களை மீறியுள்ளது.

திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சிறை வைக்கப்படுகின்றனர். அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்படுகின்றன.

அவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் கடத்தப்படும் அபாயம் உள்ளது - எனக் குறிப்பிட்டுள்ளார். (சி)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கிருஷ்ணன் சிவபாலன்
(முன்னாள் நீதிமன்ற ஊழியர், வவுனியா)

உதயம் 16✱05✱1952

மறைவு 23✱05✱2007

திதி: 21.05.2010

ஆண்டுகள் மூன்று கடந்தாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்
எம்மை உயர்த்தி வைத்த உத்தமரே மண்ணில் நாம் வாழும்வரை மறவோம்.

31, கொண்டலடி வீதி, நல்லூர். (98423)

மனைவி - இராசமலர், பிள்ளைகள் - சபேஸ்நாத், அருண்நாத்

கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் ஊழியர்
திரு.அலெக்ஸ் அமிர்தநாதன் (செல்வம்)
அவர்களின் அன்பு மனைவி
திருமதி அமிர்தநாதன் ஜெனற்மேரி
அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். இதனால் துன்புற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர், பணியாளர்கள்,
கரித்தாஸ் - கியூடெக்,
யாழ்ப்பாணம்.

(சி/567756)

இலங்கை - சவூதி அமைச்சர்கள் ஹஜ் தொடர்பாக ஒப்பந்தம்

கொழும்பு, மே 21

அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் சவூதி அரேபியாவின் விவகார அமைச்சருக்கும் இடையில் ஹஜ் சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று கடந்த திங்கட்கிழமை கைசாத்திடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தலைமையில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான மற்றும் முஸ்லிம் சமய விவகார திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம் நவவி அடங்கிய ஹஜ் தூதுக்குழு ஒன்று சவூதி அரோபியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

கடந்த வருடம் இலங்கையிலிருந்து ஹஜ் செல்வதற்கு 2500 பேருக்கே விசா வழங்கப்பட்டிருந்தது. எனினும் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் நிறைவுக்கு வந்திருப்பதன் காரணமாக அங்குள்ள மக்கள் பலர் ஹஜ் செல்வதற்கு தயாராக இருப்பதன் காரணமாக இம்முறை 8500 மேற்பட்ட விசாக்களை வழங்கும்படி இத்தூதுக்குழு சவூதி அரோபிய அரசிடம் வேண்டியிருந்தனர். அதனடிப்படையில் 8000 மேற்பட்ட விசாக்களை வழங்குவதாக சவூதி அரோபிய அரசு உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இக்குழுவின் சவூதி அரோபியாவுக்கான விஜயத்தின்போது சவூதி அரசின் தென்கிழக்காசிய நாடுகளுக்கான ஹஜ் பொறுப்பாளரையும் சந்தித்து இலங்கை ஹஜ் குழுவினர் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி, அதற்கு தீர்வு கண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் திருமதி பு.பேரின்பநாயகம் அவர்களின் அன்புத் தாய்
திருமதி மருதனாச்சிப்பிள்ளை இராசதுரை
அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மானி.சென்ற். ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை.

(98425)

ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 511
சீட்டிழுப்பு திகதி: 19.05.2010

வெற்றி எழுத்து: W வெற்றி இலக்கங்கள்: 21 30 56 61

	கூட்டு	பரிசுத்தொகை	வெற்றி பெற்ற தொகை
சுப்பர் பரிசு	ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால்	ரூ. 14,058,118.40	-
1 பரிசு	4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால்	ரூ. 1,000,000/-	-
2 பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால்	ரூ. 50,000/-	05
3 பரிசு	3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால்	ரூ. 2,000/-	150
4 பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால்	ரூ. 1,000/-	297
5 பரிசு	2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால்	ரூ. 100/-	7338
6 பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால்	ரூ. 50/-	4188
7 பரிசு	1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால்	ரூ. 20/-	105485
8 பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால்	ரூ. 30/-	16953

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 4,408,490.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 14,473,811.20

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 22
திகதி - 19.05.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: F அதிர்ஷ்ட இலக்கம்: 06 வெற்றி இலக்கம்: 6 8 4 0 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

பரிசு	இலக்கங்கள்	பரிசுத் தொகை	பரிசு
சுப்பர் பரிசு	F 06 6 8 4 0 8	ரூ. 10,000,000.00	-
1 பரிசு	06 6 8 4 0 8	ரூ. 2,000,000.00	-
2 பரிசு	6 8 4 0 8	ரூ. 100,000.00	03
3 பரிசு	8 4 0 8	ரூ. 10,000.00	19
4 பரிசு	4 0 8	ரூ. 1,000.00	189
5 பரிசு	0 8	ரூ. 50.00	1919
6 பரிசு	8	ரூ. 20.00	18467

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

பரிசு	இலக்கங்கள்	பரிசுத் தொகை	பரிசு
7 பரிசு	6 8 4 0	ரூ. 1,000.00	20
8 பரிசு	6 8 4	ரூ. 100.00	187
9 பரிசு	6 8	ரூ. 50.00	1944
10 பரிசு	F	ரூ. 20.00	7624
11 பரிசு	F 06	ரூ. 100.00	908

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,523,470.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ. இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 10,295,146.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

வடமாகாண ஆளுநர் சந்திரசிறி அறிவுரை

யாழ்ப்பாணம்,மே.21

புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டோர் தமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி சமூகப் பொறுப்பும் கௌரவமும் மிக்க பிரஜைகளாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

இதுவே அரசாங்கம் உங்களை விடுவிப்பதன் நோக்கமாகும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி.

புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 495 முன்னாள் போராளிகளை அவர்களின் பெற்றோரிடம் கையளிக்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்று கையில் தெரிவித்ததாவது:

அண்மைக்காலத்தில் தீவிரமாகவிருந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஒரு பகுதியாக அரசாங்கத்தினால் நல்லெண்ணத்தையும் தாராள மனப்பாங்கினையும் வெளிப்படுத்தும் மற்றுமொரு நிகழ்வினை இன்று நாம் காண்கிறோம்.

இச்செயல் இன முரண்பாட்டினை உள்நாட்டிலேயே தீர்த்துக் கொள்வதற்கான அரசாங்கத்தின் திடசங்கற்பத்தினையும் அதற்கான ஆற்றலையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

மனித குலம் தனது வரலாற்றில் சமூகக் குழுமங்கள் தம்மிடையே முரண்பட்டு மோதிய சம்பவங்களையும் அந்த முரண்பாடுகளைத் தீர்த்துக்கொண்ட வெவ்வேறு வழிகளையும் தொடர்ச்சியாகக் கண்ணுற்று வந்துள்ளது.

சமூகங்களுக்கு இடையேயான முரண்பாட்டு இணக்க முறைகளில் ஒரு பகுதியாக முன்னாள் போராளிகளை சமூக நீரோட்டத்துடன் ஒருங்கிணைத்தல் இருந்து வந்துள்ளதைக் காணலாம்.

அரசினுடைய இத்தீர்மானம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஒரு புனர் ஜென்மத்திற்கான சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது. உங்களுடைய சமூகத்திற்கு ஓர் அந்தஸ்துடன் சேவை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நீங்கள் யாவரும் தவறாக வழிநடத்தப்பட்ட இளைஞர்களேயன்றி வேறில்லை.

எனவே கடந்த காலத்தில் நடந்தவை பற்றித் தொடர்ந்து துக்கமடையவோ, உளத்தில் வேதனை அடையவோ தேவையில்லை. நீங்கள் விரும்பிய கல்வி நிலையங்களில் கல்வியைத் தொடரலாம். உங்களது இயல்பிற்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் தொழில் நடவடிக்கைகளில் நீங்கள் மீண்டும் ஈடுபடலாம்.

நீங்கள் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவர்களாகவும் கடும் உழைப்பாளிகளாகவும் இருப்பதோடு விதம் விதமான ஆற்றல்களையும் வளங்களையும் கொண்டவர்களாகவும் உள்ளீர்கள்.

இவர்கள் மத்தியிலிருந்து உரிய மனப்பாங்கும் தகுதியும் உள்ள 100 இளைஞர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு சாரதிப் பயிற்சி வழங்க முடிவு செய்துள்ளோம்.

இவர்களில் 30 பேருக்கு முதற்கட்டமாக பயிற்சிகளை வழங்குகின்றோம். இது போன்று பல தொழிற் பயிற்சிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது-என்றார்.

(50-16)

அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

பருத்தித்துறை,மே 21

வடமராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள வல்லை மகளிர் மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2-I சேர்ந்தவர்களுமான பயிற்றப்பட்ட பட்டதாரிகள் அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரிகள் அல்லது அதற்கு மேற்பட்ட தகமைகளைக் கொண்ட ஆகக்குறைந்தது மூன்று

வருடங்களேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்ட பெண் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த பொருத்தமானவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. (50-190)

வடக்கில் பசுப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு விசேட திட்டம்

வடமாகாணத்தில் பசுப்பால் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது.

வடமாகாண அளுநர் அலுவலகமும் வடக்குக்கான விசேட செயலணியும் இணைந்து பசுப்பாலை அதிகரிப்பதற்கான விசேட திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளன.

வடமாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் பசுப்பாலின் உற்பத்தி மிகமிகக் குறைந்து காணப்படுகின்றது.

தென்பகுதியில் இருந்து பைக்கற் மூலம் கொண்டுவரப்படும் பசுப்பாலே வன்னியில் குடியேறிய மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது வீழ்ச்சியடைந்து காணப்படும் பசுப்பால் உற்பத்தியை மீண்டும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(50-224)

இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண மின் பொறியியலாளர் அலுவலகம் நேற்றுமுன்தினம் நாவலர் வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் நாடா வெட்டி அலுவலகத்தை திறந்துவைப்பதை முதற்படத்திலும் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் வலைரியா பிரதான மின்பொறியியலாளர் எஸ்.பிரபாகரன், வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களை இறுதிப்படத்திலும் காணலாம். *(படங்கள்: ரட்ணம், சுகந்தன்)*

மோ.சைக்கிள் செலுத்திக்கொண்டு 'மொபைல்' பேசுவோரைக் குறிவைக்கும் போக்குவரத்து பொலிஸார்

யாழ்ப்பாணம்,மே 21

மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திக் கொண்டு கைத்தொலைபேசியில் (மொபைல்) உரையாடுவோர் மீது போக்குவரத்துப் பொலிஸார் இப்போது தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர்.

கடந்த சில நாள்களாக யாழ்.நகரப் பகுதி உட்பட பல்வேறு இடங்களிலும் கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திய பலர் போக்குவரத்துப் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திக் கொண்டு அதேவேளை தலைக்கவசத்துக்குள் கைத்தொலைபேசியை மறைத்து வைத்து அதில் உரையாடிக்கொண்டு வீதிகளில் பயணிக்கும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்து வருகின்றன. இதனால் வீதிகளில் முக்கிய இடங்களில் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் தமது கவனத்தைத் தவறவிடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் வீதி விபத்துக்களும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைத்தொலைபேசிகளில் உரையாடிக்கொண்டு மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவோரைப் போக்குவரத்துப் பொலிஸார் கலைத்துப்பிடித்து தண்டங்களையும் அறவிடும் சம்பவங்கள் அண்மைநாள்களாக இடம்பெற்று வருகின்றன. (50-224)

இந்தியக் கலைஞர்களுக்கு இணையான இசைக்கலைஞர் இராதாகிருஷ்ணன்

பாராட்டு விழாவில் புகழாரம்

யாழ்ப்பாணம்,மே21

ஈழந்து இசைக்கலைஞர்கள் வரலாற்றில் வயலின் இசைத்துறையில் இந்தியக் கலைஞர்களுக்கு ஈடாக தனக்கென முத்திரை பதித்து எல்லோரையும் வியக்க வைத்தர்-வித்துவான் இராதாகிருஷ்ணன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

இசைஞானத் திலகம் இணுவில் உ. இராதாகிருஷ்ணனின் பாராட்டு விழா அண்மையில் இணுவில் சிவகாமி அம்மன் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற போது அந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, இசைக்கலைஞர் இராதாகிருஷ்ணன் பாரம்பரியம் மிக்கதொரு கலைக்குடும்பத்தில் பிறந்தவர். இராதாகிருஷ்ணனுடைய தந்தையார் உருத்திராபதி புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்ற வாத்தியங்களைப் பயிற்றுவிப்பதில் வல்லவர்.

அத்தகைய சிறப்பு மிக்க கலைஞனின் மகனான இராதாகிருஷ்ணன் சிறுவயதிலிருந்து கலையார்வம் மிக்கவராக மிளிர்ந்து கொண்டிருப்பவர்.

அத்துடன், இந்தியக் கலைஞர்களுக்கு ஈடாக இசைக்கலையில் நின்று நிலைத்திருப்பவர் .

கலைஞர்கள் வாழும்போது கௌரவிக்கவேண்டியவர்கள். ஆனால் இராதாகிருஷ்ணனுக்கு இங்கு எடுக்கப்படுகின்ற இந்தக் கௌரவிப்பு விழாவை ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள் - என்றார். (எ-9)

தீவக வலயத்தில் 10 பாடசாலைகளின் கட்டடப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே 21

தீவகப் பகுதியில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பத்து பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டட நிர்மாணப் பணியின் மிகுதி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த மிகுதி நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

* நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய நூல் நிலையம், பாடசாலைக் கட்டட நிர்மாண மிகுதி வேலைகள்
* அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
* நயினாதீவு மகா வித்தியாலயம்
* நயினாதீவு சிறீகணேசா வித்தியாலயம்
* கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம்
* மண்டைதீவு மகா வித்தியாலயம்
* புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்
* புங்குடுதீவு மகா வித்தியாலயம்
* காரை மெய்கண்டான் வித்தியாலயம்
* மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

ஆகிய பாடசாலைகளிலேயே இந்தக் கட்டட வேலைகள் இடம்பெறவுள்ளன.

(01-224)

யாழ்.முகாமையாளர் கழகத்தின் விசேட பயிற்சிப் பட்டறை நிகழ்வு

நல்லூர்,மே21

யாழ். முகாமையாளர் கழகத்தின் அனுசரணையுடன் விசேட பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஒன்று நடைபெறவிருப்பதாக அதன் ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வீதியின், விவசாய சேவை ஒழுங்கையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில், மக்கள் வங்கியின் யாழ்.மாவட்ட உதவிப் பொது முகாமையாளர் கே.ஆனந்தராஜாவின் தலைமையில் பி.ப. 4மணியளவில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பி.கே.கணேஸ் 'தனி மனிதனிற்கேயுரிய சமூக மதிப்பீடுகள்,கடமைப் பொறுப்புப் பண்பு' என்ற தலைப்பின் கீழ் கருத்துரை வழங்கவுள்ளார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டு ஆலயங்களில் நிகழ்ந்த திருக்காட்சிகள்....

நவாலி சித்தாமணிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழாவின்போது சுவாமி உள்வீதி உலா வருவதையும் தேருக்கு எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: 112)*





திருநெல்வேலி நீலாயதாஷ ஸ்ரீகாயாரோகண ஆலய தேர்த்திருவிழாவின்போது சுவாமி தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2122 திகதி 19-05-2010

ஆங்கில எழுத்திற்கும் J

வெற்றி எண்கள் 16 19 45 54

போனஸ் இல: 11

ஜக்பொட் பரிசு ரூ. 19,476,275/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் தொகை	பரிசுத் தொகை	மொத்த பரிசுத் தொகை
1 இல	125499	20/-	2,509,980/-
2 இல	8994	100/-	899,400/-
3 இல	187	1,000/-	187,000/-
4 இல	01	1,000,000/-	1,000,000/-
1 இல + ஆங்கில எழுத்திற்கும்	4942	40/-	197,680/-
2 இல + ஆங்கில எழுத்திற்கும்	350	1,000/-	350,000/-
3 இல + ஆங்கில எழுத்திற்கும்	08	10,000/-	80,000/-
4 இல + ஆங்கில எழுத்திற்கும்	-	19,476,275/-	-
1 இல + போனஸ் இல	6003	100/-	600,300/-
2 இல + போனஸ் இல	275	500/-	137,500/-
3 இல + போனஸ் இல	04	100,000/-	400,000/-
1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல	238	200/-	47,600/-
2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல	11	1,500/-	16,500/-
3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல	-	150,000/-	-
மொத்தம்			6,425,960/-
தங்க நாணயங்களின் பெறுமதி	10		600,000/-
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை	146522		7,025,960/-

ஆலிந்தயே வாசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்
P.M.L.D. பெர்னாண்டொ - வாத்துவை.
சிரான் காரியவசம் - பதுளை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

அனுராதபுரம்	201906183-6-33
மாத்தறை	201897100-9-29
மொணராகலை	201896576-9-23
கொழும்பு	201898955-7-37
புத்தளம்	201905252-8-11
காலி	201900195-7-28
கேகாலை	201903046-5-37
பொலன்னறுவை	201908589-5-30
வவுனியா	201898912-8-26
திருகோணமலை	201897933-8-15

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 19,818,400/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 மே 22 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கணாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை
யூனியன் பலேஸ், கொழும்பு - 02
இதா.பே: 2333546/7

பாடநூல்கள் தேவையான பாடசாலைகள் கவனத்துக்கு

பருத்தித்துறை, மே21

பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்மேலும்தேவைப்படும் பாடசாலைகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு கிழமை நாள்களில் பிற்பகல் 2.30 மணிக்குப் பின் சமுகமளித்து பெற்றுக்கொள்ளமுடியுமென பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நேரடியாகச் சமுகமளிக்க முடியாதவர்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு பாடசாலை அதிபரின் வேண்டுதல்கடிதமொன்றை அனுப்பிவைத்து மத்திய நிலையத்தின் ஊடாக நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(60-100)

இறையன்பே பொக்கிஷம்

பிரகிருதி வசப்பட்ட மனிதர்களின் எண்ணங்கள் யாவும் அவரவர்களுடைய பொக்கிஷங்களையே சதா நினைத்துக் கொண்டிருக்கும். பொக்கிஷங்களை வைத்திருக்கும் இடத்தையும் அதனுள் இருக்கும் தனம், தானியம், பசும்பொன் திரவியங்களைச் சுற்றியே எண்ணங்கள் உலாவரும். எனினும் இப் பொக்கிஷங்கள் காலத்தால் அழியக்கூடியவை. கள்வரால் திருடப்படக் கூடியவை. பொதுவாகக் கூறின் இவை நிலையில்லாத பொக்கிஷங்களாகும்.

இப் பொக்கிஷங்களைத் தேடுவதற்கு தீய வழிகளையும், நல்ல வழிகளையும் கையாளலாம். தேடிய பொக்கிஷத்தைப் பாதுகாக்க பாதுகாப்பு போடப்பட வேண்டும்.

எனவே, காலத்தால் அழிக்க முடியாத பொக்கிஷங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். காலத்தால் அழியாத கள்வரால் கொள்ளைகொள்ள முடியாத உறுதியான - நம்பிக்கையான பொக்கிஷம் தான் இறைவன் மீது நாம் வைக்கும் அன்பு.

இறைவனை நெஞ்சகத்தேயிருத்தி, நினைவை இறைவனுக்காக்கி ஆவியும், யாக்கையும் ஆனந்தமாய் கசிந்துருகி இறைவனின் இன்ப அன்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடேற்றத்தைப் பெறவிரும்புபவனுடைய எண்ணம் அது ஈஸ்வரதியானமாகவே இருக்கும். அவனுடைய பொக்கிஷம் ஈஸ்வரனே. அவனுடைய கண்ணும் கருத்தும் எப்பொழுதும் ஸ்வரனிலேயேயிருக்கும். அவனுடைய எண்ணமும் செயலும் நல்லனவே. அவை பிறருக்கு எத்தகைய கேட்டையும் விளைவிக்காது.

ஞானக்கதிர்

"எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ எம்பெருமான் திருவடியை எண்ணினல்லால்" என்று அப்பர் சுவாமிகளும், "சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்தன் கண்ணிணை நின்திருப்பாதப் போதுக்காக்கி, வந்தனையும் மலர்க்கேயாக்கி" என்றும், "அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய் ககிந்துருக" என மணிவாசகரும், "துய்யநின் பாதத்தில் அன்பும்" என அபிராமிப்பட்டரும், "இறவாத இன்ப அன்பு வேண்டும். அறவாநீயாடும் போது உன்னடியின் கீழிருக்க வேண்டு" மெனகாரைக்காலம்மையாரும் பாடினார்கள். இந்தப் பாடல்கள் மூலம் அழிவில்லாத - அழிக்கமுடியாத உண்மையான பொக்கிஷம் இறைவன் மீது நாம் வைத்திருக்கின்ற இறவாத இன்ப அன்பு ஒன்றேயென்பதை அறிகின்றோம்.

பிரகிருதி வசப்பட்ட மனிதனுக்கு உலக வாழ்க்கை ஒரு கடப்பாடாகும். அதற்காக கடவுளை மறந்து விடக்கூடாது. வாழ்க்கைக்காக எத்தகைய தொழிலைச் செய்தாலும் எண்ணம் ஈஸ்வரனை விட்டகலக்கூடாது. என்றென்றும் ஈஸ்வரசிந்தனை இருக்க வேண்டும். நிலையான - உறுதியான அழியாத செல்வமாகிய இறையன்பைக் காசு கொடுத்தோ, கைக்கூலி கொடுத்தோ வாங்கிவிட முடியாது.

ஏழாலைக் குமரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபக்தி விளைவித்த அற்புதம்

ஒருவர் இருந்தார். அவருக்கு குருநாதர் ஒருவர் தேவை. 'நமக்கு நல்ல ஆன்மீக வழியைக் காட்டுவதற்கு குருநாதர் ஒருவர் கிடைக்க வேண்டும், என்று அவர் ஏங்கினார். பலநாள் அதற்காகத் தவித்தார்.

ஞானகுரு என்ற நிலையில் இருக்கும் ஒருவரும் அவருக்கு கிடைப்பதற்கான வழி ஒன்றும் தெரியவில்லை. அப்போது அவரது மனைவி ஒரு யோசனை கூறினார்.

''இதோபோருங்கள் .. நாம் இருவரும் இப்போது புறப்பட்டு காட்டுக்குப் போவோம். நடுக்காட்டில் ஒரு நடைபாதையின் ஓரமாக உட்கார்ந்து கொள்வோம். அந்த வழியாக நமக்கு முன்னால் வரும் மனிதர் யாரோ, அவரையே நாம் நம் குருவாக ஏற்றுக்கொள் வோம்'' என்று கூறினார்.

இவரும் அதை ஆமோதித்து, இருவரும் காட்டுக்குச் சென்று நடுக்காட்டில் ஒரு பாதையின் ஓரமாக உட்கார்ந்தனர்.

அப்போது திருடன் ஒருவன் தான் களவாடிய பொருள்களோடு அந்த வழியாக வந்தான். இவர்கள் அவனைப் பார்த்தவுடன், ஓடிச்சென்று அவனது காலில் விழுந்து, கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர்.

''எங்களை வாழ வைக்க வந்த வள்ளலே!நீங்கள் தான் எங்களுக்கு ஞானகுருவாக இருந்து ஒரு நல்ல ஆன்மீக வழியைக் காட்ட வேண்டும்; எங்களது பாவங்களைப் போக்கவேண்டும். எங்களுக்கு அருள்புரிய வேண்டும்'' என்றுவேண்ட ஆரம்பித்தனர்.

திருடனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன இது... பழி பாவங்களுக்கு அஞ்சாமல் வழிப்பறி செய்வது நமது தொழில்.இவர்களுக்கு நாம் எப்படி வழிகாட்டுவது?'' என்று அந்தத் திருடன் யோசித்தான். 'சரி, உண்மையைச் சொன்னால்தான் .. இவர்கள் நம்மை விடுவார்கள் போல் இருக்கிறது!' என்று நினைத்து அவன், ''ஐயா, நான் ஒரு திருடன்...நீங்கள் நினைப்பது போல் இல்லை'' என்றான்.

ஆனால் அவர்களோ,''அதெல்லாம் இல்லை...நீங்கள்தான் எங்களது குருநாதர்'' என்று மிகவும் உறுதியாக இருந்தார்கள். திருடன் பார்த்தான். 'இப்போது இங்கே தப்பிப் பதற்கு என்ன வழி?' என்று யோசித்தான். ''சரி... நீங்கள் இரண்டு பேரும் அப்படியே பத்மாசனம் போட்டு இங்கு உட்காருங்கள்... கண்களை மூடிக்கொள்ளுங்கள். நான் சொல்லும் வரையில் நீங்கள் அப்படியே உட்காந்திருக்கவேண்டும்'' என்றான்.

அதைக் குருநாதரின் கட்டளையாக அவர்கள் ஏற்றுக் கொண்டு, கண்களை மூடி உட்கார்ந்து விட்டனர்.

திருடன் உடனே, 'தப்பிப்பதற்குச் சரியான நேரம்' என்று நினைத்து மெதுவாக அங்கேயிருந்து நழுவி ஓடியே போய்விட்டான். அதன்பிறகு அவன் காவலர்களிடம் மாட்டிக்கொண்டான். அவர்கள் அவனை சிறையில் அடைத்தனர்.

இவர்கள் இருவரும் இங்கேயே அப்படியே உட்கார்ந்திருந்தனர். இவர்களின் மன உறுதி சிவபெருமானையே யோசிக்க வைத்தது. உடனே சிவனும் பார்வதியும் இவர்களின் முன்னால் வந்து காட்சி அளித்தனர்.

''இறைவனும் இறைவியும் வந்திருக்கிறோம். பக்தர்களே எழுந்திருங்கள்!'' என்று கூறினார்கள்.

ஆனால் அவர்களோ, ''பெருமானே! எங்கள் குருநாதரின் அனுமதியின்றி இந்த இடத்தை விட்டு நகரமாட்டோம்'' என்று சொல்லிவிட்டார்கள்.

எனவே இறைவனும், இறைவியும் உடனே அந்நாட்டு அரசனின் கனவில் தோன்றி ,சிறையில் இருக்கும் திருடனை விடுதலை செய்யுமாறு கூறினார். அதோடு அவர்கள் திருடனின் கனவிலும் தோன்றி விவரம் கூறினர். திருடன் விடுதலையானதும் அந்தக் காட்டுக்குச்சென்றான்.

அவர்கள் அப்படியே அங்கேயே இன்னமும் கண்களை மூடியபடியே உட்கார்ந் திருந்தார்கள்.

திருடன் அவர்களிடம், ''உங்கள் குருநாதன் வந்திருக்கிறேன். கண்களைத் திறந்து பாருங்கள்!'' என்றான். அப்போதுதான் அவர்கள் கண்களைத் திறந்தனர். திருடன் நடந்த நிகழ்ச்சிகளை அவர்களிடம் தெரிவித்தான்.

அப்போது ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி ஒலித்தது.

''உங்களது தீவிர குருபக்தி போற்றுதலுக்குரியது. குருவிடம் பக்தியும் பணிவும் நம்பிக்கையும் கொண்டிருப்பவர்கள் எதையும் எல்லாவற்றையும் பெறுவர். அப்படியே நீங்களும் அனைத்தையும் அடைவீர்கள் என்று அந்தக் குரல் கூறியது.

தம்பதியர்களின் ஞானத் தெளிவை பெற்றனர். திருடனும் திருந்தி நல்லவனானான்.

******

மாணவர்கள் ஏன் கல்வியை வெறுக்கின்றார்கள்?

பணக்காரர் ஒருவர் தன் வசதிக்கேற்ப உயர்ந்த ரக நாய் ஒன்றை வளர்த்தார். பாசத்தையும் பணத்தையும் கொட்டி வளர்க்கப்பட்ட நாய்க்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அதைப் பராமரிக்கும் பணியாள், நாயை மருத்துவரிடம் காண்பித்து அதற் கான மருந்தையும் வாங்கி வந்தான். அதற்குக் கொடுக்க வேண்டிய மருந்து திரவ வடிவில் இருந்தது. மருந்து, நாய்க்குக் கொடுக்க வேண்டும். உணவு சாப்பிடவே பாடாய்ப்படுத்தும். கிட்ட நெருங்கும் சமயம் ஓட்டம் எடுக்கும். மருந்து கொடுக்க அருகில் சென்றால் ஓடி ஓடி அலைக்கழித்தது. வேலையாட்கள் துணையோடு ஒருவாறாகப் பிடித்து அதன் கால் களை இருவர் பிடித்துக் கொண்டு ஒருத்தர் அதன் வாயருகே மருந்தை எடுத்துச் சென்றபோது திமிறி மருந்துப் பாட்டிலைத் தட்டிவிட்டது. பாட்டில் உடைந்து மருந்து தரையில் சிதறியது. கீழே சிதறிய மருந்தினை மிகுந்த ஆர்வத்துடன் நக்கிச் சாப்பிட ஆரம்பித்தது அந்த நாய். எவ்வளவு எளிமையான வழி. நாய் மருந்தை வெறுக்கவில்லை. அதனைக் கொடுத்த முறையை, வலிந்து திணித்த முறையை மட்டுமே விரும்பவில்லை.

இக்கால கல்விமுறையும் இப்படித்தான். கல்வி, அறிவை வளர்க்கும் கருவி. அதனைக் கல்வியாளர்கள் உரிய முறையில் இன்றைய இளைய தலைமுறைக்கு வழங்கினால் அவர்கள் சாதனை படைப்பார்கள்.

- இறையன்பு -

அலெக்ஸாண்டரின் அன்பு

இந்த உலகையே வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்துடன் படையெடுத்துச் சென்றவர் மாமன்னர் அலெக்ஸாண்டர்.

அவர் பாரசீகத்தை வென்றபின்னர், ஹிர்கேனியா நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். காடு மலைகளையும், இடைப்பட்ட நதிகளையும் கடந்து செல்ல வேண்டிய கடுமையான பயணம் அது.

வழியில் குறுக்கிட்ட நதியிலிருந்து கிரேக்க வீரர் கள் தங்கள் தோள் பைகளில் நீரை நிரப்பிக் கொண் டனர். அவர்கள் சென்ற நேரம் கடுமையான கோடை காலம். வெப்பமும் வரட்சியும் அவர்களை மிகவும் சோர்வுக்குள் ளாக்கியது.

ஒருநாள், நண்பகல் நேரம். அலெக்ஸாண்ட ருக்கு வெயிலில் நாக்கு வரண்டு போனது. அவரால் பேசக் கூட முடியவில்லை. அச் சமயத்தில் குதிரை வீரர்களி டம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட தோள் பைகளில் கூட இல்லை.

ஆனால் ஒரேயொரு வீரனிடம் மட்டும் தண்ணீர் சிறிதளவே இருந்தது. அவன் அந்தத் தண்ணீரை தன் தலைக் கவசத்தில் நிரப்பி அலெக்ஸாண்டரிடம் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட அலெக்ஸாண்டர், தண்ணீர்த் தாகத்தால் தவித்த மற்ற வீரர்களைப் பார்த்தார். அவர்களும் தாகத்துடன் அவரையே பார்த்தார்கள்.

''எமது உயிரை விட மேலான என் அன்புக்குரிய படைவீரர்களாகிய நீங்கள் எல்லோரும் தாகத்தால் செத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் எனக்கு மட்டும் எதற்குத் தண்ணீர்?'' என்று அலெக்ஸாண்டர் கேட்டார்.

'' எங்கள் பிள்ளைகளுக்காக'' என்றான் ஒரு வீரன்.

''என்ன, உங்கள் பிள்ளைகளுக்காகவா?''

'' ஆமாம் மன்னா! தண்ணீர்த் தாகத்தால் நாங்கள் நா வறண்டு இறந்து போனாலும் கூட நீங்கள் மட்டும் பிழைத்திருந்தால் எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றி விடுவீர்கள் அல்லவா?'' என்றான் இன்னொரு வீரன்.

''எங்கள் பிள்ளைகள் இறந்துவிட்டால் கூட நாங்கள் வேறு பிள்ளைகள் பெற் றுக் கொள்வோம். ஆனால் எங்கள் அரசர் இறந்துவிட்டால் நாங்கள் அநாதை களாகி விடுவோம்'' என்றான் மற்றொரு வீரன்.

அவர்கள் பேச்சைக் கேட்டு அலெக்ஸாண்டருக்கு உள்ளம் நெகிழ்ந்தது.

'' வீரர்களே, உங்களுக்கு உங்கள் அரசன் உயிர் முக்கியம் என்றால், எனக்கு என் வீரர்களாகிய உங்கள் உயிர் தான் முக்கியம். நான் மட்டும் எப்படிக் குடிக்க முடியும்?'' என்றவாறே அந்தத் தலைக் கவசத்திலிருந்த தண்ணீரைக் கீழே கொட்டினான்.

அலெக்ஸாண்டரின் அன்பைக் கண்டு படைவீரர்கள் நெகிழ்ந்தார்கள்.

- சொன்னவர் அன்புமணி -

இப்படியும் சிந்திக்கலாமோ

ஒரு வயதான தம்பதிக்குத் திருமணமாகி முப்பந்தைந்து ஆண்டுகள் முடிந்து, கணவனது ஆறுபதாவது பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாடிக்கொண்டிருந்தனர்.

அந்தக் கோலாகல கொண்டாட்டத்திற்கு இடையே மின்னல் கீற்றாக வந்து உதித்து ஒரு தேவதை உங்களின் இணைபிரியாத வாழ்க்கையைப் பாராட்டுகிறேன். எனது அன்புப் பரிசாக ஆளுக்கொரு வரம் தருகிறேன். கேளுங்கள் என்றது.

மனைவி கேட்டாள்-இத்தனை காலம் எங்கள் வாழ்க்கை ஏழ்மையிலேயே கழிந்துவிட்டது. அடுத்த ஊரைக்கூடப் பார்க்க இயலாத பரிதாப நிலைமையிலேயே இருந்து விட்டோம். உலகம் முழுக்க நாங்கள் சுற்றிப்பார்க்க உதவி செய்தாலே போதும்.

கண்களை மூடி கைகளைச் சுழற்றி''ஜீபூம்பா'' சொல்லி அடுத்த வினாடியே கைநிறைய விமான ரிக்கட்டுக்களை வரவழைத்துத் தந்தது அந்தத் தேவதை.

இப்போது கணவனின் முறை. மனதிற்குள் ஒரு சபலம். மனைவியை ஓரக்கண்ணால் பார்த்தபடி தயங்கிக்கேட்டான்-என்னைவிட முப்பது வயது குறைந்த பெண்ணுக்கு நான் கணவனாக வேண்டும்.

அவனது விபரீத ஆசையைக்கேட்டு திடுக்கிட்ட தேவதை சற்றே யோசித்து கண்களை மூடி ''ஜீபூம்பா'' சொன்னது.

அவன் தனது மனைவியைவிட முப்பது வயது கூடுதலான குடுகுடு கிழவனாக மாறியிருந்தான். நடக்கக் கூட முடியாதபடி.

தேவதை கொடுத்தது வரமா? சாபமா?வஞ்சனைக்கு வஞ்சனையா-

- சு.கி.சிவம் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்

உறவினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற் படுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். எங் காவது வெளியில் புறப்படும் நேரத்தில் யாராவது வந்து தொந்த ரவு கொடுக்கலாம். பல நாட்களாக தள்ளிப்போட்டு வந்த வெளி யூர் பயணங்கள் செல்லலாம். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம்.

இடபம்

அலட்சியம், கவனக்குறைவு இல்லாமல் எந்த வேலையையும் அக்கறையோடு செய்வீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். சில விடயங்களில் எதிர்பாராத வீண் செலவுகள் ஏற் படலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங் களைத் தேடி வரலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

மிதுனம்

வழக்கமான சில வேலைகளை மாற்றி அமைக்கலாம். வெளி யூர்களில் இருந்து உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். கையில் இருக்கும் பொருளை யாருக்காவது கொடுத்து விட்டு மற்றவர் களிடம் உதவி கேட்பீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

கடகம்



இரண்டு நாள்களாக நீடித்த மனக்குழப்பங்களில் இருந்து இன்று விடுபடுவீர்கள். தாய் வழி உறவுகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந் திக்க நேரிடலாம். கடன் மிகுதி ஒன்றை தீர்க்க முற்படுவீர்கள்.

சிங்கம்

பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்கள் சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பெற் றோர் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அர சியல்வாதிகள் பரபரப்பாக செயற்பட நேரிடலாம். வீண் அலைச் சல்கள் நேரும்.

கன்னி

புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். தம்பதியர் இடையே பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமைப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். பணிபுரிவோர் தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.

துலாம்

மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்பதை பற்றி கவ லைப்படாமல் மனதில் நினைத்ததை செய்வீர்கள். நண்பர்கள் வழி யில் பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகளை பகுட்டம், பட படப்புடன் செய்ய நேரிடலாம். சிலர் தங்களின் வேலைகளை உங்கள் தலையில் சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளலாம். மதிப்பு, மரியாதை கூடும்.

விருச்சிகம்

எதிர்பார்த்த உதவி கிடைக்காமல் போனாலும், எதிர்பாராத உதவி கிடைக்கலாம். நண்பர்கள் அல்லது முன்பின் தெரியாதவர்களுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். வரவுகள் வந்தாலும் அதற் கேற்ற செலவுகள் உண்டு. உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதி கரிக்கும் அல்லது குறைக்கும் சம்பவங்கள் நடக்கலாம். பக்தி நாட் டம் கூடும்.

தனுசு

கணவன் மனைவி இடையே மனஸ்தாபம் ஏற்படலாம். சிக் கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவுகள் உருவாகலாம். பஸ் பயணங்களுக்காக நீண்ட நேரம் காத்திருக் கலாம். தொழில், வியாபார ரீதியான அலைச்சல்களுக்கு ஆட் படலாம். ஆசை, ஆசையாய் பொருள் ஒன்றை வாங்கி அதில் திருப்தி இல்லாமல் போகலாம்.

மகரம்

அடமானமாக வைத்த பொருளை மீட்கலாம். நண்பர்கள் சில ருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு கிடைக் கலாம். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்தி களைக் கேட்கலாம். வேலையாட்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். உறவினர் ஒருவர் உங்களைப் பாராட்டிப் பேசி காரியம் சாதிப்பர்.

கும்பம்

எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளையும் பெறலாம். தொழில் ரீதியான ரகசியங்களை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். பெண்கள், கலைஞர்கள் நினைத்த காரியங்கள் நடக்கலாம். அதிக செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியும். குடும்பப் பெருமை பற்றி மற்றவர் களிடம் பேசுவீர்கள்.

மீனம்

கொடுத்த வாக்கை எப்பாடு பட்டாவது காப்பாற்ற முற் படுவீர்கள். பழைய நண்பர் ஒருவரை எங்காவது வெளியில் செல்லும் இடத்தில் சந்திக்க நேரிடலாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை எதிர்கொள்ளலாம். மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள்.

சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று

யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித் துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

சர்மிலா பற்றிக்தோமஸ்
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

ஜீ.சி.ஈ. சாதாரணதரத்தில் 8ஏ,சி எனும் பெறுபேறு கிடைத்தமை யையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். பரீட்சைக் காலத்தில் எவ்வித இடையூறுகளும் வராமல் காத்த ஆண்டவனுக்கும் நான் இப்பெறு பேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு காரணமாக இருந்த என் கல்வியில் அக்கறையோடு செயற்பட்ட எனது பாடசாலை அதிபருக்கும், கல்வி புகட்டிய என்னை கல்வியில் வளர்ச்சியடையச் செய்த எனது பாடசாலை ஆசிரியர் களுக்கும் ஆரம்பக் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் நான் ஆரம்பக்கல்வி பாடசாலையாகிய மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்திற்கும் எனக்கு பலவகையிலும் ஊக்க மளித்த எனது குடும்பத்தினருக்கும் நான் கல்வி பயின்ற தனியார் கல்வி நிலைய ஆசிரி யர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். நான் உயர் தரத்தில் உயிரியல் பிரிவை தேர்ந்தெடுத்துள்ளேன். உயர்தரத்தில் சிறப்பாக கல்வி பயின்று நல்ல பெறுபேற் றைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பெரியவர்களது ஆசியும் அருளும் இறையாசியும் தொடர்ந்து கிடைக்கவேண்டி நிற்கிறேன்.

கலினா சிவராசா
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

எனது ஆரம்பக் கல்வியை காசிநாதர் வித்தியாலயத்தில் பயின்றேன். பின்பு புலமைப் பரீட்சையில் சித்தி யடைந்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்குள் காலெடி எடுத்து வைத்தேன். இப்பாடசாலையில் நான் ஆங்கில மொழி மூலத்தில் கல்வி பயின்று வருகின்றேன். நான் 7ஏ,பி,சி என்ற பெறுபேற்றைப் பெறுவதற்கு அருள்புரிந்த இறைவனுக்கும், எனக்கு ஆக்க மும் ஊக்கமும் அளித்த எமது பாடசாலை அதிபர், பிரதி அதிபர், வகுப்பாசிரியர்கள், தரம் 6 தொடக் கம் 11 வரை கல்வி கற்பித்த பாட ஆசிரியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் எனக்கு எப்போதும் உறுதுணையாக இருந்த எனது பெற்றோர், உடன்பிறப்புக்கள், பரீட்சையின் போது பல துன்பங் களிலிருந்து என்னைக் காப்பாற்றிய உறவினர்கள், மிகமிக ஆர்வத்துடன் எனக்குக் கல்வி கற்பித்த தனியார் நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இயலுமானவரை இப்பாடசாலையிலும்,தனியார் நிறுவனத்திலும் கற்பிக்கின்ற பாடங்களை அன்றன்றே வீட்டில் சென்று படித்தமையே எனக்கு இந்தப் பெறுபேற்றைப் பெற உதவியது. நான் எனக்கு நேரம் கிடைக்கும் வேளைகளில் படித்துக்கொள்வேன். நான் தொடர்ந்து எனது உயர்தரக் கல்வியை உயிரியற் பிரிவில் ஆங்கில மொழி மூலத்தில் கல்வி கற்றுவருகின்றேன். நான் [illegible] திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற என்னாலான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றேன்.

சிந்துஜா நவரத்தினம்
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

எனது ஆரம்பக்கல்வியை கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கற்று முதல் தர மாணவியாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின் 6 தொடக்கம் இப்பாடசாலையில் ஆங் கிலப் பிரிவில் கல்வி கற்கிறேன். எமது பாடசாலை அதிபர், உப அதி பர், ஆசிரியர்கள், எனக்கு ஆங்கிலப் பாடத்தில் விருப்பத்தை ஏற்படுத்திய ஆசிரியர்கள் இவர்கள் என்றென்றும் மறக்க முடியாதவர்கள். இந்த வகையில் ஜி.சீ.ஈ. சாதார ணதரம் வரை எனக்கு பாடசாலையிலும் சரி, தனியார் கல்வி நிலையங்களிலும் சரி விருப்புடன் அணுகி எனக்கு அளித்த பாடங்களே இன்று நான் சிறந்த பெறுபேறான 6ஏ,3சி பெறக் காரணமாக அமைந்தது.

எனது பெற்றோர் எனது கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். தினமும் எனது கல்வி முன்னேற்றம் பற்றி விசாரித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். என் பெற்றோரின் அனுமதியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் ஆங்கில மொழி மூலம் உயிரியற்பிரிவைக் கற்றுக் கொள்ள விரும்பியுள்ளேன். நான் எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வர விரும்புகிறேன். இதற்கு இறைவனின் அருளை வேண்டி நிற்கிறேன்.

பிரியந்தி தர்மராஜா
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

எனது ஆரம்பக்கல்வியை மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஆரம்பித்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தியடைந்து எனது கல்வியைத் தொட ர வடமராட்சியில் மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையில் இணைந்தேன்.

தரம் 6முதல் எனது கல்வியை ஆங்கில மொழி மூலத்தில் கற்று வரும் நான் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 7ஏ.2பி பெற்றுச் சித்தியடைய அருள்புரிந்த இறைவனுக்கும் பெற்றோருக்கும் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த உறவுகளுக் கும், நண்பிகளுக்கும் சிறப்பாகக் கல்வியைச் சேவையை மேற் கொண்ட எமது பாடசாலை அதிபர், உபஅதிபர், பகுதித் தலை வர்கள், ஆசிரியகள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் கள், எனக்கு ஆரம்பக்கல்வி அளித்த ஆசிரியர்கள் அனைவருக் கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் என் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த உத விய பத்திரிகை ஊடகத்தினருக்கும் எனது நன்றிகள் .

தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரத்தையும் ஆங்கிலமொழி மூலத்தில் தொடரும் நான் [illegible] விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்துள்ளேன். எதிர்காலத்தில் ஒரு சிறந்த வைத்தியராகி மக்களுக்கு சேவை செய்வதே என் இலட்சியமாகும்.

நேர்காணல்: மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுப் போய்விட்டதா? கவலையை விடுங்கள்!

இதோ ஒரு புதியகருவி

தொழில் முயற்சியாளர் புதிய கண்டுபிடிப்பினை வெளிக்கொணர பல காலம் செல்லலாம். அதற்குப் புதிய கண்டு பிடிப்பு மக்கள் மத்தியில் பிரபல்யமடைய காலதாமத மேற்படுதலும் கண்டு பிடிக்கப்படும் ஒரு பொருளை சந்தைப்படுத்துவதற்கு உற்பத்தியாளரிடம் உள்ள மூலதனமுமே கண்டு பிடிப்புகள் வெளிவர பெரும் சுமையாக உள்ளது.

இக் கட்டுரை எழுதுவதற்கு ஒரு புதிய கண்டு பிடிப்பினை உற்பத்தி செய்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் அதனை வெளி உலகுக்குத் தெரியாமல் இருப்பதே காரணமாகும். நமது பிரதேசத்தில் சகோதரர்கள் இருவரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உற்பத்தி இன்றைய கால கட்டத்தில் எல்லோருக்கும் பயன்படக்கூடியது என்பதை கருத்தில் கொண்டே, மோட்டார் சைக்கிள் பாவனை மிகவும் அதிகரித்துள்ளது. குறுகிய தூரமென்றாலும் அதிக தூரம் என்றாலும் தனியார் பாவனையாக தற்போது மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்கள் இல்லாத வீடுகளை விரல்விட்டு எண்ணும் அளவுக்கு மோட்டார் சைக்கிள் பாவனை அதிகரித்துள்ளது.

வீதிகளில் செல்லும் மோட்டார் சைக்கிள் சில்லில் உள்ள காற்றுக் குறையவும், இல்லாமல் போகவும் வாய்ப்புகள் நிறைய உண்டு, அவ்வாறு சில்லுக்குக் காற்று இல்லாத நிலை ஏற்படும்போது மோட்டார் சைக்கிளை உருட்டிச் செல்வதால் மோட்டார் சைக்கிள் சில்லுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். அவ்வாறு காற்றுப் போகும் பட்சத்தில் மோட்டார் சைக்கிளில் சில்லைக் கழற்றிக்கொண்டு செல்ல வேண்டிய நிலை மோட்டார் சைக்கிளோட்டிக்கு ஏற்படுகிறது.

அவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சத்தில் மோட்டார் சைக்கிள் சில்லுக்கு கீழ் பொருத்தி சில்லுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் கொண்டுசெல்லக் கூடியதாக இந்தப் புதிய கண்டுபிடிப்பு காணப்படுகிறது. சிறிய வாகனங்களில் பொருத்தப்படும் வில்லுத் தகடுகளும் ஆறு சில்லுகள் பொருத்தப்பட்டு புதிய கண்டுபிடிப்பு உள்ளது. புதிய கண்டுபிடிப்பில் உற்பத்திச் செலவு ஆயிரம் ரூபா வரையுள்ளது. சுமார் ஒன்றரைக் கிலோ வரையான நிறையுடைய இந்தக் கண்டுபிடிப்பினை அனைத்து மோட்டார் சைக்கிள்களிலும் எடுத்துச் செல்லக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பழைய நீதிமன்றுக்கு முன்பாக உள்ள மிதிவண்டி திருத்தும் கடையை நடத்தும் நவரத்தினம் ஜெயசீலன், நவரத்தினம் ஆனந்தசீலன் ஆகிய சகோதரர்களே இதனைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்துள்ளனர்.

இந்த இருவரும் ஏற்கனவே இருவர் செலுத்தக்கூடிய மிதிவண்டியையும் 5 அடி உயர மிதிவண்டியையும் தயாரித்து அறிமுகம் செய்து மூலதன வசதியில்லாததால் அதனைத் தொழிலாக நடத்த முடியாமல் கைவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்புகள் 2008ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மாகாண மட்ட கண்காட்சியில் முதலிடம் பெற்றுள்ளது.

இந்த உற்பத்திக் கண்டுபிடிப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில் மக்கள் ஆதரவு வழங்கின் உற்பத்தி திறன் அதிகரித்து உற்பத்திச் செலவு குறைந்து குறைவான விலையில் இதனைக் கொள்வனவு செய்ய முடியுமென நம்பப்படுகின்ற அதே வேளையில் எமது பிரதேச உற்பத்தி உலக நாடுகளில் பிரபலமடையுமெனவும் நம்புகிறோம்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

1987இல் மகா வித்தியாலயத்தின் அதிபராக ச.சின்னத்தம்பி பொறுப்பேற்றார். இவ்வித்தியாலயம் கொத்தணி மூலாதாரப் பாடசாலையாக இருந்தமையால் கொத்தணி அதிபராகவும் செயற்பட்டார். இவரது சேவைக்காலத்தில் வித்தியாலயத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் முகாமிட்டிருந்ததால் கல்வி நிலைக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. வித்தியாலயத்தில் இருந்த பல தளபாடங்கள் சேதமடைந்து காணாமற்போயின. அதிபர் ச.சின்னத்தம்பியின் முயற்சியால் அக்காலப்பகுதியில் ஏற்பட்ட பாதிப்புகள் நிவர்த்தி செய்யப்பட்டது. இவரது சேவைக்காலத்தில் வித்தியாலயத்திற்கான விஞ்ஞான ஆய்வுகூடம், 90' X 25' மாடிக் கட்டடம் ஆகியவை அமைக்கத் தளமிடப்பட்டது.

ச.சின்னத்தம்பி அதிபராக இருந்த காலத்தில் இ.கயிலைநாதன்,தம்பு கந்தையா, ஐ.சின்னையா ஆகியோர் துணை அதிபர்களாகப் பணியாற்றினர்.

இவ்வித்தியாலத்தில் அதிபர்களாக கடமையாற்றிய ச.சின்னத்தம்பியும், இ.கயிலைநாதன் ஆகியோர் தென்மராட்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக பதவி உயர்வு பெற்றுச் சென்றனர்.

அதன் பின்னர் உபஅதிபராக தம்பு கந்தையா வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்றார். இவரது முயற்சியினால் வித்தியாலத்திற்கு மேற்குப் புறத்தேயுள்ள காணியை கொடிகாமம் வணிகப் பழைய மாணவர்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் பாடசாலைக்கு உரித்தாக்கப்பட்டது.

திருநாவுக்கரசு நாயனார் மடாலயத்திலிருந்து ஆரம்பமாகிய இவ்வித்தியாலயம் அன்றைய மடாலய சபையினரின் தூர நோக்கு இன்று பெருவிருட்சமாக வளர்ந்து நிழல் கொடுக்கிறது. மடாலயம் இருந்த கட்டடம் பாடசாலையாக மாற்றப்பட்டதால் சபை இயங்குவதற்கு அருகில் உள்ள காணியில் மீளவும் ஒரு கட்டடத்தைக் கட்டி நிர்வகித்துவரும் வேளை பாடசாலையின் வளர்ச்சியினால் அக்கட்டடத்தையும் பாடசாலைக்கு வழங்கியது மட்டுமன்றி மடாலயத்திற்குச் சொந்தமான நிலபுலன்களையும் பாடசாலைக்கு வழங்கியது மடாலய சபை. 2003.03.12ஆம் திகதி வித்தியாலயத்தின் பொது நூலகம் திறக்கப்பட்டமை வித்தியாலய உயர்தர மாணவர்கள், ஆசிரியர்களின் கல்விக்குப் பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி, பிரதேச பொதுமக்கள் ஆகியோர் நூலகத்திற்குத் தேவையான புத்தகங்களை வழங்கினர்.

75 வருடங்களுக்கு முன்னர் 200 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட மாணவர்களுடனும் 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுடனும் இயங்கி வருகிறது.

1971ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வித்தியாலய வளர்ச்சியில் கூடுதலான பங்களிப்பைச் செய்து வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். வித்தியாலயத்தில் மக்கள் மண்டபம்1, மக்கள் மண்டபம்2 ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தமை பவளவிழாவையொட்டி நிர்மாணிக்கப்பட்ட மண்டபத்திற்குரிய கூரைத் தகடுகளை கொள்வளவு செய்து வழங்கியமை, ஏனைய செலவுகளைப் பொறுப்பேற்றதுடன் தற்போது ஜேர்மன் தொழில்நுட்ப வலய (ஜீரிஸற்) நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்திற்கான கூலிச் செலவினைப் பொறுப்பேற்று சிறந்த பணிகளை ஆற்றிவருகின்றன. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்று கொடிகாமம் வணிகர் மன்றமும் வித்தியாலய வளர்ச்சிக்கு சிறப்புப் பணியாற்றி வருகிறது. பாடசாலை விஸ்தரிப்புக்கென காணி கொள்வனவுக்கு நிதி உதவி வழங்கியதுடன் மாணவர்களின் குடிநீர் வசதிக்கென தண்ணீர்த் தாங்கியினையும் அமைத்துக் கொடுத்துள்ளன.

(தொடரும்)

தென்மராட்சி வலம்

தொகுப்பு: ஜயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை – 08

வினாத்தாள் – I

நேரம் : 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.

✱ 1-30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்கோடிடுக.

✱ வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

01. 1)  2) 3)

02. 1) 2) 3)

03. இங்குள்ள உருக்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



இவற்றுள் சரியான விடை

1) AB, CD 2) AC, BD 3) AD, BC

04. இங்குள்ள உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



இவற்றுள் சரியான விடை

1) AD, BF, CE 2) AD, BE, CF 3) BD, EF, AC

05. இக்கடதாசியை நான்காக மடித்தால் கிடைக்கக்கூடிய அமைப்பு பின்வருவனவற்றுள் எது?

1) 2) 3)

06. அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.



.....

1)  2) 3)

✱ எண்கோலங்களை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

07. 

1) 22 2) 30 3) 60

08. 

1) 6 2) 3 3) 15

09. உருவில் அம்புக்குறி காட்டிய திசையில் 60 பற்களைக் கொண்ட பெரிய சில்லு ஒருமுறை சுழலும்போது 12 பற்களைக் கொண்ட சிறிய சில்லு எத்தனை முறை சுழலும்?



1) 1
2) 5
3) 8

✱ இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

10. அழகிய அந்த ஓடையில் ..... என நீர் ஓடியது.
1) சலசல 2) கலகல 3) மளமள

11. அந்தக் குளத்தில் ..... நிறையக் காணப்பட்டன.
1) மீன் 2) மீன்கள் 3) மீனும்

12. ராஜாவும் ..... தோட்டத்திற்குச் சென்றனர்.
1) ரவியுடன் 2) ரவி 3) ரவியும்

13. பறவைகள் அப் ..... மரத்தில் கூடு கட்டி வாழ்ந்தன.
1) சிறிய 2) பெரிய 3) கரிய

14. வாகீசன் ..... அயராது உழைத்தான்.
1) அல்லும் பகலும் 2) தட்டுத்தடுமாறி
3) பட்டும் படாமலும்

✱ பிழையான கருத்து இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

15. 1) மனிதன் இரண்டு கால்களையுடைய முலையூட்டியாவான்.
2) பூனை அனைத்துமுண்ணியான முலையூட்டியாகும்.
3) முயல் ஊனுண்ணி முலையூட்டியாகும்

16. 1) இலங்கை 25 மாவட்டங்களையுடைய ஒரு தீவாகும்.
2) இலங்கை 9 மாகாணங்களையுடைய ஒரு கண்டமாகும்.
3) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவாகும்.

✱ பின்வரும் தொடர்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

17. "முயற் கொம்பு தேடி அலைந்தது போல"
1) வழி தவறி நிற்பவனிடம் வழி கேட்டல்.
2) இல்லாத பொருளைத் தேடி அலைதல்.
3) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்.

18. "பசுத்தோல் போர்த்த புலி"
1) நல்லவர் போல் நடிக்கும் தீயவர்களும் உள்ளனர்.
2) நல்லவர்கள் சிலர் தீயவர்கள் போல் நடிப்பர்.
3) நல்லவர்கள் உள்ள உலகில் தீயவர்களும் உள்ளனர்.

✱ சரியான ஒழுங்கைக் காட்டும் விடையின் கீழ் கோடிடுக.

19. 1) பகல் ⇒ மாலை ⇒ காலை ⇒ இரவு
2) இரவு ⇒ பகல் ⇒ காலை ⇒ மாலை
3) காலை ⇒ பகல் ⇒ மாலை ⇒ இரவு

20. 1) தங்கம் ⇒ வெள்ளி ⇒ வெண்கலம் ⇒ இரும்பு
2) தங்கம் ⇒ வெண்கலம் ⇒ வெள்ளி ⇒ இரும்பு
3) தங்கம் ⇒ இரும்பு ⇒ வெள்ளி ⇒ வெண்கலம்

✱ வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

21. 5342 ⇒ 4532 ⇒ 3452 ⇒ ____

1) 5342 2) 5432 3) 4352

22. ருத்ரா ⇒ ராகவி ⇒ விமலா ⇒ ____

1) லாவண்யா 2) லாணியா 3) லசியா

✱ பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

கண்ணனின் சகோதரி பார்வதி, பார்வதியின் தாயார் வேலம்மாள், தந்தை கணபதிப்பிள்ளை. கண்ணனுக்கு லதா என்ற பெண்பிள்ளையும், பார்வதிக்கு ரவி என்ற ஆண் பிள்ளையும், ரவிக்கு ரம்மியா என்ற தங்கையும் உண்டு.

23. ரம்மியாவுக்கு கணபதிப்பிள்ளை என்ன உறவு முறை?
1) மாமா 2) பாட்டன் 3) பெரியப்பா

24. ரவி லதாவை என்ன உறவுமுறை சொல்லி அழைப்பான்?
1) தங்கை 2) மைத்துனி 3) மாமி

25. இதனை மடித்து தாயக்கட்டை ஒன்று தயாரிக்கும் போது பெறக்கூடியது,





1) 2) 3)

(13 ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. C என்ற பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் அமைவது.
1) E 2) A 3) F

27. ஒரு சதுர வடிவக் காணியைச் சுற்றி சம இடைவெளிகளில் 40 வேலிக் கட்டைகள் நடப்பட்டிருந்தால், அக்காணியை ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது எத்தனை வேலிக்கட்டைகள் தெரியும்?
1) 9 2) 10 3) 11

28. பங்குனி மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமையாயின் சித்திரை மாதத்தில் எத்தனை திங்கட்கிழமைகள் வரும்?
1) 3 2) 4 3) 5

✱ பின்வரும் பாடலை வாசித்து சரியான விடையைத் தெரிவுசெய்க.

காகம் போல் கூடி வாழ வேண்டும்
கன்று போல் துள்ளியாட வேண்டும்
மேகம் போல் எங்கும் செல்ல வேண்டும்
மழை போல் நன்மை பொழிய வேண்டும்.

29. காகம் போல் கூடி வாழ்தல் என்பது,
1) சத்தம் போட்டு வாழ்தல்.
2) ஒற்றுமையாக வாழ்தல். 3) ஏமாற்றி வாழ்தல்.

30. மேகம் போல் எங்கும் செல்லவேண்டும். இதிலுள்ள எழுவாய்.
1) மேகம் 2) வேண்டும் 3) நாம்

✱ சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. இவ்வுருவில் எத்தனை கனவுருக்கள் உள்ளன?



.....

32. 4 மனிதர்கள் 3 நாட்களில் செய்யும் வேலையை 12 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்துமுடிப்பர்?

.....

33. 3 மனிதர்களை உபசரிக்க ஒரு போத்தல் குளிர்பானம் தேவைப்படுகிறது. எனின், அவ்வாறான 10 மனிதர்களை உபசரிக்க எத்தனை போத்தல் குளிர்பானம் வாங்கவேண்டும்?

.....

✱ படங்களின் உதவியோடு விடை தருக.



34. அப்பிள் பழமொன்றினதும் மாம்பழமொன்றினதும் விலை யாது?

.....

35. அன்னாசிப்பழமொன்றின் விலை யாது?

.....

36. மாதுளம் பழங்கள் இரண்டினது விலை யாது?

.....

37. இம்முக்கோணியில் 1/4 பகுதியை நிறந்தீட்டுக.

✱ A என்பவர் கிழக்குத் திசைநோக்கி 100m நடந்து சென்று அங்கிருந்து வடக்குத் திசைநோக்கி 30m நடந்து அங்கிருந்து மீண்டும் கிழக்காக 40m நடந்து அங்கிருந்து தெற்கு நோக்கி 30m நடந்து சென்று நிற்கிறார்.

38. அவர் பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து தற்போது எவ்வளவு தூரத்தில் நிற்கிறார்?

.....

39. அவர் தனது பயணத்தில் வலதுபுறமாக எத்தனை தடவைகள் திரும்புகிறார்?

.....

40. பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து பார்க்கும் போது அவர் தற்போது எத்திசையில் நிற்கிறார்?

.....

(நிறைவுற்றது)

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்:
P.பரமதயாளன்,
சது/ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம், வீரமுனை.

கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035

கல்விச்சாலைக் காட்சிகள்.....

அல்லாரை தெற்கு ஐங்கரன் முன்பள்ளிச் சிறார்களின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளை உதவி முகாமையாளர் சி.சிவசுப்பிரமணியம் கொடியேற்றுவதையும் - இடைவேளை நிகழ்வாக இடம்பெற்ற முன்பள்ளிச் சிறார்களின் உடற்பயிற்சிப் போட்டியின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்: தெள்ளவன்)

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அதிபர் சு.நடராசலிங்கத்தையும் அவரது பாரியார் திருமதி அ.நடராசலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாட்சாலை அதிபர் கோ. பத்மநாதன், தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் வண.ஜோண்செல்வம் நிற்பதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வான உடற்பயிற்சிக் காட்சியின் ஒரு பகுதியையும் படங்களில்காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

கிளிநொச்சி,மே 21

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்துக்கு அருகிலுள்ள ''ரி.ஆர்.ரெக்'' மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கல்லூரியின் பழைய மாணவர்களையும், ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021-2228093.
E-mail : alliancejaffna@yahoo.com

Learn French the French Way
French Classes

சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.
பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ALLIANCE FRANCAISE யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
புதிய பிரிவுகள் மிக விரையில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்
மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(98540)

நீங்காத நினைவில் ஐந்தாண்டுகள்

திருமதி
கந்தையா சிவமணி
(ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை)
மண்ணில்: 04★01★1944
விண்ணில் 16★05★2005

தீராத வேதனையால்
தினம் தினம் துடிக்கின்றோம்
மாறாத சோகத்தில்
ஐந்தாண்டு கழிந்ததம்மா
ஓயாத உன் நினைவால்
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டாய்.

இல.56/24,ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

கணவர், குடும்பத்தினர்.
(98523)

பரமனடி சேர்ந்த 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி நகுலேஸ்வரி
குகேந்திரன் (பிறேமா)
திதி: 21.05.2010

அன்புள்ள அம்மா
இன்றுடன் ஐந்து
ஆண்டுகள் ஆகிவிட்டன
வஞ்சகன் காலன் உம் நெஞ்சில்
குடிகொண்டு எம்மிடம் இருந்து
உம்மைப்பிரித்தான் ஆறுமோ இத்துயர்?
ஆறாது இனிமேலும்.....

உங்களது ஆன்மா சாந்தியடைய
இறைவனைத் துதிக்கும்

இல.6, சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

கணவர்: ந.குகேந்திரன்,
மகன்: கு.பிருந்தாவன்.
(98408)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

தேவராசா கீர்திபன்
தோற்றம்: 16★03★1996 மறைவு:31★05★2009

மண்ணிலே பிறந்தவர்கள்
மண்ணிற்குள் போவதுண்டு
காவோலை விழமுன்பே
குருத்தோலை விழுந்ததேனோ!
இருகண்ணில் நடுவினிலே
எமக்குள்ளே ஒருகண்ணாய்
பூமிதனில் தோன்றிவிட்டு
எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?

பத்தமேனி,
செட்டிசீமா வீதி,
அச்சுவேலி. (98548)

குடும்பத்தினர்.

சண்டிலிப்பாய் இந்துவில் இன்று மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே 21

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த 2009ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30மணியளவில் கல்லூரியின் உப அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா கௌரவவிருந்தினராகவும், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப்பணிப்பாளர் சி.கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஆசிரியர் ஸ்ரீ நந்தகோபன் எழுதிய ''எமது நல்வாழ்வு'', மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிவரும் ''வைகறை-04'' எனும் சஞ்சிகைகளும் வெளியிடப்படவுள்ளன.

கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்தநடராஜா ஆகியோர் வாழ்த்துரைகளையும் நிகழ்த்தவுள்ளனர். (9)

81மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள்

யாழ்ப்பாணம்,மே 21

''கடவுளின் சொந்தக் குழந்தைகள்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் இனங்காணப்பட்ட பார்வைக்குறைவுடைய 81மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக்கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் காலை 9.30மணிக்கு நடைபெறும். இந் நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உரிய நேரத்தில் கலந்துகொண்டு மூக்குக்கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

அரியாலை மீள்குடியேற்ற கிராமங்களுக்கு திட்டவரைபு தயாரிக்கும் பணி இன்று

யாழ்ப்பாணம்,மே 21

அரியாலை தென்கிழக்கு, அரியாலை கிழக்குக் கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்றத் திட்டவரைவு தயாரிக்கும் நோக்கிலான மக்கள் பங்களிப்புடனான கிராமியக் கணிப்பீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அரியாலை தென்கிழக்கு (ஜே/89) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மணியம்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களுக்கும் அரியாலை கிழக்கு (ஜே/90) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நாவலடி, பூம்புகார், அரியாலை முனங்கு ஆகிய கிராமங்களுக்குமான திட்டவரைவு தயாரிப்பதற்காக மக்கள் பங்களிப்புடனான மதிப்பீடு நடைபெறும்.

இந்தச் செயற்றிட்டத்தில் குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ-10)

வாழைக்குலை உற்பத்தியாளர் சங்கத்திற்குக் கட்டடம்

கோப்பாய்,மே 21

நீர்வேலியில் அமைந்துள்ள வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கென யு.என். டி.பி. திட்ட அனுசரணையுடன் சுமார் ஆறரை லட்சம் ரூபா செலவில் பணிமனைக் கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சங்கத்தின் நாளாந்தச் செயற்பாடுகள் இலகுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-72

STUDY IN
LONDON CYPRUS SINGAPORE

யாழ்ப்பாணத்தில் விசேட UK விசா தொடர்பான கருத்தரங்கும் நேர்முகத்தேர்வும்

22 மே 2010
(சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

இடம் :
வீரசிங்கம் மண்டபம் - கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
மாணவர்களின் UK விசா சம்மந்தமான சகல சந்தேகங்களுக்கும் விளக்கமளிப்பதுடன் மாணவர்களை நேர்முகத்தேர்வு செய்து விசாக்கள் உறுதிப்படுத்தப்படும்.

9 a.m to 12.30p.m. UK visa information seminar | 1.30p.m to 5p.m. student interview

HOTLINE
KASTHURI 0773640136
HAKEEM 0722476000
SUMEIRA 0773640130
ABDULLAH 0774074203

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721, 0114 335044
Web: www.millmba.com
E-mail: mbaslt@yahoo.com

Cyprus visa can be arrange within 2 week

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
நகுலேஸ்வரி கனகசுந்தரம்
தோற்றம் 16★03★1927 மறைவு 21★04★2010

கடந்த 21.04.2010அன்று அமரத்துவமடைந்த அமரர் நகுலேஸ்வரி கனகசுந்தரம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி மூலமாக அனுதாபம்தெரிவித்தும், இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் நினைவாக இன்று (21.05.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

E.S.சத்தியநாதன்
குடும்பத்தினர்.

மானிப்பாய். (98367)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **செல்லச்சாமி நவரட்ணசாமி**
(சாமியார் -மயிலிட்டி)
திதி : பூர்பபக்க தசமி (22.05.2010)
மலர்வு 08★06★1957 உதிர்வு 02★06★2009

அன்பாலும் பண்பாலும் எம்மை
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்தாலும்,
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்.

நாளை (22.05.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

ந.சூரியகுமாரி (விஜயா),
தீருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.
(J/391,கிராமசேவகர் அலுவலகம் அருகில்). (98384)

என்றும் நினைவுடன்:
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

01.07.1991

* ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்துக்கு முரணாக அமெரிக்காவின் ''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' வானொலியின் ஒலி பரப்பு நிலையம் ஒன்றை இலங்கையில் நிறுவ அரசு அனுமதியளித்ததற்கு இந்தியா ஆட்சேபம் தெரிவிப்பு.

* இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்திய மத்திய இணை அமைச்சர் வாழைப்பாடி இராமமூர்த்தி தெரிவிப்பு.

02.07.1991

* திடீர் தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் தயாராகிவருவதாக கொழும் பில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரி விப்பு.

* புதிய இந்திய அரசு, இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் விட யத்தில் கடைப்பிடிக்க வேண்டிய அணுகு முறை குறித்து முடிவு செய்வதற்காக பல மட்டங் களில் ஆலோசனைகளை மேற் கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

03.07.1991

* ஆனையிறவு, பரந்தன் பகுதி களில் அரசபடையினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் கார ணமாக பரந்தன் இரசாயனத் தொழிற் சாலை உட்பட பல கட்டடங்கள் சேதமடைந் துள்ளதாகத் தெரிவிப்பு.

* பிரிட்டனில் தஞ்சம் கோருவோர் விடயத்தில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கப் போவதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

04.07.1991

* தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தி ருக்கும் ஈழத் தமிழ் அகதிகளால் பாது காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்ப தாக அவர் களை வேறு மாநிலங்களுக்கு இடமாற்றம் செய்யுமாறு தமிழக மாநில அரசு, இந்திய மத்திய அரசைக் கேட்டி ருப்பதாகத் தெரிவிப்பு.

* இலங்கைக்கான தனது நிதி உதவி களை இடைநிறுத்தி வைப்பதாக பிரிட் டன் அறிவிப்பு.

05.07.1991

* கொழும்பு நகர் உட்பட மேல் மாகாணத்தில் அகதி முகாம் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கும் பிற மாவட் டங்களைச் சேர்ந்தோர் பொலிஸ் நிலை யத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண் டும் என அரசு உத்தரவு.

* கூட்டுப்படைத் தலைமை அலுவ லகம் மீதான கார்க் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என சந்தேகிக்கப்பட்ட வரதன் என்பவர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிப்பு.

06.07.1991

* தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் விவகாரம் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இந்திய அர சுடன் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹோரத் புது டில்லிக்குச் செல்லவுள்ளதாக அறிவிப்பு.

* இலங்கைக் கடற்படையினருக் கென தரம் குறைந்த குண்டுகள் மற்றும் வெடிபொருள்களை வாங்கியதாக மேற் கொள்ளப்பட்ட முறைப்பாடு குறித்து கணக்காய்வாளர் நாயகம் விசாரணை நடத்த முடிவு.

07.07.1991

* சேவையில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்களுக்கும் அதன் பிரதிநிதி களுக்கும் உரிய பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிப்படுத்தும் விதத்தில் அரசு டன் பிரெஞ்சு மருத்துவக்குழு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக அறிவிப்பு.

* கொழும்பு மாநகரின் கேந்திரப் பகுதிகளில் ஆயுதப் படையினருடன் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளதாகத் தெரிவிப்பு.

08.07.1991

* வன்முறை வழியில் செயற்பட மாட்டோம் என விடுதலைப் புலிகள் அறிவித்தால் மட்டுமே எதிர்காலத்தில் அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வரும் என ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

* கொழும்பு கூட்டுப்படைத் தலை மையக குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர் பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் கைது செய்யப் பட்டிருப்பது சுதந்திரக் கட்சித் தலை வியும் எதிர்க்கட்சித் தலைவியுமான சிறி மாவோவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி யுள்ளதாகத் தெரிவிப்பு.

09.07.1991

* புதிதாக நான்காவது படைப்பிரிவு ஒன்றை அமைக்கும் இலங்கை இராணு வத்தின் திட்டத்தை நிதிப்பற்றாக் குறை யைக் காரணம் காட்டி நிதியமைச்சு நிரா கரித்து விட்டதாகத் தெரிவிப்பு.

* இலங்கையிலிருந்து பிரிட்டிஷ் தூதுவர் கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப் பட்ட விவகாரத்தை ஐ.நா. சபைக்குக் கொண்டு செல்ல பிரிட்டிஷ் சார்பில் முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாகத் தெரிவிப்பு.

10.07.1991

* விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக் கள் ஆரம்பமாவதற்காக எத்தகைய வாய்ப் பும் தற்போதைக்கு இல்லையென கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

* சர்வகட்சி மகாநாட்டில் பங்கு பற் றிய நான்கு தமிழ்க் குழுக்கள் இனப்பிரச் சினைத் தீர்வுக்கென ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த 8 அம்ச அடிப்படைத் திட்டத் தின் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட் டுள்ளதாகத் தெரிவிப்பு.

11.07.1991

* சர்வதேச மன்னிப்புச்சபை தான் வெளியிட்ட 1991 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் வடக்கு - கிழக்குப் பகுதி களில் அரச படைகள் மேற்கொண்டு வரும் அராஜக நடவடிக்கைகளைக் கண் டித்துள்ளதாகத் தெரிவிப்பு.

* வடபகுதியில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு மோதல்களில் இலங்கைப் பாதுகாப்புப் படைத் தரப்பில் 9 பேர் உயி ரிழந்ததாகத் தெரிவிப்பு.

12.07.1991

* இலங்கை இராணுவத்தின் மிகப் பெரிய முகாம்களில் ஒன்றான ஆனையி றவு முகாம் மீது உக்கிரத் தாக்குதலை மேற்கொண்டு வரும் விடுதலைப் புலி கள் முகாமைத் தமது நெருக்குப் பிடிக் குள் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிப்பு.

* ஆனையிறவில் தற்போது நடை பெறும் மோதல், இதுவரை நடைபெற்ற சண்டைகளில் மிகக் கடுமையானதாகும் என பாதுகாப்புத் துணை அமைச்சின் செயலாளர் வோல்டர் பொன்னான்டோ தெரிவிப்பு.

13.07.1991

* ஆனையிறவு முகாமில் உப்பள உல்லாச விடுதி காவல் தளத்தைக் கைப் பற்றிய மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 25 பேர் பலியானதாகத் தெரிவிப்பு.

* ஆனையிறவு இராணுவ முகாமுக் குள் படுகாயமடைந்து மீட்கப்பட முடியாத நிலையில் 30 க்கும் அதிகமான அரச படையினர் சிக்கிக் கொண்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

14.07.1991

* விடுதலைப் புலிகள் நேற்றிரவு மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஆனையிறவு இராணுவ முகாமின் மற் றொரு பிரதான தளம் விடுதலைப் புலி கள் வசம் வீழும் நிலையில் இருப்பதா கத் தெரிவிப்பு.

* ஆனையிறவில் அரச படையினரு டனான போரில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கும் போராளிகளுக்கு தம்மாலான உதவிகளை வழங்க தமிழ் மக்கள் போட்டி போட்டுவருவதாகத் தெரிவிப்பு.

15.07.1991

* விடுதலைப் புலிகளின் முற்றுகை யால் ஆனையிறவு முகாமுக்குள் சிக்கி யிருக்கும் இராணுவத்தினரை மீட்க கடல் வழியாக கட்டைக்காட்டில் தரையிறங்கிய படையினரை புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கி வருதாகத் தெரிவிப்பு.

* ஆனையிறவு முகாமுக்குள் சிக்கி யிருந்த காயமடைந்த 6 படையினர் உரிய சிகிச்சை இன்றி உயிரிழக்க நேரிட்டதாக இந்திய வானொலி தெரிவிப்பு.

நக்ஸலைட்டுக்களுக்கு எதிரான நடவடிக்கை;

புலிகளுடனான போர் வியூகங்களை இந்தியாவுடன் பகிர இலங்கை முடிவு

கொழும்பு,மே21

இந்திய நக்ஸலைட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங் கத் தயார் என இலங்கை அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தி யதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனு பவங்களை பகிர்ந்து கொள்ளத் தயார் என இலங்கை, இந்தியாவிடம் தெரிவித்துள்ளது.

நக்ஸலைட்டுக்களுக்கு எதிராக வெற்றிகரமான போராட்டத்தை முன்னெ டுப்பதற்கு இந்திய துணை இராணுவக் குழுக்களுக்கு, இலங்கைப் படையினர் பயிற்சிகளை வழங்க முடியும் என குறிப்பி டப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனிடம் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

நக்ஸலைட்டுக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரதேசங்களிலிருந்து அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் மட்டும் இலங்கை அரசு உதவி வழங்க உள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. (அ-சி)

களனிப் பல்கலைக்கழகத்தில் மாணவக் குழுக்கள் மோதல்

கொழும்பு,மே 21

இரு மாணவர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றை அடுத்து களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த அனைத்துப் பீடங்களும் மறு அறிவித்தல் வரையில் மூடப்பட்டுள்ளன.

மேற்படி மோதல் சம்பவத்தைக் கட் டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள கிரி பத்கொடை பொலிஸார், பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் நேற் றுக் காலை 8 மணிக்குள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று உத்தரவு பிறப் பித்துள்ளனர்.

குறித்த பல்கலைகழகத்தின் விஞ் ஞானம் மற்றும் கலைப்பிரிவைச் சேர்ந்த 8 மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பொன்று மோதலாக மாறியதை அடுத்து அப்பகுதியில் நேற்றுமுன்தினம் காலை பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் காயமடைந்த சில மாணவர் கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர். சம்பவத்தை அடுத்து அவ் விடத்துக்கு விரைந்த பொலிஸார் மோதலைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர். அத்துடன், மாணவர்களை யும் கலைத்துள்ளனர்.

(சி)

ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவையில் இணைக்குக

கல்வி அமைச்சருக்கு மகஜர்

கொழும்பு,மே21

ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப் பட்டவர்களை ஆசிரியர் சேவை 3 II இக்கு உள்வாங்குமாறு கூறி இலங்கை ஆசிரியர் உதவியாளர் சங்கம் கல்வி அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் உதவியாளர்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர் கையொப் பமிட்டு அனுப்பிவைத்துள்ள அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

பல வருடங்களாக தொண்டராசிரியர்க ளாகச் சம்பளமில்லாமல் கடமையாற்றி யவர்களையே ஆசிரியர் உதவியாளர்க ளாக நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறான நியமனம் ஏற்கனவே வழங்கப்படவில்லை. இது புதிரானதாகும். தற்போதைய கல்வி அமைச்சர் ஆசிரியர் சேவையை நன்கு உணர்ந்தவர் என்ற காரணத்தால் தற்போது ஆசிரியர் சேவை 3II இக்குள் உள்வாங்கு வதுடன் ஆசிரியர் பயிற்சியை முடித்த பின்னர் 3I இக்குள் உள்வாங்குமாறும் கேட் கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் மாகாணக் கல்வி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோர் களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(சி)

கொழும்புத் திரைப்பட விழாவை தமிழ்த் திரையுலகம் புறக்கணிப்பு

கொழும்பு,மே21

இலங்கையில் நடக்கவிருக்கும் சர்வ தேச திரைப்பட விழாவைப் புறக்கணிக்க தமிழ்த் திரையுலகினர் முடிவு செய்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தே அதனைப் புறக்கணிப்பதாக தமிழ் திரையுலகினர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளனர்.

மேலும், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாள திரைப்பட உலகினரும் இந்த சர்வதேச திரைப்பட விழாவைப் புறக் கணிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்பில் எதிர்வரும் ஜூன் 4, 5,6 ஆம் திகதிகளில் சர்வதேச இந்திய திரைப் பட விழா நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

மெனிக்பாம் நலன்புரி கிராமத்திலுள்ள 7,350 பேர் 11 நாள்களில் மீள்குடியேற்றம்

கொழும்பு, மே 21

மெனிக்பாம் நலன்புரி கிராமத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 62,810 இடம் பெயர்ந்த மக்களில் சுமார் 7,350பேர் எதிர் வரும் 11 நாள்களில் மீளக்குடியேற்றப்பட வுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட கராச்சி மற்றும் கண்டவெளி போன்ற பிர தேசங்களிலேயே இந்த மக்கள் மீள்குடி யேற்றப்படவுள்ளனர்.

இந்த நடவடிக்கை நேற்று முதல் எதிர் வரும் 31ஆம் திகதி வரை முன்னெடுக்கப் படவுள்ளது என்று இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான இணைப்பதிகாரி தெரிவித் தார்.

மெனிக்பாம் நலன்புரி கிராமத்துக்குட் பட்ட 11 நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ள மக்களில் ஒரு தொகையினரே இவ்வாறு மீள்குடியேற்றப்படவுள்ளனர் என்று தெரிவித்த மேற்படி இணைப்பதி காரி, குறித்த மக்கள் மீள்குடியேற்றப்பட் டதன் பின்னர் வவுனியாவிலுள்ள நலன் புரி நிலையங்களின் எண்ணிக்கை ஆறாகக் குறைக்கப்படும் என்றும் கூறினார்.

அத்துடன், அந்த நலன்புரி நிலையங்க ளில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கையும் 55,460ஆக குறைக்கப் படும்.

அவ்வாறு முகாம்களில் எஞ்சுவோரை யும் வெகுவிரைவில் மீள்குடியேற்ற நட வடிக்கை எடுக்கப்படும்- என்றார் அவர்.

இதேவேளை மன்னார் பிரதேசத்தி லுள்ள நலன்புரி முகாம்கள் அனைத்தும் தற்போது மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கான இலவசப் பயிற்சிப் பட்டறை

* நீங்களும் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?
* ஊடகத்துறை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதா?

உங்களுக்கான ஐந்து நாள் இலவச பயிற்சிப் பட்டறைக்கு இன்றே விண்ணப்பியுங்கள்!

காலம்-ஜூன் 2ஆம்திகதி முதல் 6ஆம் திகதி வரை.



விடயங்கள்:

* செய்தி அறிதல்
* செய்தி மூலங்கள்
* புலனாய்வுச் செய்தியிடல்
* செய்தித் தலைப்புகள்
* கட்டுரை எழுதுதல்
* செய்திக் கட்டுரைகள்
* பக்க வடிவமைப்பு
* இணையத்தளச் செய்திகள்
* ஊடகத்துறையில் தொழில்நுட்பம்
* பத்திரிகைத்துறையின் சவால்கள்
* பத்திரிகையாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

பயிற்சிப்பட்டறை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

அனுமதிக்கு சுய விவரங்களை தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பவேண்டிய முகவரி:

(விண்ணப்பங்களை mediatechnic@gmail.comஎன்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்).

'பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

21.05.2010

சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் - காதம்பரி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

தேஜோவதன்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (21.05.2010) தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார். தேஜோவதனை அம்பாள் துணை கொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழிகாலம் வாழ வாழ்த்தி ஆசிகூறுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: சுதுமலை தாத்தா,அம்மம்மா, வேம்பிராய் பாட்டா, பாட்டி, பெரியப்பாமார் குடும்பம், அத்தைமார் குடும்பம், கொழும்பு நதி மாமா, மாமி மனஸ்வினி, நிஷேவிதா, தாத்தா, சுதுமலை பாலா மாமா, அண்ணாமார், மச்சான்மார், மச்சாள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

சிவஸ்ரீ.
ஜ.மஹேஸ்வரக்குருக்கள் குடும்பம்.
(தாத்தா-அம்மம்மா)
ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
சுதுமலை.

(95404)

நவக்கிரி தேவாலய திருவிழா

நவக்கிரி புனித றீற்றம்மா தேவாலயத்தின் திருவிழா நேற்று வியாழன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திரிதின ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

திரிதின ஆராதனையில் சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

(ஒ-11)

லண்டனில் உயர் கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு

லண்டனில் உயர்கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு
July/Sep. Intake
சேவைகள் : A Rate Collegess University உடனடி அனுமதி பெற்றுக்கொடுத்தல், விண்ணப்பங்கள் நிரப்பிக்கொடுத்தல், ஆவணங்கள் தயார் செய்தல். Financial Sponsorship ஏற்பாடு செய்தல் மற்றும் இலவச வழிகாட்டல் Re Apply முதலியன.
தொடர்பு:- 0113042949, 0779218444

(98381)

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை

பரிசளிப்பு விழா-2010

இடம் : அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மண்டபம்
காலம் : நாளை(22.05.2010) சனிக்கிழமை
நேரம் : மு.ப. 9.30 மணி

தலைவர்
அருட் தந்தை யோ.அ.யோசுதாஸ்(அதிபர்)
பிரதம விருந்தினர்
உயர்திரு. கு.கிருஷ்ணகுமார்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அமைச்சு, வடமாகாணம்)
சிறப்பு விருந்தினர்
திரு. அ.டெனி கொன்ஸ்ரன்ரைன்
(நுண் நிதி நிபுணர், GTZ)

பழைய மாணவர், பெற்றோர் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இளவாலை. கல்லூரி குடும்பம்.

(98411)

ஆசார்யாபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் வைகாசித் திங்கள் 9 ஆம் நாள் (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை உத்தர நட்சத்திரமும் தசமித் திதியும் அமிர்தயோகமும் கூடிய காலை 7.26 மணிமுதல் 9.26 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபவேளையில் எமது சிரேஷ்ட புத்திரன்

சிரஞ்சீவி மு.தயாபரன் ஐயா
(Cert.in Sivacharya Education)

அவர்களுக்கு வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் திருவருள் துணைகொண்டு ஆசார்யாபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்) செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவில் கலந்துகொண்டு பெரியோர்கள் இளங்குருவை ஆசீர்வதித்தும் ஏனையோர் குருவின் ஆசியைப் பெற்றும் இவ்விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசார்யாபிஷேக பிரதமகுரு (தீட்சாகுரு)
சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு
பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம் பிரதிஷ்டா சிரோன்மணி
சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் J.P
பிரதம குரு, ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்,வல்வெட்டித்துறை சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்

இங்ஙனம்: தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி சு.முத்துக்குமாரசாமி ஐயர்
மனோன்மணி அம்மா தம்பதிகள்
ஆவரங்கால், புத்தூர்.

(98403)

திறந்த சுதந்திர மாணவர் குழு 2010 திறந்த பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தல்

2010 இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் **திறந்த சுதந்திர மாணவர் குழுவில்** போட்டியிட விரும்புவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் 25ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்

டீசான்	யோஜப்
0777326807	0714126075

தவறிவிட்டது

14.05.2010 அன்று கோப்பாய் பிரதேச பிரிவில் சிமெந்து எடுக்கும்போது சரவணை சுதாகரன் என்பவரது I.C (710661766V) வெள்ளைப் பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு அறியத்தரவும்.

சரவணை சுதாகரன்
யோகபுரம், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

வீடு வாடகைக்குத் தேவை

உத்தியோகம் பார்க்கும் குடும்பத்துக்கு சாவகச்சேரியில் வாடகைக்கு வீடு தேவை.
தொடர்பு - 0776935338

காணி விற்பனைக்கு

நல்லுணி வீதி,வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் 7½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (சைவப்பிரகாச வித்தியாசாலை அருகில்)

தொடர்பு : ந. இராஜேஸ்வரி,
பிள்ளையார் வீதி, வடலியடைப்பு.

(98541)

CAR FOR SALE

DAEWOO RACER(BLACK) Brand New 1994 -18 - XXXX, A/C Power Steering, Power Shutter, alloy wheels, Dual Fuel(Petrol/Gas)
Contact - 0779672372

புதிய இடத்தில் எமது சேவைகள்

பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா பிறீ இங்க் றபர் ஸ்ராம் 300ரூபா வரிக்கணக்கோ, அளவோ இல்லை. உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ள யாழ். நகரில்.

S.S.யசோதரன் ஆட்ஸ்,
[illegible]
(வண்ணை சிவன் கோயில் அருகில்)

SAJI BEAUTY PARLOUR

நாளாந்தம் மாறிவரும் உலகில் நீங்களும் நவீன முறை Beautician ஆக!

எமது நிறுவனம் உங்களுக்காக இந்தியாவில் பயிற்றுவிக்கப்பட்ட சிறந்த நீண்ட கால அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களை யாழ்மண்ணில் அறிமுகப்படுத்துகின்றது.

* புதியவகை சிகை அலங்காரம், முடிசுருட்டுதல், அயனிங் மற்றும் தலைமுடிக்கு வர்ணம் தீட்டுதல்.
* பேசியல் (Facial All types)
* மணப்பெண் அலங்காரம் (Bride Make up)
* கண் இமை, கண் புருவம் அழகுபடுத்தல்
* சரும உரோமங்களை அகற்றுதல்
* நகங்களை அழகுபடுத்தல்
* புதியவகைச் சாதனங்களை அறிமுகம் செய்தல்.
* பொண்டன் வகை கேக் செய்தல் (Wedding cakes)

மேற்படி கற்கை நெறிகளை எம் நிறுவனத்தில் நீங்கள் சிறந்த முறையில் பயிலலாம்.

குறிப்பு:-வெளிநாடு செல்லவிருக்கும் பெண்களுக்கு அத்த நாட்டின் தேவைக்கு ஏற்ப குறுகியகாலத்திலும் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பகுதிநேர வகுப்புக்களையும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ளலாம்

ஆரம்பம்:- 29.05.2010 சனிக்கிழமை

தொடர்புகளுக்கு:
170,இராமநாதன் வீதி,
பல்கலைக்கழக அருகாமையில்,
திருநெல்வேலி.

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

Tel No :- 0776008839, 0777316453.
E-mail:- vptharan@yahoo.com

Siva Brothers

கொக்ககோலா குளிர்பானப் பிரியர்களே நீங்கள் வாங்கும் ஒவ்வொரு போத்தல் மூடிகளிலும் 50/-,100/-,200/-,500/-,1000/- Reload உண்டு. அத்துடன் குளிர்பானம் இலவசம் என இருக்கும் மூடிகளுக்கு இலவசமாகச் சோடா வழங்கப்படும். ஆகவே கொக்கோலா கொம்பனி குளிர்பான வாடிக்கையாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.

Distributor சிவா பிறதர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212225688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கல்வியற் கல்லூரியில் கற்கை நெறிகளை மீண்டும் ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்குக

நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,மே21

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் கற்கை நெறிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலியுறுத்தல் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தனதுரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி வளாகத்தில் 2009,2010 ஆண்டுக்கான புதிய மாணவர்களை உள்வாங்கி கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

வவுனியா தேசிய கலவியற் கல்லூரி வளாகம் கடந்த 08.02.2009ஆம் திகதி தொடக்கம் 12.11.2009ஆம் திகதி வரை இடம்பெயர்ந்தோர் முகாமாகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் கல்லூரியின் ஆய்வு கூடங்கள், விளையாட்டுப் பயிற்சிக் கூடங்கள், விரிவுரையாளர் அறைகள், மாணவர் விடுதிகள், விரிவுரை மண்டபங்கள், உணவுச்சாலை அவற்றின் மலசலகூடங்கள், நீர் இணைப்புக்கள், மின்சார இணைப்புக்கள், குளியலறைகள் என்பவை அடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் முற்றுமுழுதாக மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்கை நெறிகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக பல்வேறு மட்டங்களில் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் இதுவரை உரிய வகையில் பலனளிக்கவில்லை.

இதனால் தமிழ் மொழி மூலமான ஆசிரியக் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வன்னிப் பிரதேசத்தில் காணப்படும் உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றான கல்வியற் கல்லூரியும் முழு அளவில் இயங்காத நிலையில் காணப்படுகின்றது எனவே அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (50-201)

சைக்கிள்,மரதன் ஓட்ட போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம்,மே 21

ஸ்பேஸ் றொக்கட் விளையாட்டுக் கழகம் நடத்தும் மரதன் ஓட்டம், வேக நடை, புதுமுக வீரர்களுக்கான சைக்கிள் ஓட்டம், 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான சைக்கிள் ஓட்டம், 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு கோட்டைச் சுற்றாடலில் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் ஆண்களுக்கான (130 கி.மீ) சைக்கிள் ஓட்டப் போட்டி (யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - யாழ்ப்பாணம்) பெண்களுக்கான (30 கி.மீ) சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன நடைபெறவுள்ளன.(50-6)

'லைலா' புயலினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடப் பணிப்பு

யாழ்ப்பாணம்,மே 20

கடந்த செவ்வாய்க்கிழமை குடாநாட்டைத் தாக்கிய' லைலா' புயலினால் பொது மக்களுக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து மதிப்பிட்டுத் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணி தொடக்கம் நேற்று முன்தினம் அதிகாலை வரை குடாநாட்டைத் தாக்கிய 'லைலா' புயலினால் விவசாயிகள்,வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரச அதிபரின் இந்தப் பணிப்புரையை அடுத்து அனர்த்த நிவாரண அமைச்சின் இயற்கையினால் பாதிப்படைந் தோருக்கான பட்டியலில் பிரதேச செயலாளர்கள் விவரங்களைப் பதிவு செய்து வருகின்றனர். (50-6-121)

கடந்த இரண்டுதினங்களாக கடலுணவுகளின் விலைகள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,மே 21

குடாநாட்டில் கடந்த இரண்டு தினங்களாக மீனவர்களின் வலைகளில் பெருந் தொகையான கடலுணவுகள் சிக்குவதால் அவற்றின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரத்தில் ஒரு கிலோ 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட மீன்கள் கடந்த இரு தினங்களாக ஒரு கிலோ 200 ரூபாவாக விலை வீழ்ச்சி கண்டுள்ளன.

குருநகர், கொட்டடி, பாசையூர் மீன் சந்தைகளில் நேற்றுக் காலை பெருந்தொகையான மீன்கள் வந்து சேர்ந்தன.

இந்த மீன்கள் வியாபாரிகள் கொள்வனவு செய்து 'கூலர்' வாகனங்களில் எடுத்துச் செல்கின்றனர்.

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றத்தையடுத்துப் பருவப் பெயர்ச்சிக் காற்று வீச ஆரம்பித்துள்ளமையால் பெரும் தொகையான மீன்கள் மீனவர்களின் வலைகளில் சிக்குகின்றன. இவை சந்தைகளில் குவிவதனாலேயே இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

நாட்டில் நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாடு அடுத்த 10 நாள்களுக்குள் நீங்கிவிடும்

நாடாளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே21

நாட்டில் தற்போது நிலவிவரும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு அடுத்த 10 நாள்களுக்குள் நீங்கிவிடும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

மருந்துத் தட்டுப்பாடுகள் தொடர்பாக அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நிகழ்த்திய விசேட கூற்றுக்கு விடையளித்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு இருந்தமை உண்மைதான். அது ஒரு மாதத்துக்கு முன் இருந்த நிலைமை ஆனால் இப்போது அவற்றுள் அதிகமான வற்றுக்கான தட்டுப்பாடு நீங்கிவிட்டது.

இன்னும் 10 நாள்களுக்குள் மருந்துத் தட்டுப்பாடு முழுமையாக நீங்கிவிடும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'சேலைன்' கொண்டுவரப்பட்டுள்ளது. அதை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மெதமன், மொரின் போன்ற மருந்து வகைகள் இந்தவாரம் கிடைக்கும். இந்தியாவில் இருந்து மருந்துவகைகள் இறக்குமதி செய்யப்படும்போது இந்திய அரசிடம் அனுமதி பெற்ற மருந்து உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே மருந்து கொள்வனவு செய்யப்படும்.

இது தொடர்பாக நான் கடந்த வாரம் இலங்கைக்கான இந்தியத் தூதுவரைச் சந்தித்துப் பேசினேன். சில மருந்துப் பொருள்களின் கொள்வனவுக்காகத் தற்போது விசேட குழுவொன்று இந்தியா சென்றுள்ளது. அடுத்தவாரம் அந்தக் குழுவின் ஊடாக மருந்துகள் கொண்டுவரப்படும்.

உலகில் மருந்து மாபியாவும், ஆயுத மாபியாவும் உள்ளன. மருந்து மாபியாவிடம் சிக்காது வெளிப்படைத் தன்மையுடன் மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணம் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளின் முறையான ஒருங்கிணைப்பின்மையே - என்றார். (சி)

உள்ளூராட்சிச் சபைகளுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டிகள் அடுத்தவாரம்

யாழ்ப்பாணம்,மே21

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான இவ்வருடத்திற்குரிய முகாமைத்துவப் போட்டிகள் அடுத்த வாரம் தொடக்கம் நடத்தப்படவுள்ளன.

பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை என மூன்று பிரிவுகளாகப் பேட்டிகள் நடத்தப்படவுள்ளன. பிரதேச சபைகளுக்கு மாவட்ட, மாகாண மட்டத்திலும், நகர சபை, மாநகர சபைகளுக்கு மாகாண மட்டத்திலும் போட்டிகள் நடத்த ஏற்பாடாகியுள்ளன.

பிரதேச சபைகளுக்கான மாவட்ட மட்டப் போட்டிகள் மே 23ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையும் மாகாண மட்டப் போட்டிகள் மே31ஆம் திகதி தொடக்கம் ஜூன் 7ஆம் திகதி வரையும் நடை பெறும்.

நகரசபைகள், மாநகரசபைகளுக்கிடையிலான மாகாணமட்டப் போட்டிகள் ஜூன் 7ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை நடத்தப்படும்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடத்தப்படும் போட்டி மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை மேலும் திட்டமிட்டு போட்டித் தன்மையுடன் திகழக் கூடிய வாறும் -

அவற்றின் மொத்த செயலாற்று கையை அதிகரிப்பதன் மூலம் வினைத் திறன்மிக்க பயனுறுதி வாய்ந்த பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்களை வழிநடத்து வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

கிறிஸ்தவர்களின் திருவிழிப்பு ஆராதனை நாளை

கொழும்புத்துறை,மே 21

தூய ஆவியின் பெந்தக்கோஸ்தே விழா வையொட்டிய திருவிழிப்பு ஆராதனை நாளை இரவு கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். பிரதான வீதியிலுள்ள புனித மாட்டீன் குருமட வளாகத்தில் நாளை மாலை 6.30 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 5 மணிவரை வழிபாடுகள் நடைபெறும்.

இறை வார்த்தை, மன்னிப்பு தூயஆவி வரவேற்பு பாடல்களுடன் அதிகாலை திருப்பலியும் இடம்பெறும். (50-135)

விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,மே 21

கிளிநொச்சி, பளைப் பகுதியில் இராணுவ வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.ரஞ்சித்(வயது28) என்வரே தலையில் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (எ-10-207)

வலி.தெற்கு பிரதேச சபையின் உலக புத்தகதின விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் குமாரசுவாமிப் புலவரின் சிலைக்கு கலாபூஷணம் சு.துரைசிங்கம் மலர்மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும், மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகாந்தன், எழுத்தாளர் கோப்பாய் சிவம், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.குமரவேல் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: சுன்னாகம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி கடந்த வாரம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் பிரதேச செயலகக் கொடியினையும், தீவக கடற்படைக் கட்டளை அதிகாரி அஜித் சமரசிங்க தேசியக் கொடியினை ஏற்றுவதையும், விருந்தினர்கள் விளையாட்டு நிகழ்வினைப் பார்வையிடுவதையும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் சம்பியனாகிய துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக வீரருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட விளையாட்டு வீரர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

மாவட்ட படசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டம்; மூன்றாவது வருடமாகவும் மகாஜனாக் கல்லூரி சம்பியன்!

வலிவடக்கு,மே21

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாட சாலை அணிகளுக்கு இடையிலான 17வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தொடர்ந்து மூன்றாவது வருடமாக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சம்பியனாகியது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் ஆரம்பம் முதல் முடிவு வரை மிகவும் விறுவிறுப்பாகப் போட்டி நடைபெற்றது.

பார்வையாளர்களுக்கு எந்த அணி வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் விதத்தில் இந்தப் போட்டி அமைந்தது. மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் சுற்றை அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் 25:15எனும் புள்ளிகள் அடிப்படையில் மகாஜனாக் கல்லூரியை இலகுவாக வென்றது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் இரண்டாவது சுற்றை சிறந்த முறையில் ஆடிய மகாஜனக் கல்லூரியின் வீராங்கனைகள் 25:15எனும் புள்ளிகள் அடிப்படையில் அருணாசலம் வித்தியாலயத்தை வென்று அதிர்ச்சி கொடுத்தது.

யார் வெற்றி பெறுவார்கள்? என்பதைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றில் இரு அணிகளும் வெற்றிக்காகக் கடுமையாகப் போராடின. இறுதியில் மகாஜனாக் கல்லூரியின் வீராங்கனைகள் சாதுரியமாகப் பெற்ற புள்ளிகள் அணியின் வெற்றிக்கு உதவின.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 25:20 எனும் புள்ளிகள் அடிப்படையில் தன்னை எதிர்த்து ஆடிய அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தை வெற்றி கொண்டது.

இவ்வாண்டு மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு வருடமாகும். கரப்பந்தாட்ட அணி தொடர்ந்து மூன்றாவது வருடமாக தனது சம்பியன் பட்டத்தை தக்க வைத்திருப்பதன் மூலம் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது. (6-86)

தேசிய கனிஸ்ட தடகளப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே21

தேசிய கனிஸ்ட மட்ட தடகளப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். மாவட்ட மெய்வன்மை சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இதில் 16வயதின் கீழ், 18வயதின் கீழ், 20வயதின் கீழ், 23வயதின் கீழ் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை இன்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட மெய்வன்மை சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-23)

பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டம்; திருக்குடும்பக் கன்னியர் மடம், மத்திய கல்லூரி சம்பியன்!

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையும், ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் சம்பியனாகின.

கடந்த சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் களமிறங்கின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே மத்திய கல்லூரியின் கை ஓங்கியிருந்தது. இதனால் தன்னை எதிர்த்து ஆடிய சென்.ஜோன்ஸ் கல்லூரியை 54:30 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

கடந்த திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மட அணி தன்னை எதிர்த்து ஆடிய உடுவில் மகளிர் கல்லூரி அணியை 22:20 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது. (6- 23)

தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் யாழ்.வீரர்களுக்கு தங்க, வெள்ளிப் பதக்கங்கள்!

வலி.வடக்கு, மே 20

கொழும்பு சோட்டோகான் கராத்தே-டோ சங்கம் தேசிய மட்டத்தில் நடத்திய கராத்தே சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட வீரர்கள் இருவர் பதக்கங்களை வென்றுள்ளனர்.

கொழும்பு சென்.தோமஸ் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் தேசிய மட்டத்திலான கராத்தே போட்டிகள் இடம்பெற்றன.

இந்தக் கராத்தே போட்டிகளில் யாழ்.மாவட்ட கராத்தே வீரர்கள் பத்துப் பேர் கலந்து கொண்டார்கள்.

யாழ்.மாவட்ட வீரர்களான ஆ.ரஞ்சித் சைலேந்திரகுமார் கறுப்புப் பட்டி திறந்த கராத்தேப் போட்டியில் முதலாம் இடத்தினையும் (தங்கப் பதக்கம்), திறந்த குமிற்றே போட்டியில் இரண்டாம் இடத்தனையும் (வெள்ளிப்பதக்கம்) பெற்றுக்கொண்டார்.

த.சுரேந்திரன் கறுப்புப் பட்டி திறந்த கராத்தேப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று (வெள்ளிப்பதக்கம்) திறந்த குமிற்றோ போட்டியில் மூன்றாம் இடத்தைப் (வெண்கலப் பதக்கம்) பெற்றுள்ளார்.

இவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை இலங்கை கராத்தே சம்மேளனத்தின் அங்கத்தவரான சென்.சேப் அன்ரோடினேஸ் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (6-86)

கற்கோவளம் உதயதாரகையின் உதைபந்தாட்டம்; டயமன்ஸ்- சென்.சேவியர் அணிகள் இறுதியாட்டத்தில்!

யாழ்ப்பாணம், மே 21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகியவற்றின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம், நாளை சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

ஜெயந்த கைத்தொழில் பூங்கா தலைமை நிறைவேற்று அதிகாரியும் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் உரிமையாளருமான பொறியியலாளர் தி.சேந்தன் பிரதம விருந்தினராகவும் பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, கற்கோவளம் இராணுவ பொறுப்பதிகாரி கேணல் விஜயரட்ண, ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர், ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை அதிபர் எஸ்.புஸ்பராசா, பருத்தித்துறைப் பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் அ.வசந்தன், ஜே/406, கிராம உத்தியோகத்தர் எஸ். கௌதமன், வல்லிபுர ஆழ்வார் கோயில் மாகாசபை தலைவர் த.தேவதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-23-236)

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

சென்.சேவியர் விளையாட்டுக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்லாந்தில் வர்த்தக வளாகத்துக்குத் தீ! 23 மாகாணங்களில் இரவில் ஊரடங்கு!!

பாங்கொக்,மே 21

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக், செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களின் இருமாத கால முற்றுகைப் போராட்டத்துக்குப் பின்னர், நேற்று வியாழக்கிழமை இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கியது. பஸ்கள் ஓடின. அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்பின.

அதேவேளை, 15 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக பாங்கொக்கில் இரவில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல, கலவரங்கள் தலை தூக்கிய மற்றும் 23 மாகாணங்களிலும் இரவில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்கு அமுல் மூன்று இரவுகள் நீடிக்கும் என்றும் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு கணிசமான தொகையினர் தங்கியுள்ள ஆலயத்துக்கருகில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என நகரவாசிகள் தெரிவித்தார்கள்.

செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களை இராணுவம் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதையடுத்து, ஏழு ஆர்ப்பாட்டத் தலைவர்கள் இராணுவத்திடம் தஞ்சமடைந்தார்கள்.

சரணடைந்த தலைவர்கள் தம் ஆதரவாளர்களை அமைதியாகத் தத்தம் இல்லத்துக்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தங்களால் பார்க்க முடியாது என்றும், இரத்தக் களியைத்தடுக்கும்பொருட்டே தாங்கள் சரணடைந்துள்ளார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துக்கொண்டார்கள்.

எனினும், தலைவர்கள் சரணடைந்த பின்னரும், ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு சிறுதொகை யினர் 27 கட்டடங்களுக்குத் தீ மூட்டியுள்ளனர். அதேபோல, நேற்று வியாழக்கிழமை 31 இடங்களில் தீ வைக்கப்பட்டுள்ளது என பாங்கொக் ஆளுநரின் பேச்சாளரொருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள் ளார்.

தென் கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய வர்த்தக வளாகமான 'மத்திய உலகு' என்னும் வளாகம் புதன்கிழமை, ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ மூட்டப்பட்டது. இந்த வளாகக் கட்டடம் எச்சமயத்திலும் இடிந்து விழக்கூடிய அபாயம் உண்டு என பொலிஸ் அதிகாரிகள் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்கள்.

பங்குச் சந்தை கட்டடம், மின்வாரிய கட்டடம், வணிக வளாகங்கள் ஆகிய வற்றை போராட்டக்காரர்கள் தீ வைத்து கொளுத்தினர். ஒரு தலைபட்சமாக செய்தி வெளியிடுவதாகக் கூறி அரசு தொலைக் காட்சி நிலைய அலுவலகத்தை, போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கினர். அங்குள்ள கார்களைத் தீ வைத்து கொளுத்தினர். நிலைமை கட்டுக்குள் வராத காரணத்தால், இரவு 8 மணி முதல் காலை 6 மணி வரை பாங்கொக்கில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினவத்ரே பேட்டி ஒன்றில் குறிப்பிடுகையில், ''இராணுவ அடக்குமுறை மக்களிடையே கொந்தளிப்பை தான் ஏற்படுத்தும். ஒரு காலகட்டத்தில், இந்த மக்கள் பயங்கரவாதிகளாக மாற வாய்ப்பு ஏற்பட்டு விடும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வடமேற்கு பாகிஸ்தான் மோதலில் 60 தீவிரவாதிகள் உயிரிழப்பு

பெஷாவர்,மே21

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புற மாநிலத்தில் இராணுவத்துக்கும் தலிபான்களுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 60 தீவிரவாதிகள் பலியானார்கள்.

பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில்தான் தலிபான்கள் பதுங்கியிருக்கிறார்கள். இந்தப் பகுதியிலுள்ள ஸ்வாத் பிரதேசத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து தலிபான்கள் அங்கிருந்து தப்பி வசிரிஸ்தான் பகுதிக்குள் புகுந்தனர்.

அந்த பகுதியிலும் தலிபான் தீவிரவாதிகளை விரட்டி அடிப்பதற்காக அதிரடி இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட் டது.

தென் கொரியா மீது யுத்தம் தொடுப்போம்; வடகொரியா கடும் எச்சரிக்கை விடுப்பு

சியோல்,மே21

தென்கொரியா தனது போர்க் கப்பலைத் தாக்கி 46 சிப்பாய்களைக் கொன்றதாக வடகொரியா மீது நேரடியாக குற்றஞ்சாட்டியுள்ளது. இதையடுத்து தன் மீது பொய்யான குற்றச்சாட்டு கூறும் தென் கொரியா மீது போர் தொடுப்போம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மார்ச மாதம் தென் கொரிய போர்க் கப்பல் மர்மமான முறையில் மூழ்கடிக்கப்பட்டு 46 சிப்பாய்கள் பலியாயினர். இந்த விவகாரத்தில் வட கொரியா மீது அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஆனால், இரு நாடுகளிடையே பல ஆண்டுகளாக நிலவிவரும் பதற்றம் மேலும் அதிகரித்துவிடும் என்பதால் தென் கொரியா இந்த விடயத்தில் இதுவரை அமைதி காத்து வந்தது.

மூழ்கிய கப்பலை மீட்டு ஆய்வு நடத்திய தென் கொரிய இராணுவத்தினர், கப்பலைத் தாக்கிய வட கொரிய ஏவுகணை பாகத்தைக் கண்டெடுத்துள்ளனர்.

இதையடுத்து, வட கொரியா மீது நேரடியாகவே தென் கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. இது குறித்து ஐ.நாவில் முறைப்பாடு கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தவும் தென் கொரியா முடிவு செய்துள்ளது. சர்வதேச அளவிலும் பொருளாதாரத் தடைகளை விதிக்க வைக்கும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளது.

இதையடுத்து தென் கொரியாவுக்கு வட கொரியா, கடும் மிரட்டல் விடுத்துள்ளது.

வரிஏய்ப்பில் கணவர் சிக்கினார் இத்தாலி அமைச்சர் இராஜினாமா

இத்தாலி கலாசாரதுறை அமைச்சர் ஆன்ட்செலா குயெரக்கு தனது கணவரின் வரிஏய்ப்பு விவகாரத்தையொட்டி தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். அவர் கணவர் டோலிஸ் வோஸ்கோபோலோஸ் ஒரு நடிகரும், பாடகருமாவார். பல ஆண்டுகளாக வரி செலுத்தாமல் ரூ 93 கோடிக்கு டோலிஸ் வோஸ்கோபோலோஸ் வரி ஏய்ப்பு செய்துள்ளார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த முறைப்பாடுகள் பத்திரிகைகளில் வெளியாயின.

இதைத் தொடர்ந்து அரசுக்கு தர்மசங்கடமான சூழல் ஏற்படாமல் தடுப்பதற்காக இவரது மனைவி தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். இராஜினாமா கடிதத்தை இவர் பிரதமர் பாபனேந்திருவிடம் கையளித்தார். பிரதமர் இந்த இராஜினாமாவை ஏற்றுக்கொண்டார்.

பர்தாவை கிழித்தெறிந்த பிரான்ஸ் பெண்ணுக்கு அடி

பரிஸ், மே 21

பர்தா அணிந்த பெண்ணைப் பார்த்து கோபமடைந்த பிரான்ஸ் பெண் அதை பிடித்து இழுத்து கிழித்தெறிந்தார்.

பிரான்ஸில் முஸ்லிம் பெண்கள் முழு உடலையும் மறைக்கும் வகையில் பர்தா அணிந்துகொள்வதற்குப் பொதுமக்கள் மத்தியில் முதல் முறையாக எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

நான்டேஸ் நகரிலுள்ள ஒரு கடையில் 60 வயது பெண் சட்டத்தரணி ஒருவர் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தபோது அருகில் ஒரு முஸ்லிம் பெண்ணும் அவர் கணவனும் பொருள்கள் வாங்கிக்கொண்டிருந்தனர். அந்த முஸ்லிம் பெண் முழு உடலையும் மறைக்கும் வகையில் பர்தா அணிந்திருந்தார்.

இதைப் பார்த்து அந்த பெண் சட்டத்தரணி கோபமடைந்தார். பர்தா அணிந்திருந்ததால் அவர் அந்த முஸ்லிம் பெண்ணுடன் சண்டைபோட்டார். பின்னர் அவர் அந்த பெண்ணின் பர்தாவை பிடித்து இழுத்து கிழித்தெறிந்தார்.

இதைத் தொடர்ந்து அவரை அந்தப் பெண்ணின் கணவர் அடித்து உதைத்தார். இதுபற்றி சட்டத்தரணி பொலிஸில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் கணவரை கைதுசெய்தனர். (எ)

அமெ. அழகி தெரிவில் கருஞ்சிக்கல்; கண்டனம்

வாஷிங்டன்,மே 21

அரபு நாட்டைச் சேர்ந்த பெண், முதல் முறையாக அமெரிக்க அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் மதுபான விடுதியில் நடனம் ஆடியவர் என பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இதனால், மிஸ் யு.எஸ்.ஏவிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அரபு நாடுகளில் ஒன்றான லெபனானில் பிறந்தவர் ரீமா பாக்கி(வயது - 24). இவர், தற்போது மிஸ் யு.எஸ்.ஏ. (அமெரிக்கா)வாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் தெரிவுசெய்யப்பட்ட மறுநாளே அங்குள்ள பத்திரிகைகள் இவரை தெரிவு செய்தமை குறித்து கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இவர் ஏற்கனவே மதுபான விடுதியில் ஒவ்வொரு ஆடையாகக் களைந்து முடிவில் நிர்வாணமாக ஆடும் 'போல்' நடனகாரியாக இருந்தவர் என்பதுதான் பத்திரிகைகளின் கோபத்திற்குக் காரணம்.

இதுகுறித்து அங்குள்ள 'டெய்லி மெயில்' உட்பட பல நாளிதழ்களும் படத்துடன் செய்தி வெளியிட்டு கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. இவர், 2007 ஆம் ஆண்டு டெட்டராய்ட் நகரில் நடந்த ஸ்டிரீப் நடனத்தில் பங்கேற்ற படங்கள் தான் வெளியாகியுள்ளன.

இதையடுத்து பத்திரிகைகளின் கண்டனம் குறித்து தெரிவுக் குழு ஆய்வுசெய்து வருகிறது. அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் உலக அழகிப் போட்டியில் அமெரிக்கா சார்பில் ரீமா பங்கேற்பது சிரமமானதாகி விடும். இவ்வாண்டு லாஸ்வேகாஸ் நகரில் நடக்க விருக்கும் அழகிப் போட்டியிலும் அமெரிக்கா சார்பாக ரீமாவை அனுப்புவது இயலாததாகிவிடும்.

மிஸ் யு.எஸ்.ஏயாகத் தெரிவுசெய்யப்பட்ட அவருக்கு வைரம் பதித்த கிரீடமும், நியூயோர்க் நகரில் ஆடம்பர அடுக்கு மாடி குடியிருப்பில் சகல வசதிகளுடன் கூடிய வீடும், உதவித் தொகையும், சம்பளமும் வழங்கப்பட்டுள்ளன. லெபனானில் இருந்து அமெரிக்காவில் குடியேறிய அவரது பெற்றோர், டயர் போன் நகரில் வசித்து வருகின்றனர்.

நியூயோர்க்கில் கார்க்குண்டு வெடித்திருந்தால் மேலும் 4 இடங்களில் தாக்குதல் நடத்தியிருப்பேன்

கைதான பாகிஸ்தான் வாலிபர் தெரிவிப்பு

நியூயோர்க்,மே 21

''நியூயோர்க் நகரில் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்த நான் எடுத்த முயற்சி வெற்றி பெற்றிருந்தால், மேலும் 4 இடங்களில் தாக்குதல் நடத்தி இருப்பேன்'' என்று பாகிஸ்தான் வாலிபரும், தாக்குதல் நடத்த முயன்றதாக கைதானவருமான ஷாசாத் கூறியிருக்கிறார்.

நியூயோர்க் நகரில் ரைம்ஸ் சதுக்கத்தில் கடந்த 1 ஆம் திகதி கார்க்குண்டு மூலம் தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது தோல்வியில் முடிந்தது. இந்தத் தாக்குதலுக்கு முயற்சிசெய்த பாகிஸ்தான் வாலிபர் பைசல் ஷாசாத்தை பொலிஸார் கைதுசெய்தனர். அவர் செவ்வாய்க்கிழமை முறையாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மன்ஹாட்டன் பெடரல் நீதிமன்றத்தில் அவர் ஆஜராகி, தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார். அவர் மீது 5 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தனக்காக வாதாட அவர் சட்டத்தரணி வைத்துக் கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. பொலிஸ் அதிகாரிகள் அவரிடம் ஏற்கனவே விசாரணை நடத்தியபோது, ''நியூயோர்க்கில் கார்க்குண்டு மூலம் தாக்குதல் நடத்த நான் எடுத்த முயற்சி வெற்றி பெற்றிருந்தால், மேலும் 4 இடங்களில் தாக்குதல் நடத்தியிருப்பேன்'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

''நியூயோர்க்கிலுள்ள ரொக்பெல்லர் மையம், கிராண்ட் செண்டிரல் டெர்மினல் கட்டிடம், உலக நிதி மையம், இராணுவ காண்டிராக்டர் சிகோர்ஸ்கியின் கனெக்டிகட் தலைமை அலுவலகம் ஆகிய இடங்களைத் தகர்க்க நான் திட்டமிட்டிருந்தேன்'' என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

சிகோர்ஸ்கிதான் அமெரிக்க இராணுவத்துக்குத் தேவையான ஹெலிக்கொப்டர்களைத் தயாரித்து கொடுப்பவராவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழினம் அழிக்கப்பட்ட வேளையில் இந்தியா தட்டிக்கேட்காது மௌனம்

'நாம் தமிழர்' கட்சி மாநாட்டில் கண்டனத் தீர்மானம்

மதுரை, மே 21

இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டு தமிழினம் அழிக்கப்பட்டபோது, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் அதைத் தட்டிக் கேட்கவில்லை. அவை மௌனம் சாதித்தன. இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு 'நாம் தமிழர் கட்சி' மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாம் தமிழர் இயக்கத்தின் அரசியல் மாநாடு மதுரையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில், நாம் தமிழர் இயக்க ஒருங்கிணைப் பாளரும் இயக்குநருமான சீமான் பேசியவை வருமாறு:-

எங்களிடம் தமிழுணர்வு செத்துப் போகவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே, இந்த மாநாடு நடைபெறுகிறது. உயிரைவிட மேலானதாக மொழியையும், இனத்தையும் நேசிக்கிறோம். உலகின் கடைசித் தமிழன் இருக்கும் வரை ஈழப் போராட்டம் ஓயாது.

இனப்படுகொலைகளை தடுக்காமல் வேடிக்கை பார்த்த ஆட்சியாளர்களை நாம் அதிகாரத்திலிருந்து இறக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்க்ளுக்கு எதிராக சிங்கள அரசு நடத்திவரும் பயங்கரவாதச் செயல்களுக்கு துணைபோவதை இந்தியா நிறுத்திக் கொள்ளவேண்டும். இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களைக் கலைத்து விட்டு, அனைத்து ஈழத்தமிழர்களும் சுதந்திரமாக வாழ தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் சிறையில் உள்ள நளினி, குணங்குடி ஹனீபா போன்றவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

தமிழில் படித்தவர்களுக்கு மட்டுமே, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும், இயற்கை விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிங்களக் கடற்படையினரிடமிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய மத்திய அரசை வன்மையாகக் கண் டிக்கிறோம். இதுவரை சிங்களக் கடற் படையினரின் தாக்குதலுக்கு 450 தமிழக மீனவர்கள் பலியாகியுள்ளனர். அவர்களுக்கு உரிய நட்டஈட்டை பெற்றுத்தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மலேசியாவில் வாழும் 4.5 இலட்சம் தமிழர்களுக்கும், மலேசிய அரசியல் சாசன சட்டத்தின்படி குடியுரிமை வழங்க, இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண் டும். இது தொடர்பாக மலேசிய அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பது உள் ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

சரக்கு ரயில் கண்ணிவெடி வைத்து தகர்ப்பு மாவோயிஸ்டுகளின் அடுத்த தாக்குதல்!

4 மத்திய ரிசேர்வ் பொலிஸார் பலி!

லால்கர், மே 21

மேற்கு வங்காளத்தில் மாவோயிஸ்டுகள் நடத்திய கண்ணிவெடி தாக்குதலில், மத்திய ரிசர்வ் பொலிஸார் 4 பேர் பலியானார்கள். சரக்கு ரயில் தகர்க்கப்பட்டதால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சத்தீஷ்கார் மாநிலத்தில் சமீபத்தில் நடைபெற்ற மாவோயிஸ்டுகள் தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் மற்றும் பொலிஸார் உட்பட 50 பேர் பலியானார்கள்.

இந்த நிலையில், மேற்கு வங்காளம், சத்தீஷ்கார், ஜார்கண்ட் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 2 நாள்கள் முழு அடைப்பு (கடையடைப்பு) போராட்டத்துக்கு மாவோயிஸ்டுகள் அழைப்பு விடுத்து இருந்தனர். தங்களுக்கு எதிரான தேடுதல் வேட்டையை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் இந்த போராட்டம் நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக நடைபெற்றது.

மேற்கு வங்காள மாநிலத்தில் பங்குரா, புரூலியா ஆகிய மாவட்டங்களில், இந்த போராட்டத்தினால் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்தது. முழு அடைப்பு போராட்டத்தின் போது, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் மாவோயிஸ்டுகள் வன்முறையில் ஈடுபட்டனர்.

மேற்கு மிட்னாபூர் மாவட்டத்தில் லால்கர் பொலிஸ் சரகத்திற்கு உட்பட்ட பலுக்பாஷா வனப்பகுதியில் மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையினர் ஒரு காரில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர். அதிகாரிகள் உள்பட 10 வீரர்கள் அந்த மோட்டார்வண்டியிலிருந்தனர்.

தெதுல்தலா என்ற இடத்தில், மாவோயிஸ்டுகள் மறைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி அந்த மோட்டார் வண்டி நொறுங்கியது. இந்த தாக்குதலில், 4 வீரர்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியானார்கள், 2 அதிகாரிகள் உட்பட 3 பேர், படுகாயத்துடன் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

'லைலா'வின் தாக்கத்தால் வெள்ளக் காடாகியது சென்னை

சென்னை, மே 21

சென்னையில் நேற்றுமுன்தினம் முழுவதும் இடைவிடாமல் பெய்த மழையால் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக காட்சி அளித்தது. மின்கம்பங்கள் சாய்ந்ததால் பல இடங்களில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.

அக்னி நட்சத்திர வெயிலால் அவதிப்பட்டு வந்த சென்னைவாசிகளுக்கு, ஆதரவு கரம் நீட்டுவது போல் வந்த 'லைலா' புயல், மழையை கொட்டோ.. கொட்டோ.. வென்று கொட்டவைத்து விட்டது. சென்னை அருகே மையம் கொண்டிருந்த இந்த புயலால் நேற்று முன்தினம் இரவு முதல் சூறைக் காற்றுடன் விடிய, விடிய மழை பெய்தது. நேற்று பகல் பொழுதிலும் மழை தொடர்ந்து நீடித்ததால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

வேப்பேரி, வியாசர்பாடி, புரசைவாக்கம், சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, எழும்பூர், கீழ்ப்பாக்கம், கிண்டி உள்ளிட்ட பல பகுதிகளில் மரங்கள் ஒடிந்து விழுந்தன. உடனடியாக அவைகள் அகற்றப்பட்டன.

பல இடங்களில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு முதல் மின்சாரம் தடைபட்டது. எழும்பூர் குழந்தைகள் ஆஸ்பத்திரி அருகே உள்ள டிரான்ஸ் போர்மரில் நேற்றுமுன்தினம் மரம் முறிந்து விழுந்து தீப்பிடித்தது. உடனடியாக தீயணைப்பு படை வீரர்கள் வந்து தீயை அணைத்தனர். சென்னையில் பல இடங்களில் நேற்றுமுன்தினம் டிரான்ஸ் போர்மர்கள் வெடித்தன. இதனால், அப்பகுதியில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.

முறிகண்டிப் பிள்ளையார் கோயில் பொது ஆலயமாகப் பிரகடனமா?

இந்து மக்களுக்கு வந்துள்ள சந்தேகம்

யாழ்ப்பாணம்,மே21

பூர்வீகமானதும் பிரசித்திபெற்றதும் ஏ-9 வீதியில் பயணம் செய்வோரின் அச்சம் நீக்கும் காவல் தெய்வமுமான முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் பொது ஆலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்று இந்துப் பெருமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்து கலாசாரத் திணைக்களம் இந்த ஆலய நிர்வாகப்பொறுப்பை ஏற்றுள்ளதாக வெளிவந்துள்ள சந்தேகங்களை அடுத்தே இந்தக் கேள்வி பரவலாக இந்து பக்தர்கள் மத்தியில் ஒருவித அச்சத்தையும் சந்தேகத்தையும் எழுப்பி உள்ளது.

பூர்வீகமான இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு பக்கதர்களின் வழிபாட்டுத் தலமாக - மக்களின் போக்குவரத்தில் நம்பிக்கைக்குரிய ஆலயமாக - நீண்ட காலமாக விளங்கி வருகிறது.

வன்னி யுத்தம் முடிவடைந்து மீண்டும் ஏ-9 பாதையூடான போக்குவரத்து ஆரம்பமான பின்னரும் தமது காவல் தெய்வமாக முறிகண்டிப் பிள்ளையாரை வணங்கித் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆலயம் பொது ஆலயமாகப் பிரகடனம்செய்யப்பட்டு, மக்கள் அளிக்கும் அர்ப்பணிப்புகள், காணிக்கைகள் யாவும் அரசுக்கு போய்ச் சேர்கின்றனவா என்ற ஆதங்கம் இந்து மக்கள் இடையே எழுந்துள்ளது.

ஏ-9 பாதையூடாகப் பயணம் செய்யும் இந்து பக்கத்தர்கள் வழங்கும் அன்பளிப்புகள் மற்றும் காணிக்கைகள் மூலமே ஆலயம் வளர்ச்சி கண்டது. அத்தகைய ஆலயத்தை அரசு பொறுப்பேற்பது நியாயமா என்று இந்து மக்கள் கேட்கிறார்கள்.

பணிப்பாளரின் விளக்கம்

இது தொடர்பாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசுடன் தொடர்பு கொண்டு உதயன் கேட்டபோது, அவர் தெரிவித்தவை வருமாறு:-

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தை எமது திணைக்களத்தின் பொறுப்பில் பராமரித்து வருகிறோம் என்பது உண்மையே. அந்த ஆலயத்துக்கு முகாமையாளர், கோயில் ஐயர் ஆகியோரை நியமித்து ஆலயத்தைப் பராமரிக்கிறோம். அந்தப் பிரதேசத்தின் பிரதேசசெயலர், அரச அதிபர் ஆகியோரின் கண்காணிப் பில் ஆலயத் திருப்பணிகளைச் சிறப்பாக முன்னெடுக் கின்றோம்.

அந்தப் பிரதேசத்தில் பொது மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் அவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய பொதுச்சபை உருவாக்கி அவர்களின் பொறுப்பில் நிர்வாகம் கையளிக்கப்படும். அதுவரை எமது திணைக்களத்தின் பொறுப்பில் ஆலய நிர்வாகம் நடைபெறும். ஆலயத்தின் உரிமையாளர்கள் என சிலர் எம்மிடம் வந்தனர். ஆனால் அவர்களால் உரிமையாளர்கள் என நிரூபிக்கும் ஆதாரங்கள் எதுவும் இருக்கவில்லை.

அரசுக்குச் சொந்தமான காணியில் அவர்கள் ஆலயத்தைக் கட்டி கடந்த 30 வருடங்களாக நடத்தியதாகத் தெரிவித் தனர். அதற்கான பொருத்தமான ஆவண ங்கள் அவர்கள் வசம் இருக்கவில்லை.

கடந்த 20 வருடங்களுக்கு முன்பே அப் போது அரச அதிபராக இருந்த தி. இராசநாயகம் காலத்திலேயே இந்த ஆலயம் பொது ஆலயமாக பிரகனம் செய்யப்பட்டுள்ளது - என்றார் அவர்.

இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் கருத்து

இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் இது விடயமாகக் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்து மக்களின் பாரம்பரிய ஆலயத்தை எந்த அறிவிப்பும் இன்றி எப்படி அரசாங்கம் பொறுபேற்க முடியும்? நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து பிரகடனம் ஒன்றை வெளியிட்டே அரசு ஆலயத்தை முறைப்படி பொறுப்பேற்றிருக்க வேண்டும்.

பாரம்பரியமாக, பூர்வீகமாக அந்த ஆலயத்தை பராமரித்து வந்தவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களையும் உள் வாங்கியே ஆலய பரிபாலனத்தை அரசு பொறுப்பேற்றிருக்க வேண்டும் - என்று சுட்டிக்காட்டினர். (ஒ-1)

பாண்டிருப்பு இந்து ம.வி. மீது தாக்குதல்; தனியார் பஸ்ஸும் நொறுக்கப்பட்டது

தமிழ்ப் பிரதேசத்தில் குண்டர்கள் அடாவடித்தனம்

கல்லாறு, மே 21

கல்முனை, பாண்டிருப்பு கிராமத்திலுள்ள இந்து மகா வித்தியலயத்தின் வெளிக்கதவு நேற்று முன்தினம் நள்ளிரவு பன்னிரெண்டு நாற்பது மணியளவில் அடித்து சேதமாக்கப் பட்டது. அத்துடன், இரவு நேரக் கடமையில் இருந்த காவலாளியும் தாக்கபட்டார். அவ்வேளையில் வீதியில் வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் பாடசாலைக்கு முன்பாக தடுத்து நிறுத்தப்பட்டு அதன் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. அதன் சாரதி யும் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப் பட்டது.

பாண்டிருப்பு பிரதான் வீதியில் உள்ள இப்பாடசாலையின் வெளிக்கதவுகள் அடித்து சேதமாக்கப்பட்டன. காவல் கடமையில் இருந்த கல்முனை மாநகர சபையின் தமிழரசுக்கட்சி உறுப்பினர் அ.விஜயரெத்தினம் என்பவர் தடிகளால் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கையில்,

''இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களில் ஒருவரை நான் அடையாளம் கண்டுள்ளேன். இப்படியான விடயங்கள் இன்று ஒற்றுமையாகவுள்ள தமிழ், முஸ்லிம் மக்களை குழப்பிவிட்டு கலவரங்களை தூண்டும் சம்பவங்களாக இருக்குமோ என நான் சந்தேகப்படுகிறேன். இது தொடர்பாக கல்முனை பொலிஸார் தீவிரமாக நடவடிக்கை எடுத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்' - என்றார்.

பஸ் மீதும் தாக்குதல்

அதேவேளை, பாடசாலைக்கு முன்பாக தடுத்து நிறுத்தப்பட்ட பஸ்ஸின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. அத்துடன், அதன் சாரதியும் தாக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சாரதி தெரிவித்தவை வருமாறு:-

சுமார் பதினைந்திற்கும் மேற்பட்டவர்கள் தடிகளுடனும், கற்களுடனும் வந்தனர். இவர்கள் எங்கள் பஸ்ஸை தடுத்து நிறுத்தினர். அத்துடன், 'நீங்கள் எங்கு போகின்றீர்கள்' என அதட்டினர். அவர்கள் முஸ்லிம் நபர்கள் என்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. 'நாங்கள் எனது வாகனத்தை கல்லாற்றுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்' என்று அவர்களிடம் கூறினேன். அப்போதுதான் அவர்கள் என்னைத் தடிகளால் தாக்கினர்; பஸ்கண்ணாடிகளையும் உடைத்தனர் எனத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை அறிந்து பாடசாலைக்கு வருகை தந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பொதுமக்களும் பொலிஸாருக்கு விடயத்தை தெரியப் படுத்தினர். கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது ஒற்றுமையாகவுள்ள தமிழ், முஸ்லிம் மக்களிடையே இவ்வாறான சம்பவங்களால் வீண் முரண்பாடுகளை ஏற்படுத்தி இனக்கலவரங்களால் நன்மையடைய தீய சக்திகள் முயற்சிகின்றன என பொது மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக த.தே. கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் முறைபாடு செய்துள்ளது. அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுபினர் ஹரிஸிடம் கூறியபோது, அவர் 'தற்போது கல்முனை கடற்கரை பள்ளிவாசல் கொடியேற்ற நிகழ்வு இடம்பெறுவதால் அதனைக் குழப்புவதற்கும், தமிழ், முஸ்லிம் மக்களை குழப்பி கலவரத்தை ஏற்படுத்துவதற்கும் சிலர் முயற்சி செய்திருக்கலாம். இவ்விடயம் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொள்ள கல்முனை பொலிஸாருடன் தொடர்பு கொள்கிறேன்' என அரியநேத்திரனிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baraka

உங்கள் நலத்தின் பங்காளி

DIABsol

நீரிழிவு நோயை கட்டுப்படுத்தவும்.
நீரிழிவால் ஏற்படும் உபாதைகளிலிருந்து
பாதுகாக்கவும்.

GarliCHOL

பக்கவிளைவுகள் ஏற்படாமல்
கொலஸ்ரோலை
இயற்கையாக கட்டுப்படுத்தும்.

Slimexol

உடல் நிறையை குறைத்து,
ஆரோக்கியமாக
உடற்கட்டமைப்பை பேணும்.

Black Seed Oil

இருமல், தொண்டை வலி, முடி உதிர்தல்,
இள நரை மற்றும் முதுகுவலி
என்பவற்றிற்கு சிறந்த நிவாரணி.

Manufactured by:
BIO EXTRACTS (PVT) LTD.
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
HOT LINE: 0777 800668

யாழ். விநியோக முகவர்:
SIVA NARMANA POONGA
No: 288, Hospital Road,
Jaffna.
TEL: 0212222567

புதிய எஸ்.பி யாக பத்மதேவா நியமனம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பத்மதேவா நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி முதல் இவர் கட மையைப் பொறுப்பேற்றுள்ளார். முன் னர் யாழ்.மாவட்டப் பொலிஸ் அத்தி யட்சகராகக் கடமையாற்றிய சமரக் கோன் இடமாற்றம் பெற்று தென்னி லங்கை சென்றுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஒ-9)

உடன் வேலைக்கு வேண்டும்

மெசின் மைண்டர்கள் ஆண்கள் இருவர் (02)

புத்தகம் கட்டுநர் பெண்கள் இருவர் (02)

அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

இராசலிங்கம் கஜந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (872073787V) பேர்ஸுடன் கோண்டாவிலுக்கும் ஏழாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஏழு கோயிலடி, ஏழாலை கிழக்கு, ஏழாலை.
T.P. 0770690885

தெய்வீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 21

வட்டுக்கோட்டை பிராத்தி வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7 மணியளவில் 'சொல்லின் சிகரம்' பொன். சுகந்தன் 'கம்பராமாயணம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழி வாற்றி வருகின் றார். (ஒ-9)

படிவம்

க. பொ. த (சா. த) டிசெம்பர் 2010 பரீட்சைக்கு தவிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப் பிப்பதற்கான படிவம் வழங்கப்படும்.
முடிவுத்திகதி : 15.06.2010

பாரதி பதிப்பகம்,
430, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
அன்னை புத்தக நிலையம்
யாழ்ப்பாணம். சாவகச்சேரி

Lap Top விற்பனைக்குண்டு

TOSHIBA, 2.2 Processor Dual Core, 4 GB Ram, 260 GB Hard Drive Built in Camera, DVD Burner கொண்ட
Lap Top விற்பனைக்குண்டு
தொடர்பு: 0773604049, 0776746552

தேவை

வெகு விரைவில் 'நிலவு நட்சத்திரமாய்' ஜொலிக்க இருக்கும்
'MOONSTAR' - இசைக் குழுவுக்கு கலைஞர்கள் தேவை.
★ ஓகன், தபேலா, லீற்கிற்றார், பேஸ்கிற்றார், (B) பாட் வாத்தியங்களை இசைக்கும் திறன் கொண்டவர்கள்.
★ பாடகர்கள், அறிவிப்பாளர், ஆண், பெண் இருபாலாரும் 26.05.2010 இற்கு முன்பு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

30, கம்பஸ் லேன், திருநெல்வேலி. (சி/567769)
பணிப்பாளர்
MOON STAR INSTITUTE.

கேள்வி அறிவித்தல் திகதி மாற்றம்

05.05.2010 திகதிய உதயனில் 22 ஆம் பக்கத்தில் வெளிவந்த அறைக் குளிருட்டிகள், மின் பிறப்பாக்கிகள் பராமரிப்பும் திருத்தமும் என்ற விளம்பரத்தின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி 21.05.2010 என முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 31.05.2010 ஆக மாற்றப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி

2007B பிரிவில் தாதிய மாணவியாகக் கல்வி பயிலும் செல்வி கோகிலா சண்முகநாதன் அவர்களின் அன்புத் தந்தை

நா.சண்முகநாதன்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் தஸ்தாரிப் சமூகம், யாழ்ப்பாணம்.

அம்மன் துணை

மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத் திருப்பணி

அடியார்களே!

மந்திகையம்பதியில் வீற்றிருந்து பல புதுமைகளையும் அற்புதங்களையும் புரிந்து எண்ணற்ற அடியவர்களின் வேண்டுதல்களையெல்லாம் நிறைவேற்றி அருள்பாலிக்கும் அன்னையின் ஆலயம் மிக நீண்ட காலமாக எவ்வித புனரமைப் பும் இன்றி இருந்தது. இது அம்மன் அடியவர்கள் அனைவருக்கும் பெருங்குறை யாக விளங்கியது. தற்போது அன்னையின் திருவருளால் கடந்த 27.11.2009 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் துரித கதியில் செயற்படுத் தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

மூலப்பொருளாகிய அம்மனுக்கு புதிதாக ஆலயம் அமைக்கப்படும் அதே சம யம் விநாயகர், முருகன், நாகதம்பிரான், ஆலடி அம்மன், சனீஸ்வரர், வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் ஆலயம் அமைக்கப்பெற்று வருவதோடு மடப் பள்ளி, வசந்த மண்டபம், சுற்றுப்பிரகாரம், வாசற்கோபுரம் முதலியனவும் அமைப் பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவைகளை நிறைவுசெய்ய ஒரு கோடி ரூபாவுக்கு மேல் தேவைப்படுகின்றது. ஆகவே, இத்திருப்பணிகள் இனிதே நிறைவேற அம்மன் அடியவர்களாகிய தங் களின் பாரிய பங்களிப்பினை வாரி வழங்குமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் திருப்பணிச் சபையினர்

தொடர்புகளுக்கு:

தலைவர்:	செயலாளர்:	பொருளாளர்:
திரு.வீ.சி.மூர்த்தி	திரு.க.நாகேந்திரம்	திரு.கோ.நடராசா
(அரசன்)	அம்பிகை களஞ்சியம்	வீரபத்திரர் கோயிலடி
(திருஸ்ணா வெதுப்பகம்)	மந்திகை	சாரையடி,
மந்திகை		புலோலி.

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை, ந/மு.கண.இல. 7342676

தவறிவிட்டது: 54 - 2/5, புலித் லோரன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 என்னும் முகவரியையுடைய சரவணமுத்து சசூந்தன், என்பவரது தேசிய அடையாளஅட்டை [இல 780790415V) யாழ்ப்பாணத்திற்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0774155621 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பணியாளர் தேவை

பிரபல மின்சாதன, இலத்திரனியல் வியாபார நிறுவனத்துக்கு முன் அனுபவமுள்ள
1. களஞ்சியக் காப்பாளர்
2. களஞ்சிய உதவியாளர்
(பொருள்கள் ஏற்றி இறக்கக் கூடியவராக இருக்க வேண்டும்)

அனுபவமுள்ளவர்கள் நாளை (22.05.2010) சனிக்கிழமை நேரில் சமுகம் தரவும்.
நேரம்: மு.ப. 10 - பி.ப. 1 மணிவரை.
இடம்: யாழ்ப்பாணம் மின்னகம் (அபான்ஸ்)
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

பொன்னுத்துரை சுப்பிரமணியம்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மானிப் பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன் னுத்துரை சுப்பிரமணியம் நேற்று (20.05.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன் னுத்துரை - சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணி யம் மற்றும் இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சுகிர்தா (கனடா), சுதர்சன் (கனடா), சுயந்தன் (அவுஸ்திரேலியா), சுமணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாளன், பிரியதர்சா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிர சன்னா, டஸ்சியா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனும் சாந்தினிதேவி, சந்திரகுமார், விஜயகுமார், பாலச்சந்திரன், உதயகுமார், சாந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும் அன் னம்மா, கமலாம்பிகை, நகுலாம்பிகை (ராசன் மாமி), தவ ராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.
தகவல்: விஜயகுமார்
தொ.பே. 021 490 5802, 0779232661 (விஜயன் - மைத்துனர்).

(98927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாரண அரிசியை விற்றுவிட்டு பால், சீனி வாங்கும் அகதி மக்கள்!

இடம்பெயர்ந்தோர் நிலைமை படுமோசம் என்கிறது 'ரொய்ட்டர்'

கொழும்பு, மே 21

வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மரக்கறி, பால், சீனி, எண்ணெய் போன்றவற்றின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக அம்மக்கள் நிவாரணமாகக் கிடைக்கும் அரிசியை விற்று அவற்றை வாங்குகின்றனர்.

இது தொடர்பாக ரொய்ட்டர் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

போதிய நிதியின்மை காரணமாக பல சர்வதேச அமைப்புகள் முகாம்களுக்கான மனிதாபிமானப் பணிகளை நிறுத்தியுள்ளமையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் பாரிய அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர் என மனிதாபிமானப் பணியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள அதேவேளை, வவுனியா முகாம்களில் இன்னமும் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் உணவு, போதியளவு குடிதண்ணீர் கிடையாமை மற்றும் நோய்கள் போன்றவற்றால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் இன்னமும் 80ஆயிரம் பேர் உள்ளனர். நிதிப் பற்றாக்குறை காரணமாக பல மனிதாபிமான அமைப்புகள் தமது பணிகளைக் கைவிட்டுள்ளமையால் இந்த மக்களின் நிலைமை மோசமடைகின்றது என மனிதாபிமானப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2009ஆம் ஆண்டு நவம்பருக்குப் பின்னர் பல உதவி வழங்கும் நாடுகள் நிதியுதவியை நிறுத்திவிட்டன. இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பை இவ்வருட ஆரம்பத்திலேயே உணரத்தொடங்கி விட்டனர் என மனிதாபிமானப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முகாமுக்கு நாளாந்தம் செல்லும் பணியாளர்கள், போதிய நிதியின்மையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து தெரிவிக்கின்றனர் என நோர்வேயின் அகதிகள் கவுன்ஸிலின் இலங்கைக்கான இயக்குநர் மார்க் கிரெம் விக்கி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முகாமில் தொற்றுநோய்கள் பரவத் தொடங்கியுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒருவருட காலத்துக்கு முன்னர் 4ஆயிரம் குடும்பங்களுக்கு உணவை வழங்கி வந்த 'கிறிஸ்ரியன் எயிட்' போதிய நிதியின்மையால் ஏப்ரல் மாதம் முதல் முகாம்களில் தனது பணியை நிறுத்தியுள்ளது.

இதேவேளை, அதிகம் உதவி தேவைப்படும் பகுதிகளிலேயே தாங்கள் பணிபுரிய வேண்டும். மீளக்குடியேறும் பகுதிகளிலேயே அதிக உதவிகள் தேவைப்படுகின்றன என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஒருவருக்கு 15 லீற்றர் என்ற அளவில் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் தற்போது ஏழு லீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளது.

முகாம்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட முக்கிய வளங்கள் தற்போது மீளக் குடியேறுபவர்களுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் பவுஸர்கள் கூட அப்பகுதிக்கே அனுப்பப்படுகின்றன. ஆசிரியர்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளமையால் முகாம்களில் கல்விநிலையும் பாதிக்கப்பட்டுள்ளது என ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது. (ஓ-சி)

ஆஸ்திரேலியாவுக்குள் ஆள்களை கடத்துவோருக்குக் கடும் தண்டனை

கொழும்பு,மே 21

வெளிநாட்டவர் ஆஸ்திரேலியாவுக்குள் கடத்திவரப்படுவதை தடைசெய்வதற்கு விரிவான அதிகாரங்களைக் கொண்ட புதிய சரத்துகளை ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தச்சட்டப் பிரிவுகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதை ஆஸ்திரேலிய அரசு வரவேற்றுள்ளது.

ஆஸ்திரேலிய சட்டமா அதிபரும் எம்.பியுமான றொபேட் மெக் கிளென்ட், குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் செனேட்டர் கிறிஸ் இவான்ஸ், உள்துறை அமைச்சர் பிரென்டன் ஒகொன்னர் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் கடத்தப்படுவதற்கு எதிரான 2010ஆம் ஆண்டுக்கான இப்புதிய சட்டவிதிகளாவன:-

* ஆள்கள் கடத்தப்படுகின்றமையையும் பாரதூரமான எல்லைப்புற அச்சுறுத்தல்களையும் புலனாய்வு செய்வதற்கு ஆஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வுத் துறையினருக்கு அதிகாரம் வழங்குதல்.

ஆள்கள் கடத்தப்படுவதற்கு நிதி வசதிகளைச் செய்துகொடுப்போர் மற்றும் வேறுவிதமான ஆதரவுகளை வழங்குவோர் தொடர்பாகவும் ஆராய்ந்து தண்டனை வழங்குதல்.

* ஆள்கள் கடத்தப்படுவதற்காக பொருள் ரீதியில் உதவிகள் வழங்கும் புதிய குற்றங்களுக்கு உயர்ந்த பட்சம் 10 வருட சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சத்து 10ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்தல்.

* ஆள்கள் கடத்தல் விடயத்தில் சுரண்டல்கள், உயிராபத்து அல்லது பாரதூரமான இடைஞ்சல் ஏற்படுமிடத்தில் அதிகபட்சமாக 20 வருட சிறைத்தண்டனை அல்லது 2 லட்சத்து 20ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்தல்.

ஆள்கள் கடத்தப்படுவது தொடர்பில் வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் மற்றும் அவர்களின் வலையமைப்புகளிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

மழை குறித்து விவாதிக்க சபாநாயகர் அனுமதி மறுப்பு

கொழும்பு, மே 21

தற்போதைய அடைமழையால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று விசேட விவாதம் ஒன்றை நட்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் அனுமதி கோரியபோது, சபாநாயகர் அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

நாட்டில் தற்போது பெய்துவரும் அடைமழை தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி நேற்று சபையில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றினார்.

அமைச்சரின் அறிக்கையைத் தொடர்ந்து அது தொடர்பில் கருத்துக்கூறிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் உடன் விவாதம் ஒன்று நடத்தப்படவேண்டும் என்று கூறினார்.

அடைமழை நிலைமை தொடர்பாக எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இப்போது பதிலளித்து விட்டார். இன்று இந்த விடயத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சபாநாயகர் கூறினார்.

இதை ஏற்க மறுத்த ஜே.வி.பி. எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க இன்று விவாதம் நடத்துவதே பொருத்தமாக இருக்கும் என்று சொன்னார்.

அடுத்த மாதம் நாடாளுமன்றம் கூடும் போது நீர் வற்றிவிடும். அப்போது இது பற்றிப் பேசி எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் இங்கு இப்போது இருக்கின்றார். ஆகவே, ஏழு மணிநேரம் ஒதுக்கி இதுதொடர்பாக விவாதிப்போம் என்று அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

இருப்பினும், அனுதாபப் பிரேரணையும், வேறொரு விவாதமும் இருப்பதால் இந்த விடயம் தொடர்பாக இன்று விவாதிக்க முடியாது என்றும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுதொடர்பாக முடிவெடுக்கலாம் என்றும் சபாநாயகர் கூறினார். (ஓ-சி)

வெசாக் அலங்கார ஏற்பாடுகளில் குடாநாட்டில் படையினர் மும்முரம்

கொழும்புத்துறை, மே 21

வெசாக் பண்டிகைக் கொண்டாட்ட அலங்கார ஏற்பாடுகள் குடாநாட்டில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

வெசாக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ள யாழ். கோட்டைப் பிரதேசத்தில் அலங்கார வீதி வளைவுகள், பிரமாண்டமான வெளிச்சக் கூண்டுகள், குடில்கள் என்பவற்றை அமைப்பதில் படையினர் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது.

யாழ். ஆரியகுளம் ஸ்ரீ நாகவிகாரைப் பகுதியிலும் அலங்கார வேலைகள் நடைபெற்று வருகின்றன. குடாநாட்டிலுள்ள பிரதான சந்திகள், இராணுவ முகாம்கள் என்பவற்றிலும் பல நவீன வடிவமைப்புகளில் வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்துசெல்லும் ஏதுநிலை தோன்றியதன் பின்னர் எதிர்கொள்ளும் முதலாவது வெசாக் பண்டிகை இது என்பதால் மிகவும் பிரமாண்டமான வகையில் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

வெசாக் அலங்காரங்களில் தேர்ச்சி பெற்ற தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் யாழ்ப்பாணத்தில் படையினருடன் இணைந்து இம்முறை வெசாக் அலங்காரங்களை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்) (ஓ-135)

அனுபவப் பகிர்வும், திட்ட இலக்குகள் தொடர்பான கலந்துரையாடலும்

கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நாளை

யாழ்ப்பாணம், மே 21

எதிர்கால முன்னேற்றத்துக்கான சமூக முன்னெடுத்தல் (லிவ்ற்) திட்டம் 2 இற்காக வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவும் உள்வாங்கப்பட்டு அதற்கான திட்ட இலக்குகளை வரைதல், முன்னைய திட்டத்தில் அடையப்பட்ட இலக்குகளின் அனுபவப் பகிர்வுக் கலந்துரையாடல் -

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலமாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''கெயர்'' சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையுடனும், ''சீடா'' நிறுவனத்தின் நிதியுதவியுடனும் நடைமுறைப்படுத்தப்படும் 'லிவ்ற்' திட்டம் 2 இல் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டு அதன் முதலாவது சுழற்சிக் கால இலக்குகள் நிறைவேற்றப்பட்டன.

இத்திட்டத்தின் இரண்டாம் சுழற்சிக் காலப் பகுதிக்குரிய திட்ட இலக்குகள் அமைக்கப்படவுள்ளன.

முதலாவது காலகட்டத்தில் அடையப்பட்ட இலக்குகளின் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு அதன் ஊடாக இரண்டாவது காலப்பகுதிக்கான திட்ட இலக்குகள் வகுக்கும் நோக்கில் இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என ''கெயர்'' சர்வதேச நிறுவன ''லிவ்ற்'' திட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-10)

இடம்பெயர்ந்த மாணவரின் சாதாரண தரப் பெறுபேறு

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எடுத்த இதுவரை பெறுபேறு கிடைக்காத மாணவர்கள் பரீட்சை எடுத்த பாடசாலை வலயங்களின் பெயர், சுட்டெண், நிரந்தரப் பாடசாலை, பரீட்சைநிலையம் போன்ற விவரங்களை இன்று வெள்ளிக்கிழமை பதிந்து பெறுபேறுகளைப் பெற உதவுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (201)

* * *

யாழ்ப்பாணம், மே 21

தென்மராட்சிப் பிரதேச இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்து கடந்த வருடம் ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சைக்குத் தோற்றி இதுவரை பெறுபேறுகள் கிடைக்காத மாணவர்கள் இன்று காலை 9.30 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மாணவர்கள் தேசிய அடையாள அட்டை இல்க்கம், பரீட்சைச் சுட்டெண், நிரந்தரப் பாடசாலை (வன்னி) தற்காலிகப் பாடசாலை (யாழ்ப்பாணம்) ஆகிய விவரங்களை கொண்டுவரும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-10)

"ஊழியர் சேமலாப நிதி" நடமாடும் சேவை; 2,500 பேர் வரை பயன் பெற்றனர்

உதவித் தொழில் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை மத்திய வங்கியின் சேமலாப நிதிப்பிரிவும் தொழில் திணைக்களமும் இணைந்து நடத்திய இரண்டு நாள்கள் நடமாடும் சேவையின் மூலம் இரண்டாயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர் என யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் தெரிவித்தார்.

நடமாடும் சேவை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கடந்த 19 ஆம், 20ஆம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவை மூலம் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தொழில் தருநர்களும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர் சேமலாப நிதியின் அங்கத்தவர்களும் தமது தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுள்ளனர்.

ஊழியர் சேமலாப நிதிக்கு விவரம் அறிதல், பெயர், கணக்கு இலக்க மாற்றம், அங்கத்துவ மீள் பதிவு, இலத்திரனியல்முறை மூலம் தகவல் சேகரித்தல், வீடமைப்புக் கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு, மீளளிப்புக்களைத் துரிதப்படுத்தல் என்பன இடம் பெற்றன.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் தமது ஊழியர் சேமலாப நிதி விவரங்களை அறிந்து கொண்டனர். 250 இற்கும் மேற்பட்டவர்களின் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இருநூறிற்கும் மேற்பட்ட போலி இலக்கங்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கான புதிய கணக்கு இலக்கம் வழங்கப்பட்டது. நூறிற்கும் மேற்பட்ட பயனாளிகளின் மீளளிப்பு துரிதமாக்கப்பட்டது. இவ்வாறான பல நன்மைகளை மக்கள் இதன் மூலம் பெற முடிந்துள்ளது.

'பி' அத்துடன் 25 பயனாளிகளுக்கு 'பி' அங்கத்துவ விண்ணப்பப் படிவமும் மீளளிப்புக்கான 'கே' விண்ணப்பப்படிவம் 55 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றார். (ஓ-14)

கண்டி - மஹியங்கனை வீதியில் விபத்து; பாடசாலை மாணவன் பலி; 40 பேர் காயம்

வத்துகாமம், மே 21

கண்டி - மஹியங்கனை வீதியில் உடதும்பறை வேகல என்ற இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு பாடசாலை மாணவன் பலியானான். மேலும் 20 மாணவர்கள் உட்பட 40 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. உடதும்பறையிலிருந்து தெல்தெனியா நோக்கி வந்த பாடசாலை வானும், நாவலப்பிட்டியிலிருந்து மஹியங்கனை நோக்கிப் பயணித்த தனியார் வானும் நேருக்கு நேர் மோதுண்டமையால் இந்த விபத்து இடம்பெற்றது. இரு வாகனங்களும் பள்ளத்தில் தூக்கி வீசப்பட்டன.

இதன் காரணமாக 40 பேர் காயமடைந்தனர். படுகாயமுற்ற 23 பேர் அம்புலன்ஸ்களில் கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

காயமடைந்தவர்களுள் 20 பேர் பாடசாலை மாணவர்கள். ஏழு வயதுடைய மாணவன் ஒருவனே இந்த விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இதுதொடர்பாக தெல்தெனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மீது யுத்தக்குற்ற விசாரணை பிரிட்டிஷ் புதிய எம்.பிக்கள் வலியுறுத்து

கொழும்பு, மே 21

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணைகள் இடம் பெற வேண்டுமென பிரிட்டனில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொதுமக்களை நினைவுகூர்ந்து பிரிட்டனில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அந்த நாட்டின் மூன்று பிரதான கட்சிகளினதும் நாடளுமன்ற உறுப்பினர்களும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணைகள் இடம்பெறவேண்டும் என ஆளும் கொன்சவேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கொட் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய லிபரல் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் கியுஸ் ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாயம் மற்றும் ஐ.நாவுடன் இணைந்து இலங்கையில் நீதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டப் பாடுபடப்போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிகழ்வில் உரையாற்றிய தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்திர சர்மா இலங்கை அரசினால் தமிழ் மக்களின் அரசியல் தேவைகளை நிறைவேற்ற முடியாது என்பது கடந்த வருடத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது எனக் கூறினார். (அ-சி)

பிரபாகரன் இருக்கிறாரா? இல்லையா? தமிழர் சுயமாகவே புரிதல் வேண்டும்!

அரியநேத்திரன் எம்.பி. இப்படி விளக்கம்

கொழும்பு, மே 21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கிறாரா? இல்லையா என்பதை தமிழர்கள் சுயமாகவே புரிதல் வேண்டும் - என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

புலிகளின் தலைவரின் மரணம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் சூடு பிடித்துள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

புலிகளின் தலைவர் கடந்த வருடம் மார்ச் 17 ஆம் திகதி கொல்லப்பட்டாரென அரசு முதலில் அறிவித்தது. ஆனால் 18 ஆம் திகதிதான் பிரபாகரன் கொல்லப்பட்டாரென ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் யுத்த முனையில் நின்றவரான முன்னாள் இராணுவம் தளபதி சரத் பொன்சேகாவோ 19 ஆம் திகதி தான் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்கிறார்.

எதிர்காலத்தில் வேறு தரப்பினர் கூட இப்படி வேறு திகதிகளைச் சொல்லக் கூடும். எனவே, பிரபாகரன் கொல்லப்பட்டிருக்கிறாரா? உயிருடன் உள்ளாரா என்பதைத் தமிழ் மக்கள் சுயமாகவே புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (சி)

நாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

117 சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் ரயில்வே திணைக்களத் தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பிரதான வழியில் 98 சேவைகளும், கடலோரப் பாதையில் 12 சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஆர்ப்பாட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்த முற்பட்டபோது இரு தரப்பினர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதல் பல மணிநேரமாக இடம் பெற்று வந்ததை அடுத்து மாணவர்களைக் கலைப்பதற்காக கலகம் அடக்கும் பொலிஸார் அவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், பெரும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. (அ-சி)

'லைலா' ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழை இதுவரை ஆரம்பமாகவில்லை, எனினும் வங்கக்கடலில் உருவான 'லைலா' புயலின் தாக்கமே தற்போது யாழ். குடா நாட்டில் நிலவி வருகின்றது.

இதனால் நேற்று முன்தினம் இரவு 27.0 மி.மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனினும் இதன் தாக்கம் நீடிக்கும் சாத்தியம் காணப்படுகிறது - என்றார்.

அதேவேளை தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்று மழை பற்றியும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும், இதன் போது 25-35 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-16)

சனல் - 4 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிச் சேவை எமது சவாலுக்கு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை. எனவே, இவ்வாறான செயற்பாட்டை அந்தத் தொலைக்காட்சி நிலையம் ஒரு வாடிக்கையாகச் செய்துவருவதாகவே அரசு கருதுகிறது.

முதலில் கேட்ட கேள்விக்கே பதில் அளிக்காதபோது, மீண்டும் மீண்டும் நாம் ஏன் அலட்டிக்கொள்ளவேண்டும்? - என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

யாழ். மேயரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை ஆராய்ந்த நீதி மன்றம், யாழ். மேயர் திருமதி ப. யோகேஸ்வரியை நீதிமன்றத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு ஆஜர் செய்யுமாறும் -

மேயரின் செயலாளரான கு.பற்குணராஜாவின் வாக்குமூலத்தைப் பெற்று அவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறும் - குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்', 'யாழ். தினக்குரல்', 'வலம்புரி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களை, அவற்றில் வெளியான விளம்பரங்களின் மூலப்பிரதிகளுடன் நீதிமன்றத்தில் பிரசன்னமாக இருக்க ஏற்பாடு செய்யுமாறும் நீதிமன்றம் யாழ். குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (ஒ-1-14)

யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜதந்திர சர்ச்சை மாத்திரமே உருவானது.

கதை அத்துடன் முடியவில்லை

எவ்வாறயினும், இந்தக் கதை இத்துடன் முடிவடைந்துவிடவில்லை.

யுத்தக் குற்றங்களுக்கான அமெரிக்கத் தூதுவர் இலங்கை குறித்த தனது அறிக்கையை அடுத்த மாதம் 16ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

பிரஸல்ஸைத் தளமாகக் கொண்ட சர்வதேச நெருக்கடிக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை 'இலங்கையில் யுத்தக் குற்றங்கள்' என்ற அறிக்கையை வெளியிட்டது.

எனினும் எப்போதும்போல இலங்கை அரசு பிடிவாதமாக உள்ளது. அது இதுவரை சட்ட விசாரணைகளையோ, சர்வதேச தடைகளையோ எதிர்கொள்ளவில்லை.

சமீபத்திய அறிக்கைகள் காரணமாக இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை.

ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிகள் அவரது கையைப் பலப்படுத்தியுள்ளன. இதன் காரணமாக சர்வதேச விசாரணைகள் குறித்து அவர் அஞ்சப்போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-சி)

தடுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]ர்வாழ்வு முகாம்களுக்குச் செல்வதற்கும் மக்கள் மீள்குடியேற்றப்படும் பகுதிகளில் பிரசன்னமாகியிருப்பதற்கும் அனுமதி வழங்கவேண்டுமென்பதே அந்த வேண்டுகோள்கள்.

மோதலின் இறுதிக் கட்டத்தில் அப்பகுதிகளில் செயற்படுவதற்கு எமக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டது.

வடபகுதியில் மோதலால் பாதிக்கப்பட்டவர்கள் தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவும் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு எமக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

போர்க்குற்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பல புதிய தகவல்களை வெளியிட்டிருக்கிறார் முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு ஒருவருடம் நிறைவடைந்து விட்டது. பல தியாகங்களுக்கு மத்தியில் யுத்தத்தை நிறைவு செய்து படையினர் சமாதானத்தைக் கொண்டுவந்துள்ளனர்.

ஆனால், யுத்த வெற்றி மக்களின் வெற்றியாக மாற்றப்படவில்லை. யுத்த காலத்தின்போது மக்கள் அனுபவித்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் யுத்தம் காரணமாகக் காட்டப்பட்டது. யுத்தம் முடிவடைந்தால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று மக்கள் நம்பினர். ஆனால், அந்த நம்பிக்கை வீணாகிவிட்டது.

யுத்த காலத்தில் நாடு எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இப்போதும் இருக்கிறது. யுத்தத்துக்காகப் பாடுபட்ட படையினர் கூட இப்போது புறக்கணிக்கப்படுகின்றனர். படை அதிகாரிகள் பலர் காரணமின்றி சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே சிறையிலும் உள்ளனர்.

யுத்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் 'சனல் - 4' வீடியோ காட்சி தொடர்பாகவும் அரசு விசாரித்துப் பார்க்கவேண்டும். இது விடயம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரிந்திருந்தால் அதை நான் மறைக்காமல் வெளிப்படுத்துவேன். குற்றம் செய்த எவரையும் காப்பாற்ற வேண்டிய தேவை எதுவும் எனக்கில்லை.

இறுதிக்கட்ட யுத்தம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. 11ஆம் திகதி நான் சீனா சென்று 17ஆம் திகதி நாடு திரும்பியிருந்தேன்.

19ஆம் திகதி காலை 9.30 மணியளவில்தான் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார். யுத்தம் முடிவடைந்து விட்டதாக ஜனாதிபதி நாடாளுமன்றில் கூறியபோது யுத்தம் முடிவடைந்திருக்கவில்லை.

19ஆம் திகதி நான் தலைமையகத்துக்கு வந்துவிட்டுத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தபோது பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற தகவல் தொலைபேசி வாயிலாக எனக்கு வந்தது. அதை நான் தொலைபேசி மூலம் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினேன். - என்றார். (அ-சி)

புதிதாக இணைய வரும் மாணவர்களுக்கான அனுமதிகள் இன்றும் நாளையும் மட்டும்

இம்மாதக் கட்டணம் இலவசம்

2012 A/L 2011

கலைப்பிரிவு

Tamil: A.K கீர்த்திராஜன் Log: P. கமல்
Geo: N. செல்வா Pol.Sc: A.K. றெயின்சன்
His: A.A. ஆனந்தன், S.சக்தி Hin.Cul: S. ஸ்ரீஸ்
Christ: S.யூட்
Dra: M. சிவரூபன் Agri: S. ஜெயந்தன்
Mat: K. சயந்தன்
Eco: N.B. கஜீதரன்

தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.

NEC
CLOCK TOWER RD, JAFFNA.

New Medi Care Hospital
No. 32, Kachchai Road, Chavakachcheri,
T.P : 021 3734505, 021 4920949

பிரதி சனிக்கிழமைகளில் பி.ப. 2.30 மணிக்கு வைத்தியநிபுணர்
DR. Mrs. N. நாகேந்திரா அவர்கள் நோயாளர்களைப் பார்வையிடவுள்ளார்.
முன்பதிவுகள் மூலம் வைத்திய நிபுணரின் ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

Uduvil Girls' College
Vacancy - Teacher
Subject: Communication & Media Studies
For
G.C.E. Advanced Level Classes
Applications close on 25th May, 2010
Principal, Uduvil Girls' College,
Uduvil Chunnakam.

A/L 2012 கலை, வர்த்தகம்
Tam: திரு. சிவா (சனி, ஞாயி 2 pm)
Log: திரு. கமல் (சனி, ஞாயி 1pm)
H.c: திரு. ஜெயக்குமார் (சனி, ஞாயி10 am)
Geo: திரு. கரன் (சனி, ஞாயி 9 am)
P.s: திரு. செந்தூரன் (சனி, ஞாயி 8 am)
His: திரு. சக்தி (சனி, ஞாயி 12 pm)
Acc: திரு. தவா (சனி, ஞாயி 3 pm)
Eco: திரு. சண் (சனி, ஞாயி 4 pm)
B.st: திரு. யசோ (சனி, ஞாயி 2 pm)
தனிப்பாட அனுமதி உண்டு
(இம்மாதக் கட்டணம் இல்லை)
யூனிவேர்சல்

விற்பனையாகிறது
O/L - படிவம்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் 222-9881
சாவகச்சேரி 227-0003

A/L 2012 வர்த்தகப் பிரிவு
கணக்கீடு பொருளியல் வணிகக்கல்வி
A.P. Pagieerathan NB. கஜீதரன் S. யசோ
(நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்)
NEC

வான் விற்பனைக்கு
பாடசாலைச்சேவை, விற்பனை முகவர்களின் விநியோகத்தேவை, பிரத்தியேக வாடகைச்சேவை என்பவற்றுக்குகந்த TOP UP Condition இல் உள்ள வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0215673818 (98506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.